

# வெளிச்சம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

சித்திரை - வைகாசி, 2004

**விலை: ரூபா 50/=**



பேராசிரியர் கா.சிவத்தம்பி
மூதறிஞர் சொக்கன்
சிற்பி சரவணபவன்
நந்தி
ஞானரதன்
செங்கை ஆழியான்
புதுவை இரத்தினதுரை
த.ஜெயசீலன்
தி.தவபாலன்
தீபா குமரேஷ்
தி.திருக்குமரன்
மலைமகள்
நல்லை அமிழ்தன்
அநாதரட்சகன்
வை.சுந்தரரேசன்

போரும் போராட்டமுமாகிய ஈழத்தமிழர் வாழ்வின் புலப்பாடுகளான வெளிச்சம் வெளியீடுகள்

# வெளிச்சம்

வெளிச்சம் சிறுகதைகள்

செம்மணி

வாசல் ஒவ்வொன்றும்

வெளிச்சம் பவழ இதழ்

முத்தமிழ் விழா மலர் 1991


வெளிச்சம் கவிதைகள்

ஆனையிறவு

முத்தமிழ் விழா மலர் 1992

நாலாம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
முல்லைத்தீவு.

*தமிழீழத் தேசியத்தலைவரின்*
*கருத்துரையுடன்*





மாலிகா
சித்தாந்தன்
வேரற்கேணியன்
நல்லை அமிழ்தன்
புதுவை இரத்தினதுரை
ப.அருள்நேசன்
தி.திருக்குமரன்.

நந்தி
தீபா குமரேஷ்
செங்கை ஆழியான்
மலைமகள்
சொக்கன்
கா.சிவத்தம்பி
ஞானரதன்
தி.தவபாலன்


'சிற்பி' சரவணபவன்

அநாதரட்சகன்
வைரமுத்து சுந்தரேசன்



புகழேந்தி

**அஞ்சலி, புதியவரவு** இன்னும் பலவும்



# தலைவாசல்

இதழ் 86 சித்திரை - வைகாசி 2004



தொகுப்பும் அமைப்பும்
ஆசிரியர் குழு

ஒளிப்படங்கள்
தி.தவபாலன், இயல்வாணன், செந்தோழன், கஜானி, விடுதலைப்புலிகள் புகைப்படப்பிரிவு

ஓவியங்கள்
புகழேந்தி, கோபி, செல்வன், முல்லைக்கோணேஸ்

அச்சுப் பதிப்பு
நிலா பதிப்பகம்
கிளிநொச்சி

வெளியீடு
விடுதலைப் புலிகள்
கலை,பண்பாட்டுக் கழகம்
நடுவப்பணியகம்
தமிழீழம்.

இணையத்தில் வெளிச்சம்
WWW.Velichcham.com

தொடர்புகளுக்கு:
*வெளிச்சம்*
புதுக்குடியிருப்பு-04
முல்லைத்தீவு

*வெளிச்சம்*
விடுதலைப்புலிகள்
கலை,பண்பாட்டுக்கழகம்
மாவட்டச் செயலகம்
பொற்பதி வீதி
கோண்டாவில்
யாழ்ப்பாணம்.

## "கைகளால் சூரியனை மறைக்க முடியாது"

ஒரு தேசத்தின் மீதும் ஒரு சமூகத்தின் மீதும் நிகழ்த்தப்படும் உச்சமான ஒடுக்குமுறையின் குறியீடுதான் படைப்பாளிகள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் மீதான படுகொலைகள்.

ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் முன்னணிக் குரலாக ஒலிப்பவர்கள் கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஊடகவியலாளர்களும்தான். விடுதலைக்கான எழுச்சியின்போதும் இவர்களுடைய குரலும் அதனுடைய வீரியமும் பெரிதாகவே இருக்கின்றது. விடுதலை அரசியலின் தளத்தில் இயங்கும் ஒப்பற்ற மனிதர்களாக இவர்கள் இருக்கின்றார்கள். மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்கி போராட்டத்திற்கு ஊக்கமளித்து தாமும் அப்போராட்டத்துடன் ஒன்றிணைந்தும் நிற்கின்றார்கள். இது ஒடுக்கும் தரப்புக்கு எப்போதும் ஒரு தீராத சவால்தான்.

ஒடுக்குமுறையாளரின் நுட்பமான ஒடுக்குமுறைக் தந்திரோபாயங்களையும் ஏமாற்று வித்தைகளையும் கண்டுபிடிக்கும் நுண்ணிய கருவியாக கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஊடகவியலாளர்களும் இருப்பதுதான் இதற்குக் காரணம்.

எப்போதும் சமூகம் மீதும் மனிதர் மீதும் நேசிப்போடு இயங்கும் இந்தப் போராட்டக்காரர்கள் எத்தகைய சவால்களையும் எதிர்கொள்ளத் தயங்குவதில்லை. ஒரு வகையில் தம் துறைகளினூடாக இயங்கும் போராளிகளாகவே இவர்கள் இருக்கின்றார்கள். சமரசங்களுக்கு அப்பால் விட்டுக்கொடுப்புகளுக்கப்பால் இலட்சியங்களை நோக்கிய பயணமே இவர்களின் இலக்கு. இந்த விடுதலைப் பயணிகளை குறிவைத்து அழிப்பதன் மூலம் ஒடுக்குமுறைக் கருவியை மிக ஆழமாக ஒடுக்குதலுக்குள்ளாகும் மக்களிடையே பாய்ச்சிவிடலாம் என்பது ஒடுக்குவோரின் கணிப்பு. படுகொலைகளின் மூலம் அதிர்ச்சியை ஏற்படுத்தி சமூகத்தை உறைய வைத்துவிடலாம் என்பது அவர்களுடைய தீராத கனவு. ஆனால் இது எப்போதுமே அவர்களுக்கு சிதையும் கனவுதான்.

உலகெங்கும் விடுதலைக்காகப் போராடும் சமூகங்களிலும் தேசங்களிலும் கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஊடகவியலாளர்களும் படுகொலை செய்யப்பட்டுத்தான் இருக்கின்றார்கள். அதை மீறி மக்கள் எழுச்சியும் விடுதலையும் நிகழ்ந்தேயிருக்கிறது. இன்னும் வீச்சுடன் படைப்பாளர்களும் ஊடகவியலாளர்களும் முன்னணியில் நின்று போராடியிருக்கிறார்கள். இது வரலாற்று உண்மை. எங்களுடைய போராட்டத்திலும் ஊடகவியலாளர்களும் படைப்பாளிகளும் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். சிங்களப் பேரினவாதம் தன்னுடைய கனவை வெறியாக்கி இதைச்செய்திருக்கிறது.

வாழ்வைச் சுற்றிவளைத்து உரிமைகளைப் போருக்குள் தள்ளி மக்களையும் சூழலையையும் இடிபாடுகளுக்குள் அமிழ்த்தியபோது அதற்கெதிராகக் குரல்கொடுத்துப் போராடிய ஊடகவியலாளர்கள் அரசின் கொலை இலக்காகியிருக்கிறார்கள். இனத்தின் உரிமைக்காகப் போராடியவர்கள், எழுது கருவியை மட்டும் கையில் வைத்திருந்தவர்கள் இன்று படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

போர்ச்சூழலுக்குள் யாழ்ப்பாணம் இருந்தபோது நிமலராஜன் இனந்தெரியாதோரால் என்ற போர்வையில் படுகொலை செய்யப்பட்டார். அதேபோல இப்போது தென் தமிழீழத்தில் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசனும் கொல்லப்பட்டிருக்கிறார். இன்னொரு சந்தர்ப்பத்தில் போராளிப் படைப்பாளியான கப்டன் வாமகாந் கொலையுண்டிருக்கிறார்.

ஆனால் இந்தக் கொலைகளை யார் செய்தார்கள் என்பதும் இதற்கு என்ன காரணம், யார் பின்னணி என்பதும் கூட மக்களுக்கு நன்கு தெரியும். இக்கொலைகளுக்கும் இந்த நீதியற்ற செயலுக்கும் அரசு பொறுப்பேற்க மறுத்தாலும் அந்தப் பொறுப்பு அரசையே சேரும். நீதியற்ற அரசிடமிருந்து , திரைமறைவில் எப்போதும் தமிழ் மக்களுகளுக்கு எதிர்மறையாகவே இயங்கிவரும் விரோதிகளிடமிருந்து இவற்றுக்கான பதிலையோ நீதியையோ யாரும் எதிர்பார்க்கப்போவதில்லை. ஆனால் வரலாற்றில் தக்கதொரு பதிலையும் நியாயத்தையும் நாங்கள் எமது போராட்டத்தின் மூலம் வழங்கியே தீருவோம்.

# மாலிகா கவிதை

ஐயோ வேண்டாம் ஆளைவிடு.
எனக்கிப்போ வேண்டுவதெல்லாம்
மனிதவாடையற்ற ஒரு வெளி.
இல்லையேல் ஒரு வயல்,
குறைந்தது ஒரு தெரு
சும்மா உலாத்தத்தான்.
ஆட்களும் ஆரவாரங்களும்
ஏனோ அலுத்துவிட்டது.
இருப்பது,
கதைப்பது,
சிரிப்பது.
எத்தனை காலத்துக்கென்றுதான்
இவையே நானாவது?
அவிந்து போனது நெஞ்சு.
பூவோடு மணிக்கணக்காகப் பேசலாம்
ஒரு பொல்லாப்பும் இல்லை.
நாயோடு நாட்கணக்காகப் பேசலாம்
எந்தப் பிரச்சினையும் எழாது.
மனிதர்களுடன் பேசுவோமெனில்
முகமூடி,
உருமறைப்புச் செய்த வார்த்தைகள்,
சிரிப்பது போன்ற பாவனை
இவற்றுடனல்லவா இருக்கின்றனர் முன்னால்
எப்படிப் பேசலாம் இவர்களுடன்?
பேசலாம்;
எனக்கும் வேண்டும் முகமூடி,
உருமறைப்புச் செய்த வார்த்தைகள்,
சிரிப்பது போன்ற பாவனை
வேண்டுமா இந்த வதை?
ஐயோ வேண்டாம் ஆளைவிடு.
ஒரு வெளி,
ஒரு வயல்,
குறைந்தது ஒரு தெரு வேண்டும்
சும்மா உலாத்தத்தான்.
□□



புகழேந்தி

“எமது போராட்டம்
கல்விக்குக் கவசமாக
இருப்பது போல
கல்வியும் எமது போராட்டத்திற்கு
காப்பரணாக நிற்கவேண்டும் ”



"தாயக விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும், கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக் குக் கவசமாக இருப்பது போலக் கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். எமது விடுதலைப்போராட்டத்தின் உன்னதத்தை உணர்ந்துகொள்ளும் வகையில் மாணவ சமூகத்திற்கு விழிப்புணர்வை ஊட்டுவது எமது கல்விமான்களின் தேசிய கடமைப் பாடாகும்.


எமது இயக்கம் விடுதலைப்போரை முன்னெடுத்துவரும் அதேவேளை கல்வித்துறையின் மேம்பாட்டுக்காக ஆக்க பூர்வமான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கான அமைப்புக்களையும் கட்டியெழுப்பி வருகிறது."

*(எனது மக்களின் விடுதலைக்காக நூலிலிருந்து)*

யாழ்ப்பாணம் பாரிர்:1

# வேலிப்பொட்டு

செங்கைஆழியான்



கா ரைநகரில் பஸ்சிலிருந்து இறங்கிய என்னை நண்பன் சுரேந்திரன் எதிர்கொண்டு வரவேற்றான். இளம் வயதில் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள் நாங்கள். அவன் யாழ்ப்பாணத்தில் தபால் அதிபராகக் கடமையாற்றி வந்தான். அந்தக் காலத்தில் 'போஸ்ரல் கிளறிக்கல்' எனப் புறம்பான ஒரு பரீட்சை தபால் திணைக்களச் சேவைக்கென இருந்தது. அப்பரீட்சையில் சித்தியடைந்து பணியை ஏற்றதால் எங்களுடன் திறமையாகக் கல்வி கற்ற சுரேந்திரன், கனகலிங்கம், மார்க்கண்டு ஆகிய மூவரையும் இலங்கைப் பல்கலைக்கழகம் இழந்தது. 'ஜெனரல் கிளறிக்கலில்' சித்தியடைந்ததால் வைத்திலிங்கம் என்றொரு திறமைசாலியையும் அது இழக்க நேர்ந்தது. இந்தக் காலம் மாதிரி பல்கலைக் கழகத்தையும் ஏமாற்றி அங்கு உள்வாரி மாணவராக கல்வி கற்றபடி, உத்தயோகம் பார்க்கிற திணைக்களத் தையும் ஏமாற்றி சம்பளத்தோடு பட்டம் பெறும் வாய்ப்பு அன்றிருக்கவில்லை. இருந்திருந்தால் முன் குறித்த நால்வரும் பட்டதாரிகளாக இருந்திருப்பார்கள்.

சுரேந்திரன் என்னைப் பார்த்துச் சிரித்தான். "போவம் வா" என்றபடி இறங்கிய இடத்தில் வீதியோரம் இருந்த ஒரு படலையைத் திறந்து உள் சென்றான்.

"இதுதான் உன்ர வீடாடா?"

"இல்லையடா. கனதூரம் போகவேணும். வளவுகளுக் குள்ளால பொட்டுகளூடாகப் போனால் கிட்ட."

நான் தொடர்ந்தேன். நாங்கள் முதலில் நுழைந்த வளவுக்காரர் எங்களை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் தம் வேலைகளில் ஈடுபட்டனர். முற்றத்து நாய் தலையை உயர்த்திப் பார்த்துவிட்டு மறுபக்கம் திரும்பிக்கொண்டது. அந்தக் காணியின் அடிவளவை நோக்கி சுரேந்திரன் நடந்தான். வேலியில் ஒருவர் குனிந்து நுழைந்து அப்பால் வெளிப்படக்கூடிய அளவிற்கு ஒரு பொட்டு இருந்தது. அதனூடாக இருவரும் புகுந்தோம்.

## நீயும் எனது வெற்றிடத்தை நிரப்பியிருக்கிற நினது வீணையும்



வெற்றிடத்திலிருந்து வந்தவன் நான்
நீயோ
ஒலி நிரம்பி வழியும் வீணை
நானென பலமுறையும் சொன்னாய்

ஒலிக் குறிப்புக்களில்
எனது பெயரின் அர்த்தங்கள்
ஏதுமே இருக்கவில்லை.

இரவு அந்தரிக்கும் நிசிகளிலெல்லாம்
நான் உன் மடியில் தலைவைத்தபடி
பாடவேண்டும் என்கிறாய்.
எனது வெற்றிடத்தில்
எத்தனையோ பேரின் பாடல்க் குறிப்புகள்.
எதையும் என்னது என்றோ
உனக்கானது என்றோ புளகாங்கிக்க முடியாது.

இன்றைய பேருந்துப் பயணத்தில்
எவளோ ஒருத்தியின் பாடலிசைப்பில்
என் மனதினில்
ஈரமூறி பிறகு காய்ந்து பொருக்குலர்ந்தது.

எல்லோரும் யாருடையதோவான
பாடல்களைப் பாடுகின்றார்கள்.
ஏனோ தெரியவில்லை
எல்லாப் பாடல்களினது ஒலியிலும்
நான் ஈர்ப்புண்டு போய்விடுகிறேன்.

நீ நானெனச் சொன்ன வீணை
எனது வெற்றிடத்தை மட்டுமே நிரப்பிவிடுகிறது.

வெற்றிடத்திலிருந்து
எதுவும் உருவாவதில்லையாமென
பலரும் சொல்லுகிறார்கள்.

எல்லாரும் எல்லாருள்ளும்
வெற்றிடங்களை வைத்திருக்கிறார்கள்,
எனினும் யாருமே ஒப்புக்கொள்வதில்லை.

*சித்தாந்தன்*

கிணற்றடியில் நடுத்தர வயதான பெண் குறுக்குக்கட்டுடன் குளித்துக்கொண்டிருந்தாள். அவள் எங்களைப் பார்த்து பதற்றமடையவில்லை.

"என்ன தம்பி இண்டைக்கு வேலையில்லையே?"

"இண்டைக்கு ஞாயிற்றுக்கிழமை அக்கா. விடுமுறை"

"ஓமோம். உதார் புதாள்?"

"இவன் என்ர பிரெண்ட் அக்கா யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கிறான்."

நாங்கள் இவ்வாறு வளவுகளுக்கூடாக வேலிகளில் காணப்பட்ட பொட்டுகள், கண்டாயங்கள் என்பவற்றின் ஊடாகப் பயணப்பட்டு சுரேந்திரன் வீட்டு வளவிற்குள் புகுந்தோம். பொட்டுகளை இணைத்து ஒற்றையடி வழித்தடமே உருவாகியிருந்தது.

"றோட்டால வாறதெண்டால் ஒரு மணி பிடிக்கும். பத்து நிமிசத்தில இப்ப வந்திட்டம்." சுரேந்திரன் சிரித்தபடி.

"முன்னர் யாழ்ப்பாணத்திலும் இப்படியான பொட்டுக்கள் இருந்தன. எங்கட சமூகம் எப்படி அன்னியோன்யமான உறவுகளைப் பேணின என்பதற்குப் பொட்டுகள் நல்ல உதாரணம். என்னுடைய அக்காமார் தங்கட சொந்தக்கார வீடுகளுக்கு றோட்டுகளால ஒழுங்கைகளால போனதில்லை. ஒரு பொட்டால புகுந்து ஊரையே சுற்றி வந்திருக்கினம். இப்ப காலம் மாறிப்போச்சுது. உறவுகளின் பிடிமானம் அற்றுப் போய்விட்டது. பொட்டுகள் அடைத்து மூடப்பட்டுவிட்டன."என்றேன் கவலையோடு.

எனக்குத் தெரியத்தக்கதாக எனது ஊரில் பொட்டுக்கள் பல இணைப்புக்களாக விளங்கியுள்ளன. வீதியில் ஏறாமலேயே எங்கும் போய் வர முடிந்தது. நான் பத்தாம் வகுப்புப் படிக்கும் வரை எங்கள் வீட்டிற்கும் பக்கத்து அம்மான் வீட்டிற்கும் இடையில் முதலில் ஒரு பொட்டும் பின்னர் அது பெரியதொரு கண்டாயமாகவும் இருந்தது. அம்மான் மகளைக் கட்டிக்கொள்ள என் அண்ணன் மறுத்ததால் இரு குடும்பங்களுக்கும் சச்சரவு கிளம்பிப் பின்னர் பெரும் சண்டையாகிவிட எங்கள் ஐயா ஒருநாள் எவர் தடுத்தும் கேட்காமல் பொட்டைக் கிடுகு வைத்து மறித்தடைத்துவிட்டார். அப்படி அடைத்தும் வடக்குப் பக்க சின்னம்மா வளவுப் பொட்டூடாக அம்மாவுக்கும் மாமிக்கும் இடையில் பேச்சு வாக்கு கொடுக்கல் வாங்கல்

இருந்ததை அம்மானும் ஐயாவும் பல வருடங்களாக அறிந்திருக்கவில்லை.

பொட்டு அடைபட்டு இரு குடும்பங்களும் பிரிந்ததும் எங்கள் அம்மம்மா தனித்திருந்து அழுது புலம்பியது எனக்கு இன்னமும் நினைவிருக்கு.

"அழாதை ஆச்சி. நான் உன்னை மாமி வீட்டிற்கு றோட்டால அழைச்சுப்போறன்" என்று எவ்வளவு நான் எடுத்துக் கூறியும் அம்மம்மா சமாதானப்படவில்லை.

"உறவுகள் அறுந்தால்தான் யாழ்ப்பாணத்தான் பொட்டுகளை அடைப்பான். உனக்கு அது எங்க தெரியப் போகுது. நீ சின்னப்பிள்ளை. உன் கொம்மாவை உன் கொப்பர் பெண் பாத்தது எப்படித் தெரியுமே?"

"எப்படி?"

"தரகர் கந்தையா வீட்டிற்கு ஊர்ப் பொம்பிளைப் பிள்ளையள் பின்னேரங்களில தாயம் போட்டு விளையாடப் போவது வழக்கம். அது பெரிய வளவு. எட்டுக்கோடு விளையாட ஊர்ப்பிள்ளைகள் வரும். ஐயனார் கோவிலடிப் பிள்ளையளும் வருவினமெண்டால் பாரன்."

"அதெப்படி ஆச்சி? நடுவில தார்றோட்டு.."

"தங்கட வீடுகளில இருந்து வருவினம். பொட்டுகளால வந்து றோட்டடியில அங்கால இங்கால பாத்திட்டு கண்ணில எத்துப்பட்ட வளவுப் படலையைத் திறந்து புகுந்திடுவினம். பிறகென்ன..? ஆ என்ன சொன்னன்.. கொம்மாவைக் கொப்பர் பெண் பாத்த கதை. தாயம் போட கொம்மா கந்தையா வீட்டிற்குப் போக.. அங்க கொப்பரைத் தரகர் அழைச்சு வைத்திருந்தார். 'உந்தச் சிவப்பிதான் ஆள்' என்று காட்டியிருக்கிறார். கொம்மாவுக்கு அசுமாத்தா விசயம் விளங்கிப் போச்சுது. பொட்டுகளால புகுந்து ஓடி வந்திட்டா. முகமெல்லாம் வியர்த்து ஒழுகுது. பேச முடியவில்லை.

"பிறகு?"

"பிறகென்ன.. உன்ர கோத்தை பின்னேரங்களில பொட்டுகளூடாகப் போறதும் உன்ர கொப்பர் ஏதாவது சாட்டோட கந்தையர் வீட்டிற்கு வாறதும்... ரெண்டு பேருக்கும் கட்டிவைச்சம்..."

"இந்தப் பொட்டுகளுக்குப் பின்னால பெரிய கதையள் இருக்குது அம்மா..." என்று நான் அம்மாவிடம் ஒருநாள் கேட்டேன்.

"அம்மம்மாவுக்கு என்ன வேலை. இதுகளை உங்களுக்குச் சொல்லுறதுகளைவிட.." என்று அம்மா வெட்கப்பட்டார்.

ஆச்சிக்கு அம்மான் வீட்டுடனான தொடர்பு பொட்டு அடைபட்டதால் துண்டிக்கப்பட்டுப் போனதில் மிகுந்த கவலை.

"இவங்கள் ஒவ்வொருத்தனும் பிடிச்சுராவிகள். விட்டுக்கொடுக்க மாட்டான்கள். அடைச்ச பொட்டை ஒரு நாளைக்கு உன்ர அம்மான் பிய்த்தெறிவான் பார்.."

"எப்ப?"

"நான் மண்டையைப் போடுற அண்டைக்கு" என ஆச்சி திடமாகக் கூறியபடி ஒப்பாரியைக் கேட்ட அம்மான் பொட்டைப் பிய்த்தெறிந்தபடி ஓடிவந்தார். பிரிக்கப்பட்ட பொட்டு பின்னர் வெகுகாலமாக அடைபடவில்லை. மச்சாளைக் கட்டிய கொழும்புக்காரன் 'அறுக்கையில்லை' என்று மதில் கட்டியபோது தான் உறவோடு அடைபட்டது.

"என்னடா பேசாமல் இருக்கிறாய்?" என்று கேட்டான் சுரேந்திரன்.

"இந்தப் பொட்டுகளை எண்ணிக்கொண்டன்.."

"மெய்யா யாழ்ப்பாணத்திற்கென இருக்கின்ற குறிகாட்டிகளில - ஐடண்டிட்டியில இந்தப் பொட்டுகளும் முக்கியமானவை. எங்கட சமூக உறவின் நெருக்கத்தை அவை பிரதிபலித்தன. ரவுண் பக்கங்களில இவை அருகிவிட்டாலும் கிராமப்புறங்களில் அரிதாக இருக்கின்றது. முன்னர்போல அதிக வளவுகளை இணைக்கா விட்டாலும் ஒன்றிரண்டு வளவுகளையாவது இணைக்கின்றன. இந்தப் பொட்டுகள் பற்றி பல சங்கதிகள் ஊரில இருக்குது."

"எங்கட ஊரில ஆடுகால் மணியத்தார் பொட்டுப் புகுந்ததால பட்ட கதை ஒன்றுண்டு."

"சொல்லடா.."

"ஆடுகால் மணியத்தாருக்கு ஊரில ஒரு தொடுப்பு இருந்தது.. அவற்றை வீட்டிலிருந்து ஏழாவது வீடு... நடுச்சாமத்தில மனிசன் பொட்டுகளால அங்க போய் வருவார். மணியத்தாரின்ர மனிசி தன் தமையனிடம் இதைச்சொல்லி அழுதாள். அந்தப் பாவிமனிசனைத் தடுக்க முடியவில்லை. "அண்ணை நீதான் ஒரு வழி பண்ணவேண்டும்."

ஆடுகால் மணியம் கடக்கிற பொட்டுகளில் ஒன்று அவருடைய மனைவியின் தமையன் வீட்டில் இருந்தது.

"ஆர் இந்த நேரத்தில பொட்டால போறது?" என்று கேட்டால் "அது நான்" என்றபடி குரல் தந்துவிட்டுப் போய்விடுவார்கள். ஓரிருமுறை மணியத்தாரும் குரல்


தந்து சமாளித்திருக்கிறார். போகிற வருகிறவர்களிடம் காரணம் கேட்கமாட்டார்கள்.

அமாவாசை தினமொன்றில் ஆடுகால் மணியம் பொட்டால் தொடுப்பு வீட்டிற்குப் போனதைக் கண்ட மச்சான்காரன் தன் வீட்டில் எப்பவும் கட்டிநிற்கிறகடியன் கறுவல் நாயை பொட்டின் பக்கத்துக் கதியாலில் கட்டிவிட்டார். அதுவும் பொட்டின் வாசலில் நிலத்தைக் கிண்டி குளிருண்டாக்கிக்கொண்டு படுத்து விட்டது. கும்மிருட்டில் தொடுப்பு வீட்டிலிருந்து குசியாகத் திரும்பி வந்த ஆடுகால் மணியம் பொட்டுக்குள் நுழைவதற்காகக் குனிந்து கைகளை படுத்திருந்த நாயின்மீது ஊன்ற அது திடுக்கிட்டு மணியத்தாரைக் கவ்வியது. அதற்கு அகப்பட்டது மணியத்தாலின் மூக்குத்தான்.

ஆடுகால் அலறிய அலறலில் ஊரே விழித்துக் கொண்டது.

அரிக்கன் லாந்த ரோடு மச்சான்காரன் ஓடிவந்தான்.

“கவ்வ வேண்டிய இடத்தில கவ்வாது விட்டிட்டுது.” என்று தனக்குள் மச்சான் முணுமுணுத்துக் கொண்டான். “மூக்குப் போனாலும் பரவாயில்லை மனிசன் கிடைச்சாரே” என்று மணியத்தாரின் மனைவி திருப்திப்பட்டுக் கொண்டாள்.



சுரேந்திரன் பெரும் குரலில் சிரித்தான். அடுக் களைக்குள்ளிருந்த மனைவி எட்டிப் பார்த்தாள்.

“ஒண்டுமில்லை அப்பா..” என்றான் சுரேந்திரன்.

“ஒண்டுமில்லாததுக்கே சிரிக்கிறியள்?”

சுரேந்திரன் சொன்னான் “எங்க ஊரில ஒரு சோக சம்பவம் நடந்தது. பிராந்துக் கிழவியின் வளவு பென்னம் பெரியது. புளிய மரங்கள், இலுப்பை மரங்கள் எனச் சோலையாக இருக்கும். புளியம்பழங்கள் சொரிகின்ற காலத்தில் அவற்றினைப் பொறுக்குவதற்கும் இலுப்பைப்பழம் பொறுக்குவதற்கும் அயல் அட்டையில் உள்ள சிலர் விடியமுன்னம் பொட்டுக்குள்ளால வந்திடுவினம். பொட்டுக்களைப் படலையிட்டு கட்டி விட்டும் பயனில்லை. கிழவிக்குப் பொட்டுக்களை அடைக்க விருப்பமில்லை. அதேநேரம் தன் ஒரே வருமானத்தை இழக்கவும் விருப்பமில்லை. ஒருநாள், நாலாம் சாமம் ஓலைப் பெட்டியையும் தூக்கிக் கொண்டு சுப்பரப்பா கிழவியின் வளவிற்குள் பொட்டுக்குள்ளால புகுந்தார். புளியமரத்தடியில் வெள்ளைச் சேலை அணிந்த உயரமான ஒரு உருவம் ஆடிக் கொண்டு நின்றிருந்தது. சுப்பரப்பாவிற்குப் புளியமரத்து முனிகளின் கதைகள் நினைவு வந்தது. ‘ஆ’ என்றலறியபடி நிலத்தில் சரிந்தார். அவ்வளவுதான் ஓடிவந்த பிராந்துக் கிழவி “அது நானடா” என்று எவ்வளவு கூறியும் பயனில்லை. கள்ளரைப் பயமுறுத்த எண்ணிய கிழவியின் திட்டம் முதல்நாளே சோகத்தில் முடிந்தது.

பொறுக்கிறவை பொறுக்கிக்கொண்டு போகட்டும் என்று கிழவி பாராமுகமா இருந்தாலும் சுப்பரப்பாவின் சாவிற்குப் பிறகு ஒருத்தரும் அந்த வளவுக்கை வரவில்லை. புளியமரத்து முனியோடு சுப்பரப்பாவின் ஆவியும் அங்கு உலாவுவதாக வதந்தி பரவிவிட்டது.

“சாப்பிட வாருங்கள்” என்றழைத்தபடி என் நண்பனின் மனைவி வந்தாள்.

சாப்பிடும்போதும் வேலிப்பொட்டுகள் பற்றியே பேசிக்கொண்டோம்.

“பொட்டுகள் ஏன் குறைந்து வருகின்றன?”

“பொட்டுகளுக்குள்ளால சயிக்கில்கள் ஓட முடியாது.”

“இப்ப றோட்டுகள் வசதியாக அமைச்சிடடினம்.”

“பெண்புரசுகள் இப்ப வெளியில் சுதந்திரமாகத் திரிய முடிகிறது.”


“அந்தக் காலத்தில பெரும்பாலும் எல்லாரும் அலுவல்கள் முடிஞ்சால் வீட்டிற்குள் அடங்கிவிடுவர். இப்ப பெண்புரசு ஆண்பிள்ளைகள் எல்லாம் றோட்டிலதானே?”

“இவையெல்லாம் காரணங்கள் என்றாலும் யாழ்ப்பாணத்தானின் விரிந்திருந்த மனம் இன்று ஒடுங்கிச் சுருங்கி சுயநலத்தோடு குறுகிவிட்டதுதான் காரணம். நாங்கள் நாங்களாகவில்லை.”

“இந்தியன் ஆமியும் இலங்கை ஆமியும் யாழ்ப்பாணத்தில வைச்ச பொட்டுகளையும் கவனிக்கவேணும்.” என்றாள் சுரேந்தனின் மனைவி.

“நீர் இப்ப எந்தப் பொட்டைச் சொல்லுகிறீர்?”

“இரண்டையும்தான்.”



# விடைகளுக்கு அப்பால்...

நந்தி

1

அந்த இளம் பெண்கள் இருவரும் எங்கள் மாதர் சங்கத் தலைவிக்கு மிக அருகில் உட்கார்ந்து, தலை போகிற விஷயம்போல், ஏதோ மளமளவென வாதாடினார்கள். ஒரு கல்லூரியின் அதிபராக இருந்து ஓய்வு பெற்ற மூதாட்டியான, எங்கள் தலைவியின் புத்தி சார்ந்த அந்தப் புன்னகை அவற்றை முழுமையாக ஆமோதிக்கிறதா?

பெண்கள் இருவரும் தந்த வினாக்கொத்தைப் படித்து நாங்கள் முப்பது பேரும் விடைகளைப் போட்டுக் கொண்டிருந்தோம். அந்த வினாக்கொத்தின் மூன்றாம் பக்கத்திலுள்ள இரண்டாம் கேள்வியைப் படித்ததும் எனது மனத்தின் மடி கிளறப்பட்டது. கேள்வியோ சின்னஞ்சிறியது, ஒரு கட்டெறும்பு அளவுதான். இனி அதற்கு விடையாக 'ஆம்' அல்லது 'இல்லை' மட்டும்தான் தரவேண்டுமாம். கேள்வியை மீண்டும் படித்தேன்:

*'கலியாணத்தின் முன் உங்களுக்குப் பாலியல் உடலுறவு அனுபவம் உண்டா?'*

மெல்லமாக நாசூக்காக மண்டபத்திலிருந்த எனது சகாக்கனைக் பார்வையிட்டேன். அவர்கள் வீட்டுத் தோட்டத்துப் பூக்கள் போல் பல ரகம், 20 - 50 வயதினர், கலியாணமானவர், பெரும் பாலானோர் கல்கி, குமுதம், விகடன் சகவாச வீட்டுப் பெண்கள், அவர்கள் ஒரு இனமாகச் சேர்ந்து கொள்வார்கள், அவர்கள் மத்தியில் எந்த வயதானாலும் ஒரு சூட்சும இளமை நிலவும், மற்றவர்கள் ஆசிரியைகள், புடவைக் கடை விற்பனையாளர் இருவர், ஒருத்தி காவற்றுறை; ஒருத்தி

ஒரு கால் இல்லாதவள்; பொய்க்காலுடன் நடனமும் ஆடுவாள்; விடுதலை இயக்கத்தில் முன்னம் சேர்ந்த வளாம். அவர்கள் அனைவரும் குறுக்கெழுத்துப் போட்டியில் வெற்றுச் சதுரங்களை நிரப்புபவர்கள் போல உன்னிப்பாக விடைகள் போட்டுக் கொண்டிருந்தனர். அவர்கள் முகங்களில் கூச்சமோ தயக்கமோ சாடை மாடையாகவும் காணப்படவில்லை. அந்தக் கேள்வியை அவர்கள் இன்னும் படிக்கவில்லைப் போலும். படித்தாலும் என்ன, விடை எழுதினாலும் என்ன, எல்லாம் இரகசியம், மிக இரகசியம்தானே. அப்படித்தான் அந்தப் பெண்கள் இருவரும் எங்களுக்குச் சொன்னார்கள்.

இங்கிருந்து பார்க்கும்போது தலைவியுடன் அவர்கள், தாயும் இரு மகள்மாரும் போல் தோன்றினார்கள். பெண்களுக்கு இருபதுக்கும் இருபத்தைந்துக்கும் இடைப்பட்ட வயது இருக்கும். ஒருத்தி ஓரத்தில் நான்கைந்து கறுப்பு நிறப் பொட்டுக்கள் போட்ட சாம்பல் நிறவொயில் சேலை உடுத்திருந்தாள். அவள் ஒரு கோவில் புறா என்றால், மற்றவள் வீட்டுக்கோழி. அவள் உடல் பெருத்த சிநேகிதியிடம் இரவல் வாங்கியது போன்ற ஒரு தொப்பார சர்வார் கமிஸ் சட்டைக்குள் புகுந்திருந்தாள். இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் கற்கும் மூன்றாம் ஆண்டு மாணவிகள் என்று தங்களை அறிமுகம் செய்தார்கள். அவர்களைப் பார்க்கும் போதே பரவசமும் உற்சாகமும் மனத்தில் தொற்றின. தாங்கள் படிக்கும் பாடத்திட்டத்தின் ஒரு தேவையாக இந்த ஆராய்ச்சி செய்வதாகக் கூறினார்கள்: அதாவது கலியாணமான நடுத்தரப் பெண்கள் சம்பந்தமான ஓர் ஆய்வு, அதற்காக எங்கள் பொது அறிவு, தொழில், குடும்பம், விருப்பு வெறுப்பு, நோக்கு போக்கு, இப்படிப் பலதும் பத்தும் அறிவதற்காக பல கேள்விகளைக் கொண்ட ஒரு பத்திரத்தை, இந்த வினாக்கொத்தைத் தயாரித்து வந்திருக்கிறார்கள். எமக்குத் தந்த பத்திரத்தில் நாங்கள் ஒவ்வொருவரும் அதில் உள்ள கேள்விகளுக்கு விடை தரவேண்டும், ***(எல்லாம் இரகசியமாக, மிக இரகசியமாக)*** ஆனால் அநேகமான கேள்விகளுக்கு, 'ஆம்', 'இல்லை', 'தெரியாது' என்று மொட்டையாக விடைகளைக் காட்டத்தான் அனுமதி உண்டு. அதற்கு அப்பால் விடை எழுத இடம் இல்லை. அதற்கெல்லாம் என்ன தேவை என்று அவர்கள் நினைத்தார்களோ, என்னவோ!

வினாக்கொத்திலும் 'மிகவும் அந்தரங்கமானது' என்று தமிழிலும் 'Very Confidential' என்று ஆங்கிலத்திலும் போடப்பட்டிருந்தது. அவர்களில் ஒருத்தி, அந்தப் புறா மேலும் விளக்கினாள். பேசிய விதத்தில் அவளை ஒரு திறமையான பேச்சாளி என்பதிலும் பார்க்கப் பொல்லாத வாயாடி என்பது பொருந்தும்.

"சகோதரிகளே.... உண்மையில் உங்கள் சிலரின் வயதைப் பொறுத்தவரை.... தாய்மார்களே" என்று ஆரம்பித்தாள்.

"இந்த குவெஸ்ரியனரில் (வினாக்கொத்து) இருக்கும் கேள்விகளுக்கு நீங்கள் தரும் உண்மையான, சரியான, நேரான விடைகள்தான் எங்கள் ஆராய்ச்சியின் பெறும தியை நிர்ணயிக்கும் இந்த ஆய்வின் பெறுபேறுகள் நமது பெண்கள் எதிர்நோக்கும் சவால்களைச் சமாளிக்கவும், எமது அரசியல், சமூகவியல், பெண் பாலியல் நடவடிக்கைகளை நிர்ணயிக்கவும் உதவும்" இப்படிப் பெரிசாகப் பேசினாள். எனது பக்கத்திலிருந்த சிநேகிதி, ஒரு சங்கீத ஆசிரியை காதிற்குள் சிரித்தா: 'இவர்கள் இரண்டு பேரும் பரீட்சையில் நல்ல புள்ளிகள் வாங்கி சித்தியடையவும் உதவும். அதைச் சொல்ல மாட்டார்கள். பாவம், எழுதிக்கொடுப்பம்.'

"இனி" என்றாள் புறா, "தாய்மாரே, நீங்கள் நிரப்பித்தரும் விடைகளை வைத்து உங்களை யார் யார் என்று யாரும் இனம் காண இயலாது. நாங்கள் உங்கள் பெயரையோ ஊரையோ கேட்கவில்லை என்பதை அவதானிப்பீர்கள்"



அவள் தன் தோழியைப் பாக்க, அவள் அந்தக்கோழி இப்போ எழுந்து பேசினாள்: "....உங்கள் விடைகள் கொம்பியூற்றரில் சேர்க்கப்படும். அதாவது அந்தக் கணனி, எண்கள் மூலம் செய்தி தரும். ஆகவே மீண்டும் சொல்கிறோம். நீங்கள் பெண்களாக அல்ல, எண்களாகவே எங்களுக்குத் தோன்றுவீர்கள். ஆகவே

உண்மையாக... ஒளிப்பு மறைப்பு இல்லாமல்...'' சிறகடிப்பது போல் அவள் கைகளும் படபடத்தன.

வினாக்கொத்தில் முதல் இரண்டு பக்கங்களைப் படிக்கும்போது, இப்படியான உப்புச்சப்பு இல்லாம கேள்விகளுக்கு ஏன் இவ்வளவு பீடிகை, இதில் என்ன இரகசியம் என்று தோன்றியது ஹாஸ்யமாகவும் சிலருக்கு இருந்திருக்கும். இருக்காதா என்ன?

✦ 'உங்கள் ஆண் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டினீர்களா?'

✦ 'மேற்படி கேள்விக்கு விடை 'ஆம்' என்றால் வலது மார்பையா இடது மார்பையா அதிகம் கொடுத்தீர்கள்?'

✦ 'மேற்படி குழந்தை பெண் என்றால் எந்த மார்பை அதிகம் உபயோகித்தீர்கள்?'

ஒன்றைப் படித்து நானும் வாய்க்குள் சிரித்தேன்.

✦ 'உங்கள் கணவனின் மீசை பற்றிய உங்கள் அபிப்பிராயத்தை பின்வரும் ஐந்து விடைகளில் ஒன்றை மட்டும் காட்டுவதன் மூலம் தெரிவியுங்கள்.'

- ஆலிங்கனமாக அவர் மீசையை விரும்புகிறேன்.
- மீசையை சும்மா விரும்புகிறேன்.
- மீசையை சகிக்கிறேன்.
- மீசையை வெறுக்கிறேன்.
- அதை ஆக்ரோஷமாக வெறுக்கிறேன்.

உம், சிரித்தேன். எனது அவருக்கு மீசை இல்லையே.

இப்படியான எமது வாழ்வைப் ''பாதிக்கும்'' 'நிர்ணயிக்கும்' 'துழாவும்' கேள்விகளுக்குப் பின்புதான் மூன்றாம் பக்கத்தில் அந்தக் கேள்வி. *கலியாணத்தின் முன் பாலியல் உறவு அனுபவம்... உண்டா? இல்லையா?* .... ஐயோ! என்னைப் பொறுத்தவரை அது வெறும் 'ஆம்' தானா? என்ன அனுபவம் அது! ஒரு வார்த்தையில் பொத்தி மூடிவிடக்கூடியதா?

அப்போது எனக்கு ஒன்பது வயது. நான்காம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தேன். எனது வகுப்பிலே உயரத்திலும் பருமனிலும் கூடியது, அதாவது முதலாவது நான்தான். சிலர் என்னைப் பார்த்து 14 -15 வயது மதித்துக் கேட்டதாக ஞாபகம். சீ! பெரிய பிள்ளையாகி விட்டாயா என்றும் என்னைக் கேட்டார்கள். படிப்பில் நடுத்தரம்: சக்கட்டை என்றும் கூறிய வாத்தியார் ஒருவர் உண்டு.




அப்பா ஒரு விவசாயி. முல்லைத்தீவில் அம்மாவுடனும் ஒரு குட்டித்தம்பியுடனும் வசித்து வந்தார். கதைகளில் வரும் ராசா போல காலையில் பரிவாரங்களுடன் வயலுக்குப்போவார். அம்மாவுக்கு ஒரு தூரத்து உறவினர், எனக்கு ஆன்றி என்று சொல்லித் தந்தார்கள், அவரது கணவர் அங்கிள், ஆன்றியின் தாய் (பாட்டி) ஆகியோருடன் நான் யாழ்ப்பாணத்தில் வசித்து ஒரு சிறிய பாடசாலையில் படித்து வந்தேன். அடுத்த வருடம் ஐந்தாம் வகுப்பு, ஸ்கொலஷிப் பரீட்சை உண்டு. அதில் சித்தி அடைந்தால் பெரிய கல்லூரி ஒன்றில் சேர்ந்து படிக்கலாம். தொடர்ந்து பெரிய படிப்புக்கள்: டொக்டர் ஆகலாம். இப்படி எல்லாம் ஆசையாகப் பேசி என்னை யாழ்ப்பாணத்திலிருக்கும் ஆன்றி வீட்டிற்கு அனுப்பினார்கள். அப்பா மட்டுமல்ல அம்மாவும். தம்பி மட்டும் அழுதான். அப்பா ஒவ்வொரு மாதமும் இங்கே வரும் போது ஒரு மூட்டை மொட்டைக் கறுப்பன் நெல் கொண்டு வந்து தருவார்.

அங்கிள் எனக்குத் தினமும் பாடம் சொல்லித் தருவார். அந்தியில்தான் ஒரு மணிநேரம் பாடம். அவர் யாழ்ப்பாண நகர சபையில் ஒரு கிளார்க்காக தொழில் புரிந்தார். வேலையால் வந்ததும் கமுகும் வாழையும் சூழ்ந்த கிணற்றடியில் முகம் கால் அலம்புவார். பக்கத்துப் பிள்ளையார் கோவிலுக்குப் போய்வருவார். கச்சான் கடலை கொண்டு வருவார். சில நாட்களில் வாய் சிவக்கும் சூப்பி இனிப்பு வரும்.

அவர் மிகவும் கெட்டிக்காரர், மூளை நிறைய கணக்கு. அவர் ஏன் வெறும் கிளார்க் ஆனார், ஏன்

ஒரு டொக்டராகவில்லை என்று சிந்திப்பேன். ஒரு வேளை கெட்டித்தனம் 'கிளார்க்கான பின்புதான் வந்ததோ! அல்லது அவருக்குப் பாடம் சொல்லித்தர ஒரு அங்கிள் இருக்கவில்லையோ? அங்கிளினால் நான் படிப்பில் முன்னேறினேன். வகுப்பில் மூன்றாம் ஸ்தானத்தை எட்டிவிட்டேன்.

அங்கிள் எனக்குப் பத்துக் கேள்விகள் தருவார். எட்டுக் கேள்விகளுக்கு மேல் விடைகள் சரியாகப் போட்டால், அவர் முகம் படம் எடுத்து விரிய 'கெட்டிக்காரி' என்பார், அதில் ஒரு அட்டகாசம். ஒரு நாள், ஆன்றி பக்கத்து வீட்டிற்குப் போயிருந்தா. நான் பத்துக் கேள்விகளுக்கும் சரியான விடைகள் எழுதினேன். அன்று பாராட்டு இல்லை, பதிலாக ஒரு விதமான சிரிப்பு அவர் முகத்தில் துடிதுடித்தது; துடிக்கும் வாயால் எனது உதடுகளைக் கவ்வி... விட்டார். எனது உடல் முழுவதும் ஒரு உதறல் பரவியது, உச்சி முதல் உள்ளங்கால்வரை. சிறிது நேரம் மௌனத்தின் அடிமையானேன். இதற்கு முன் ஒருநாள், அவர் பாராட்டுடன் எனது கன்னத்தில் கொஞ்சியது ஞாபகம் வந்தது. அப்போ அது செல்லமாக வேடிக்கையாக இருந்தது. இது வேடிக்கையாகத் தோன்றவில்லை.



"அங்கிள், என்ன இது?"

"இனிமேல் இல்லை", என்றார், "அங்கிள் தானே". மனத்தில் சமாதானம் ஏற்பட்டது; மறதி பிறந்தது.

ஆன்றியின் வயிறு பெருத்துக்கொண்டுவந்தது. எங்கள் பிள்ளையார் கோவிலில் பெண்களின் தவிலும் நாதஸ்வரமும் ஊரிலே ஒரு விஷேசம். தவில்காரி நடப்பது போல் ஆன்றி இப்போ நடந்தா. அந்தி வேளையில் ஆன்ரி சரிந்து படுத்துச் சிறிது நேரம் தனது அறையில் தூங்குவா. அந்த நேரம் அங்கிள் எனக்குப் பாடம் சொல்லித் தருவார். இப்போ எனது உதடுகளை அங்கிள் தனது நாக்கு நுனியால் நனைப்பது எனக்குப் பழக்கமாகிவிட்டது. அது ஆன்றிக்குத் தெரியப்படாத ஒன்று என்று மட்டும் பயத்துடன் உணர்ந்தேன். ஏன் தெரியவேண்டும்? இப்படியாக ஆன்றிக்குத் தெரியப்படாத சில்லறைகள் இன்னும் சில உண்டு.

நான் ஐந்தாம் வகுப்பு ஸ்கொலர்ஷிப் பரீட்சையில் சித்தியடைந்து, ஒரு பெரிய கல்லூரியில் சேர்க்கப்பட்டேன். அங்கிள் படிப்பித்த பயன் அது. நான் அவருக்கு மிகவும் கடமைப்பட்டேன். நான் பாய்ந்து வளர்வதை உடலால் உணர்ந்தேன். அங்கிள் இப் போதும், முன்னம்போல் இல்லாவிடிலும் அவ்வப்போது, 'கணக்குப் புத்தகத்தைக் கொண்டுவா' என்று அழைத்துப் படிப்பித்தார்.

ஒரு நாள்....

அது சில்லறைச் சம்பவம் அல்ல. அன்று ஆன்றி குழந்தை பெறுவதற்காக யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டா. *அன்று....*

நான் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் படிக்கும் போது ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. 'சிறுவர் துஷ்பிரயோகம்' என்பது கருத்தரங்கின் விடயம். ஒரு டொக்டர் பேசினார். அவர் பேச்சிலிருந்து, '*அன்று*' எனக்கு நடைபெற்றது பாலியல் வல்லுறவு என்பதை அறிந்து கொண்டேன். டொக்டர் 'பாலியல் வல்லுறவு' பற்றிக் கூறினார். அது எவ்வளவு பொருத்தம்? நினைக்க இப்போதும் வலிப்பதுபோல்... இரத்தம் கசிவது போல்.... ஐயோ!

அதற்கு முன் அங்கிள் செய்தவை எல்லாம், நான் அனுபவித்த 'சில்லறைகள்' எல்லாம், பாலியல் - செக்ஸ் சம்பந்தமானவை என்றும், பாலியல் வல்லுறவின் முன்னோடிகள் என்றும் டொக்டர் கூறியவற்றிலிருந்து தெளிவானது. இவற்றைப் பிள்ளைகள் அறிந்திருந்தால் பாலியல் வல்லுறவிலிந்து தப்புவதற்கு முடியும் என்று டொக்டர் கூறினார். ஆனால்... அந்தக் காலம்... நான் தப்புவது எப்படி? 'அங்கிள்தானே!' நான் அங்கிளுக்கு எவ்வளவு கடமைப்பட்டிருந்தேன். டொக்டர், 'அங்கிள்' பட்டியலில் இன்னும் எத்தனையோ உறவு முறைகளை எடுத்துரைத்தார். அவற்றைக் கேட்கும்போது மனம் அசிங்கத்தில் புழுப்போல் புரண்டது. அந்த உறவுகள்: ஆசிரியர், தலைமை ஆசிரியர், டியூசன் மாஸ்றர், தொழிலதிபர், சாமியார், வீட்டிலே அத்தான், மச்சான், மாமன்.... இப்படியாக ஆண்கள்... ஆண்கள்!

'கலியாணம் முன் பாலுறவு?' - அந்தக் கேள்விக்கு 'ஆம்' என்று விடை அளித்தேன். சரிதானோ! அனுபவமா அது?

2

ஆமாம், நான் டொக்டர் ஆகவில்லை. எமது நாடுபோல் எனது குடும்பமும் அரசியல் - இராணுவ துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியது. முல்லைத்தீவில் அப்பா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். முல்லைத்தீவிலிருந்து நெல் மூட்டைகள் ஆன்றி வீட்டிற்கு வருவது நின்றது. மிக மன வேதனையுடன், அங்கே அம்மாவும் தம்பியும் தங்கள் சோற்றுக்குக் கஷ்டப்பட்ட தாக அறிந்தேன். எனது தம்பி நிவாரணப் பொருளாக அரிசி கொண்டுவரப் பையுடன் கூட்டுறவுச் சங்கக் கடைக்குச் சென்று கியூ வரிசையில் நிற்பானாம்,, பிச்சை! அம்மாவின் கடிதம் படிக்கும்போது இதயம் நொந்தது. எட்டு மாதத்தில் தம்பி சுளகிலே அரிசிமா மேல் நடை பயில்வதை கண்கள் நினைத்தன. சோறும் தண்ணீரும் தந்த எங்கள் வயலும் வானமும் ஏவுகணைகளுக்கும் எரிகுண்டுகளுக் கும் இலக்காகி மயானமாகின. வயல்வரப்புகளுக்கு மேல் இரும்புத் தொப்பிகளில் இலை குழை சூடிய பிசாசுகள் இரவும் பகலும் உலாவினவாம்.

நான் ஆரம்பக் கல்வியை விரைவில் முடித்துவிட்டு கோப்பாய் ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் சேர்ந்தேன். அதன் பின்பு ஒரு பாடசாலையில் ஆசிரியை ஆனேன். அங்கே ஐந்தாம் வகுப்பு மாணவிகள் சிலர் 'அன்று' என்னைப்போல்... என்னைப்போலவே வாளிப்பாக இருந் தார்கள். நான் அவர்களுக்குப் பக்குவமாகப் பாலியலைக் கற்பித்தேன். ஆண் பெண் உறவு பற்றியும், அதன் பிறழ்வு பற்றியும் பயன்படச் சொன்னேன். எனது வகுப்பு மாணவி ஒருத்தியின் தாய், எங்கள் பாடசாலையில் சக ஆசிரியை, ஆச்சி வேஷம் போடும் முப்பத்தைந்து நாற்பது சொச்சம் வயதினர், எனது பாலியல் அறிவுரை விவகாரத்தை அறிந்து அதிபருக்குப் புகார் செய்திருக் கிறனர். அதிபர் என்னை அழைத்து முகம் தொடக்கம் முழங்கால் வரை தாறுமாறாகப் பார்த்தார். 'பிள்ளை களைக் கெடுக்க வேண்டாம்' என்று சுருக்கமாகச் சீறினார். நான் ஒன்றும் பேசாமல் வகுப்பிற்குத் திரும்பி னேன். எண்ணாமல் கொள்ளாமல் எனது சேலையின் கொசுவத்தைத் தட்டிச் சீராக்கிக்கொண்டேன்.

இரண்டு வாரங்கள் கழிந்தன. ஏதோ நான்தான் சொல்லி ஏற்பாடு செய்ததுபோல், வேறு ஒரு கிராமப் பாடசாலையின் தலைமை வாத்தியார் ஒருவர் ஆறாம் வகுப்பு மாணவி ஒருத்தியுடன் 'தகாத முறையில் பழகியதால், ஊராரால் நையப்புடைக்கப்பட்டு, தூரத்துப் பாடசாலைக்கு மாறுதல் பெற்றதாக பத்திரிகைச் செய்திகள் பரபரப்பு ஏற்படுத்தின. எங்கள் பாடசாலை அதிபர் பெண்கள் முகம் நிமிர்ந்து பார்க்காமல் கழிச்சல் நோயுற்ற கோழிபோல் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டு திரிந்தார். ஏதோ தான்தான் அந்தப்பிள்ளை யைக் கெடுத்தவர் போலவும், அடிஉதை வாங்கியது போலவும் அந்த ஆசிரியையும் முன்னம் 'மிஸ்' என்று என்னை அழைத்தவ, இப்போ தங்கச்சி என்றா. நான் தொடர்ந்து பாலியல் பாதுகாப்பு விடயங்களைப் பிள்ளை களுக்குப் படிப்பித்தேன்.

நாங்கள் விடைகள் எழுதிக்கொண்டிருந்த வினாக் கொத்தில் என்னுடன் சமரசம் செய்த இரு கேள்விகள் உண்டு.

'பாலியல் சம்பந்தமாக வளர்ந்த பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதற்கு உங்களுக்குச் சந்தர்ப்பம் உண்டா?'



விடையாக 'ஆம்' போட் டேன்.

'சந்தர்ப்பம் உண்டா னால், நீங்கள் சொல்லிக் கொடுப்பது உண்டா?

'ஆம்' - ஆகா எவ்வளவு சமூக மன நிறைவு!

அந்தப்பெண்கள் புறாவும் பேட்டுக் கோழியும் எங்களை ஆவலுடனும் ஆசுவாசமாக வும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தனர். சங்கத் தலைவி அந்த வினாக்கொத் தைப் படித்துக் கொண்டிருந்தா, விடைகள் எழுதவில்லை. ஆனால் அவவின் முகத்தில் சுயசரிதம் கூத்தாடியது. எங்கள் கற்பின் சுகத்தைப் பரிசோதித்த இன்னும் ஒரு கேள்வி என்னைப் படுக்கை அறைக்குக் கொண்டு சென்றது. அன்று (மீண்டும் ஒரு *'அன்று'*) அவர் இல்லை.

*'கலியாணத்தின் பின் உங்கள் தாம்பத்திய வாழ்வுக்கு அப்பால் பாலியல் உடலுறவு ஏற்பட்டது உண்டா? அதாவது கணவன் அல்லாத ஒருவருடன்.'*

இந்தக் கேள்விக்கும் விடையாக 'ஆம்', 'இல்லை' மட்டும் போடவேண்டும். எனக்கு அந்த இரு பெண்கள் மேல் ஆத்திரம் ஆத்திரமாச் சினம் வந்தது. அனுபவம் இல்லாத அவசரக்காரிகள்! "ஆம்"அல்லது "இல்லை" ஒரு சாதனைச் சிறுகதையை எப்படி இரண்டு எழுத்துக்களில் அல்லது மூன்று எழுத்துக்களில் எழுது வது? ஒரு ஊர்பேர் அறியாத அநாதைக் கவிதை யைக்கூட தொடுக்கமுடியுமா? என்னைப் பொறுத்தவரை அவனுடைய பெயரை மட்டும் கிறுக்கமுடியும் - சுரேஷ்

மூன்று எழுத்து போதுமா?

நான் ஒரு லொறிடிரைவரைக் கலியாணம் செய்தேன். மயில்வாகனம் (மயிலு) என்ற அவர், என்னிலும் பத்து வயதுக்கு மூத்தவர், 'பத்தினி' என்ற விழுமத்தின் ஆண்பால் சிறப்பு அவரின் உரிமை, அவர் பெய்யெனப் பெய்யும் மழை, எமது ஆறு வருட தாம்பத்திய வாழ்வில் நான் உணர்ந்த சத்தியம் அதுவாகும், ஒரு அப்பட்டமான அப்பாவி, தன்னைப்போல்தான் அவனும் இவனும் என்று நம்பும் வெள்ளைப் பிள்ளை, ஆனால் கை அசைவில் தசைகள் பொம்மும் பலசாலி, நள்ளிரவில் வன்னிக் காட்டில் லொறி லடாய் பண்ணினாலும் தானே திருத்தி ஓட்டும் திறம் மெக்கானிக். ஆனால் கொழும்பு ஓட்டம் செல்லும்போது யாரையாவது ஒருவரைத் துணைக்கு அழைத்துச் செல்வார். அவர்களில் ஒருவன்தான் சுரேஷ்.

அன்று, சுரேஷ் அவருடன் கொழும்பு போகவில்லை. வேறு ஒருவர் சென்றார். சுரேஷ் எங்களுக்குத் துணையாக வீட்டில் தங்கினான். இது முதல் தடவை அல்ல. என் கணவனின் சகாக்களில் சுரேஷ் மட்டும்தான் சிலவேளைகளில் இங்கே நிற்பான், வீட்டுக்குத் துணை என்று என்னவருக்கு நிம்மதி. எங்கள் குடும்பம் சிறியது; நான், அவர், எங்கள் ஐந்து வயது மகன் சூரியன், என்னவரின் தாய் சதா இருமிக்கக்கும் அறுபது வயது நோஞ்சி, இருமாத வேளையில் தூங்கினால் கனவும் காணச் சிரமப்படாத என் மாமி, தன் மகனுக்கு ஏற்ற அடுத்த அப்பாவி.

சுரேஷ் என்னிலும் ஐந்து ஆறு வயதுக்கு இளையவன், ஆமாம் ஒரு தம்பி போன்றவன், தாய் தகப்பனுடன் நான்கு சகோதரிகள் கொண்ட குடும்பத்தில் நடுப்பிள்ளை, லொறியுடன் கொழும்பு செல்லாத நாட்களில் கொம்பியூட்டர் படிப்பவன், மற்ற நேரங்களில் ரி.வி போதையில் இருப்பானாம், ஆண் அழகன், பாக்கு நீரிணைக்கு (PALK STRAIT) வடக்கே பிறந்திருந்தால் மாதவன், விஜய் போன்றவர்களுக்குத் திரைகளில் போட்டியாக இருந்திருப்பான், இரவல் தேவையில்லாத குரல் சுத்தம், இப்போதும் என்ன? அவனது கற்பனை உலகில், தான் விரும்பும் நிழல் நாயகிகளுடன் அவனும் தழுவுகிறான் புரளுகிறான், ஊர் ஊராக 'டூயற்'றாக வாய் அசைக்கிறான்... இப்படி அவனுடைய மூத்த அக்கா கூறுவாள், சிரிப்பாள். அவள் என் கோவில் சிநேகிதி, எனது வயதிருக்கும், தம்பியார்போல் முகம், நிலா நிறம், அவனைப்போலவே அவளுக்கும் முழிக்கும் மூக்கு, வர்ணனைக்கு அப்பால் ஒரு சூட்சும வசியம் அவளுடையது. அது அவர்கள் குடும்பத்துக்கு ஒரு கொடையோ?

சுரேஷ் என்றால் எனது மகன் சூரியனுக்கு சொக்லற் ஐஸ்கிறீம் குதூகலம். சுரேஷ் எங்கள் வீட்டில் தங்கும் நாட்களில் அவனுடன்தான் ஹோலில் படுப்பான்; என்னுடன் அல்ல, சிலவேளைகளில் நடுச்சாமத்தில் ஓடி வந்து என்னுடன் படுப்பான். 'அம்மா கரடி வந்தது' என்ற குரல் கேட்கும். மறுபடியும் தூக்கம், நான் அணைத்துக் கொள்வேன், நானும் பாதித்தூக்கத்தில்.

கரடி மட்டும் அல்ல புலி சிங்கம் நாய் நரி ஓநாய்... 'சிலநேரங்களில் சில மிருகங்கள்' வரும்போலும். றயில் பிளேன் ஹெலிகொப்ரர் இவற்றில் வரும். ஈசாப், பஞ்சதந்திர, தென்னாலிராமன் கதைகளின் கருக்களுக்கு ஜீன்ஸ் மாற்று வேடிக்கை நடக்கும். அரசடிப்பிள்ளையார் முன்னால் ஒரு கொம்பியூற்றர், அவர் கையிலே மவுஸ், முருகன் கையிலே ஏ.கே.47... எனக்கு மட்டும் என்ன? சுரேஷ் தங்கும் இரவு சந்தோஷம்தான். அவனுடைய சிறுசிறு கதைகள் கேட்பதற்கு தென்கச்சி கோ.சுவாமிநாதன் ஐயா எங்கள் வீட்டிற்கு வந்ததுபோல. அவன் ஊர்ச்செய்திகளைப் புதினமாக்கிக் கூறுவான், அதற்குள் தத்துவம், வித்தகம், மருத்துவம், அரசியல், போர், பயங்கரவாதம் இருக்கும். முடிவில் ஏப்பம்போல் ஒரு ஹாஸ்யம். 'உனக்கு இரண்டு மூளையெடா' என்பேன். 'அதில் ஒன்று கிறுக்கு'

'அந்த நாள், அந்த அந்தி, அந்த அர்த்தராத்திரி.....'

சூரியன் ஹோலிலே தூங்கிவிட்டான். நானும் சுரேஷும் ரி.வி பார்த்துக்கொண்டிருந்தோம். ஒரு விழல் படம் ஓடிக்கொண்டிருந்தது, தமிழ்ப்படம்தான். காதல் காட்சிகளின்போது இயக்குநர், காதலனையும், 'கமராமன்'னையும் அடக்கமுடியாமல் திண்டாடினார்போல் தோன்றியது, 'கட்' என்ற வார்த்தையையே மறந்துவிட்டார், அல்லது தன்னையே மறந்தாரோ! போதாத பாவத்திற்கு சுரேஷ் அந்தக் காட்சிகளை பார்த்துச் சோடித்து சிங்காரித்து அலட்டிக்கொண்டிருந்தான். உணர்ச்சிவசப்பட்ட கிறிக்கற் மாட்ச் உடன் வர்ணனையாளர்போல். சுரேஷ் என்னுடன் பேசும்போதும் விரசமான வார்த்தைகள், இருண்ட வீட்டு முகட்டில் வௌவால்கள்போல் குடிகொண்டன. எல்லாம் தலைகீழாக; நான் எழுந்துவிட்டேன். 'போய்ப்படு என்றேன்'. சூரியனை ஒரு மெல்லிய கம்பளிப் போர்வையால் போர்த்தினேன். சுரேஷுக்கும் ஒரு கம்பளிப்போர்வை கொடுத்தேன். ரி.வியை நிற்பாட்டினேன். எனது அறைக்குப் போய்விட்டேன். பனிகாலம், ஆனால் நான் போர்ப்பதில்லை; தாவணிபோதும்.

சாமம்போலும் ஒரு நாயும் சத்தமிடவில்லை. என்ன நடந்தது எனக்கு? ஏன் அப்படி உலக்கைபோல் தூங்கினேன்? திடுக்கிட்டு விழித்தபோது எனது இரவிக்கையின் பாதுகாப்பு ஊசிகளில் ஒன்று (SAFETY PIN) கழற்றப்பட்டிருந்தது. தாவணியையும் காணவில்லை. (எங்கே எடி தொலைந்தாய்?) கட்டிலுக்குப் பக்கத்தில் சுரேஷ் நின்றான் இருட்டில் ஒரு கடும் கறுப்பு உருவமாக. கட்டிலில் இருந்து ஆவேசமாக எழுந்தேன் அவன் மூச்சு

என் முகத்தில் காட்டு எருமைபோல் முட்டியது. - 'அக்கா'.... எனது இடது கையால் குலைந்த என் தாவணியைப் பிடித்தபடி, வலது கையால் கடுமையாக அவனை அறைந்தேன், வீமனின் மனைவிக்கு வராத துணிவுடனும் பலத்துடனும். அடி தவறாமல் மூஞ்சியில் விழுந்திருக்கவேண்டும் தடுமாறிச் சுழன்றான். –உம், மயிலுவின் மனைவி நான்!

"போடா போய்ப் படடா... பொறுக்கி வடுவா"

எனது ஏச்சும் மூச்சும் இப்போது பாய்ந்தது.

கிழவி "என்ன பிள்ளை" என்று கேட்கும் ஓசை வந்தது. அதுகூட விழித்துவிட்டது.

"ஒன்றுமில்லை மாமி" என்றேன். அவன் போய்ப்படுத் துவிட்டான்.

நான் சமையலறைக்குச் சென்று காய்கறி வெட்டும் கத்தியை எடுத்துவந்தேன். இந்தக்கத்தி அவர் கொழும்பிலிருந்து கொண்டுவந்தது; உருக்கினால் ஆனது. ஹோலைத்தாண்டிப் போகும்போது கொதிக்கும் உலைபோல் நெஞ்சுக்குள் நடுங்கும் ஓசைகள்: 'துரோகி, நம்பிக்கைத் துரோகி, நன்றிகெட்ட பிசாசு.....'

"அங்காலை வந்தால் துண்டாக்குவேன்" என்றேன், பிள்ளை எழும்புவதற்குமுன் போய்விடு. இனிமேல் என்கண்களில் முழிக்கப்படாது".

நான் படுக்கும்போது தாலியைக் கழற்றித் தலைய ணைக்குக் கீழே வைப்பது உண்டு. கத்தியையும் தலையணைக்குக் கீழே வைத்துவிட்டுப் படுத்தேன்; தாலியுடன் அது. தூக்கம் வரவில்லை. அல்ல சிறிது தூங்கிவிட்டேன்போலும். சூரியன் ஓடிவந்து என் அருகில் படுத்தபோது திடுக்குற்றேன். "அம்மா சுரேஷ் அண்ணா எங்கேயம்மா?" என்று கேட்டான். வெளியே விடிந்துகொண்டிருந்தது.

எனது தோழிகள் தங்கள் வினாக்கொத்துக்களை அந்தப்பெண்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தனர். நான் சற்று தாமதித்துவிட்டேன். பொல்லாத ஞாபகங்கள்! அந்தக் கேள்வி: கலியாணத்தின் பின்பு உங்களுக்குப் பாலியல் அனுபவம் உண்டா? அதாவது கணவருக்கு அப்பால்...

'இல்லை' விடையைச் சுற்றி வட்டமிட்டேன்.

அந்த விடைதான் என் ஆத்மாவின் இரகசியம். ⊖

## குசினி நடுவில் ஒரு வேப்பங்கன்று

ஏழாண்டுகளின் பின்
வந்திருக்கிறார் வீடு பார்க்க.
கிட்ட அணுகாமல்
எட்டத்தில் நிற்கிறார்
நிலவெடிக்கு அஞ்சி.
தெருப்படலை வேலி, கிடுகு
கதியால் எதுவுமில்லை
ஓ வென்று திறந்த
பெரும் வளவில்
பற்றை கொடிகளுக்குள்
பாதி வீடு.
மேலும் சில அடிகள்
முன்னால் வந்தார்.
பாட்டத்தில் விழுந்த
மீதிச் சுவர் உடைவில்
பசுஞ் சோலையாய்
ஆல், அரசு அரிதான
காட்டுச் செடிகள்.
குசினி நடுவில் அழகாய்
தனியொரு வேப்பங்கன்று.
"அதை வளர்த்தெடுக்கலாம்"
அவர் மனதின் கனவு.
வாசலில் வளர்ந்திருந்த
வட்டவட்டத் தேக்கு
வானுயர்ந்த நான்கு
அசோகா மரங்கள்
பத்து வண்ணங்களில்
பூத்துக் குலுங்கிய
போகன் வில்லாக்கள்
செழிப்பாய் இரண்டு
செவ்விளநீர்த் தென்னை
நின்ற சுவடேயில்லை.
இன்று புல்லும் புதரும்.
நெடிதுயர்ந்து பின் வளவில்
நின்ற தென்னைகள் ஏன்
முடிகள் இழந்தன?
பல்லாண்டு வாழும்
பனைகள் ஏன், சரி
பாதியை இழந்தன?
எதிரிப்படை ஏவிய
எறிகணைகளை எதிர்த்து
மோதி மடிந்தன.

வேரற்கேணியன்



# வெளிச்சம் புத்தக அலுமாரி

நூல் அறிமுகப் பகுதிக்கு
படைப்பாளிகள் மற்றும்
வெளியீட்டகங்களிலிருந்து
இரண்டு புத்தகங்கள்
வரவேற்கப்படுகின்றன.
படைப்புகளுக்கான
விமர்சனங்களையும்
எதிர்பார்க்கின்றோம்.

---



**கவிதைகள்**
*த.ஜெயசீலன்*

**வெளியீடு:** அருணன் பதிப்பகம் நல்லூர்

எவர் எப்படிச் சொன்னாலும் எவர் எப்படி நிறுத்தாலும்
என் கவிதை இப்படித்தான் இருக்கும் என்பதில்
என் கவிதை இப்படித்தான் என்னை வெளிப்படுத்தும் என்பதில்
எனக்குத் தெளிவு இருக்கிறது.

முன்னுரையில் *த.ஜெயசீலன்.*

---

**சிறுகதைகள்.**
***செங்கையாழியான்***

**வெளியீடு:** மல்லிகைப் பந்தல், கொழும்பு.



அவ்வப்போது வெளிவந்த ஆசிரியரின் சிறுகதைகளின் தொகுப்பு.

---



**கவிதைகள்**
*கு.வீரா*

**வெளியீடு:** தர்மேந்திரா கலையகம் நிதர்சனம் தமிழீழம்.

புதிய இலக்கிய விளைச்சலுக்கு விதையெறிந்துவிட்டு காத்திருக்கிறது எம் வீரமண். எங்கள் கனவுக்கும் எதிர்பார்ப்புக்கும் இந்த இளைய தலைமுறையே நம்பிக்கை நாற்றங்கால். நாற்றுமேடையில் செழிப்புற்றுள்ள பயிர்களில் ஒருவர் வீரா.

நூலின் முன்னுரையில் ***புதுவை இரத்தினதுரை***

---

**நாவல்.**
***செங்கையாழியான்***

**வெளியீடு:** பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு



அதிகம் அறியப்பட்ட படைப்பாளியின் புதிய வெளியீடு.



**வெளியீடு:** செயல்திறன் அரங்க இயக்கம்,
அருளகம், ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**கூத்தரங்குக்கான தேடல்களும் தெரிவுகளும்**

விலை: ரூ.10/=



**கட்டுரைகள்**
***முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்,***

தைப்பொங்கலின் தொடக்க நிலை பற்றிய சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சொல் ஆய்வுநிலை எவ்வாறு பண்பாட்டு நிலையான ஆய்வுக்கு வழிவகுத்தது என்பது பற்றிய தெளிவை இக்கட்டுரை நல்குமென நம்புகிறோம்.

*நூலின் முன்னுரையிலிருந்து*

**குறுநாவல்.**
***செங்கையாழியான்***

**வெளியீடு:** கமலம் பதிப்பகம்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.



பரிசு பெற்ற குறுநாவல்களின் தொகுப்பு.





**கலை, இலக்கியச் சஞ்சிகை**
***தி.ஞானசேகரன்***

இதழ் 48

**தொடர்புகளுக்கு:**
ஆசிரியர் ஞானம்
19/7, பேராதனை வீதி, கண்டி.
தொலைபேசி: 081-223475

**நினைவுகள்**
***பேராசிரியர் என்.சண்முகலிங்கன்***

**வெளியீடு:** நாகலிங்கம் நிலையம்.
மயிலிட்டி,
தெல்லிப்பளை.



என் அம்மாவின் கதையை எங்கே தொடங்குவேன். எப்படிச் சொல்லிமுடிப்பேன். ஓரிரண்டு பொழுதுகள், ஒருசில வரிக்குள் அடங்கிவிடும் சிறுகதையா எழுதி முடிப்பதற்கு. நீளும் என் மனவெளியின் வியாபகமாய் எல்லையற்று விரியும் அம்மாவின் அன்பு அலைகளை எழுத இப்பிறவி போதுமா?

நூலில் ***பேராசிரியர் என்.சண்முகலிங்கன்.***





**நாவல்.**
***செங்கையாழியான்***

**வெளியீடு:** கமலம் பதிப்பகம்,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

இதுவரை பத்திரிகைகளில் வெளிவராத நாவல்.

# நேர்காணல்

ஈழத்திலக்கியத்தில் 'சிற்பி' என்ற பெயர் 'கலைச்செல்வி'யை அடையாளப்படுத்தும். 'கலைச் செல்வி' என்றால் 'சிற்பி' என்ற பெயர்தான் நினைவில் எழும். அப்படியொரு அடையாளத்தையுடைய சிவசரவணபவன் 1933இல் காரைநகரில் பிறந்தவர். கந்தரோடை சுன்னாகத்தில் வதிபவர். கல்வியியல் முதுகலைமாணிப் பட்டம் பெற்ற இவர், ஆசிரியராக, அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். **கலைச்செல்வி** 1990களில் போராட்டத்தோடிணைந்த வெளியீடான **விளக்கு** ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்தவர். **ஈழத்துச் சிறுகதைகள்** (தொகுப்பாளர்), **நிலவும் நினைவும்** (சிறுகதைத் தொகுதி), **உனக்காகக் கண்ணே** (நாவல்), **சத்திய தரிசனம்** (சிறுகதைத்தொகுதி) ஆகியன இவரது நூல்கள். சிறுகதை, கவிதை, நாவல், விமர்சனம் என படைப்புத் துறையில் இயங்கிவரும் இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் புலமையுடையவர். மனைவி சரஸ்வதி. மூன்று பிள்ளைகள். சுந்தரேஸ்வரன் வங்கி மேலாளர். சாயீஸ்வரன் மருத்துவர். சர்வேஸ்வரன் பொறியியலாளர். சுந்தரேஸ்வரன் படைப்புத் துறையில் ஈடுபட்டுள்ளார். வெளிச்சத்துக்காக சிற்பியை நேர்கண்டோம்.



## 'சிற்பி' சிவசரவணபவன்

நேர்காணலும் படங்களும்
இயல்வாணன்

***ஒரு படைப்பாளியாக, சஞ்சிகை ஆசிரியராக, வெளியீட்டாளராக, கல்வியாளராக பல தளங்களில் இயங்கியவர் நீங்கள். இத்தகையதொரு ஆளுமை உருவாக்கத்துக்குத் துணைநின்ற தங்களின் பின்புலம் பற்றிக் கூறுங்கள்?***

எனது தந்தையார் ஒரு தமிழ் ஆசிரியராக, பாடசாலை அதிபராக இருந்தவர். சமஸ்கிருதத்தில் பாலபண்டித பரீட்சையில் சித்தியடைந்தவர். தமிழில் நல்ல பாண்டித்தியம் பெற்றவர். அவர் ஈழகேசரி, கலைமகள், இந்துசாதனம் முதலிய பத்திரிகை, சஞ்சிகைகளை வாங்குவார். எமது குடும்பச் சூழலில் பாடசாலை முடிந்து வீட்டுக்கு வந்தால் வேறு வேலை எதுவும் இல்லை. ஆகவே, எனது தந்தையாரின் புத்தக அலுமாரியைக் கிண்டிக் கிளறி நூல்களை வாசிப்பதுதான் என்னுடைய ஒரே பொழுது போக்காக இருந்தது.

அதேவேளை என்னுடைய தாய்மாமன் முறை யான கா.வைத்தீஸ்வரக் குருக்கள் இங்கேயிருந்து கல்விகற்றவர். அவர் ஒரு பண்டிதர். யாழ்ப்பாண பல் கலைக்கழகம் அண்மையில் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி, அவரைக் கௌரவித்துள்ளது. தமிழை இலக்கணம் பிசகாது எழுதவேண்டுமென்ற நோக்குடைய அவருடைய தொடர்பும், அவர் படித்த நூல்களைப் படிக்கும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. பன்னிரண்டு வயதிற்குள் இராமாயணத்தை வசன ரூபத்தில் வாசித்து முடித்துவிட்டேன்.

ஈழகேசரி, கலைமகள் ஆகியவற்றில் வெளிவந்த சிறுகதைகளே என்னை அதிகம் கவர்ந்தன. அதனால் நானும் எழுதினால் என்ன என்ற ஆசை சிறுவயதில் வந்தது. எனது எழுத்துக்களும் வாசிக்கப்படவேண்டும், பேரும் புகழும் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமே எனக்கு ஆரம்பத்தில் இருந்தது. எழுத்தினால் பெரும்

> **" மனித வாழ்வை மேம்படுத்துகின்ற ஆற்றல் உடையது இலக்கியம். "**

சாதனையை ஏற்படுத்தும் எண்ணம் இருக்கவில்லை.

நான் கந்தரோடை தமிழ்க்கலவன் பாடசாலையிலும் (தமிழ்க் கந்தையா வித்தியாசாலை) ஸ்கந்தவரோத

யாக் கல்லூரியிலும் படித்தேன். இரு பாடாலைகளிலும் வாரத்துக்கு ஒருமுறை மாணவர் மன்றங்கள் நடைபெற்றன. அதில் தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசவும், எழுதவும், நாடகம் நடிக்கவும் வேண்டிய கட்டாயம் இருந்தது. வகுப்பில் கெட்டிக்காரனாக இருந்ததால் என்னை முன்னுக்கு அழைக்கும் நிலையும் இருந்தது. தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்பித்த பொன்னம்பலம் ஆசிரியர் எனக்குப் பாரதியார் கவிதைகளை அறிமுகப்படுத்தினார். அத்தோடு என்னை ஊக்கப்படுத்தினார். ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் வித்துவான் ஆறுமுகம் எனக்குக் குருவாக இருந்தார். ஒருநாள், பாடலொன்றுக்குப் பொழிப்பு எழுதுமாறு பணித்தார். நான் எழுதிக்கொடுத்ததைப் பார்த்த அவர், 'இதை யார் எழுதியது?' என்றார். நான் பயத்துடன் எழுந்தேன். 'நீ சதாசிவ ஐயருடைய உறவினரா?'எனக் கேட்டார்.'ஆம்' என்றேன். 'அவரைப் போலவே இலக்கண சுத்தமாக எழுதியிருக்கிறாய்?' எனப் பாராட்டினார். இவர்களது ஊக்குவிப்பும் என்னை எழுதத் தூண்டியதெனலாம். கல்கி தனது எழுத்துக ளில் எதையும் தெளிவாகச் சொல்வார். அவ்வாறே நானும் எனது எழுத்துக்களில் தெளிவாக, பூடகமில்லாமல் சொல்லவேண்டுமெனக் கருதினேன்.

*▢▢ எவ்வாறு படைப்புலகத்துக்குள் பிரவேசித்தீர்கள்?*

▢ நான் பிறெப் எஸ்.எஸ்.சி (தற்போதைய ஒன்பதாம் தரம்) படித்துக்கொண்டிருந்தபோது "பழம் பண்பைப்பற்றிப் பகிர்வதிற் பயனில்லை" என்ற கட்டுரையைச் சுதந்திரனில் எழுதினேன். இதிலிருந்து தான் எழுத்துலகில் பிரவேசித்தேன். எனது குடும்பச் சூழலில் க.பொ.த சாதாரண தரத்துடன் வேலையில் சேரவேண்டியதாயிற்று. கொழும்பு சுப்பிறீம் கோர்ட்டில் எழுதுவினைஞராகச் சேர்ந்தேன். அவ்வேளை "மலர்ந்த காதல்" என்ற எனது முதலாவது சிறுகதை சுதந்திரனில் வெளியானது. நான் வேலைபார்த்த இடத்தில் முதலியாராக இருந்த சின்னத்தம்பி என்பவர் இலங்கை வானொலியில் நிகழ்ச்சிகள் வழங்குவதாக அறிந்தேன். நானும் அவ்வாறே செய்ய எண்ணி 'மாணிக்கம்' என்ற பெயரில் சிறுகதை ஒன்றை அனுப்பிவைத்தேன். இலங்கை வானொலியிலிருந்து சிறுகதையை வாசிக்க அழைப்பு வந்தது; வாசித்தேன். முப்பது ரூபா சன் மானம் கிடைத்தது. எனது படைப்புக்குக் கிடைத்த முதலாவது சன்மானம் இதுவே.

*▢▢ சிவசரவணபவன் எவ்வாறு 'சிற்பி' யானார்?*

▢ ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்துக்க ளுக்கு எதிராக எழுதிய அன்றைய எழுத்தாளர்கள், அதனால் ஏற்படும் விளைவுகளுக்குப் பயந்துதான் புனைபெயரை வைத்தனர். ஒரு கட்டுரை ஒன்றை வாசித்தபோது, அதில்பிரபலமான எழுத்தாளர்கள் எல்லோரும் மூன்றெழுத்துக்காரர்கள்தான் என்று எழுதப்பட்டிருந்தது. நானும் ஒரு புனைபெயரை வைக்க எண்ணினேன். முதலாவது கட்டுரையை 'கீதன்' என்ற பெயரில் எழுதினேன். 'சேயோன்' என்ற பெயரிலும் தினகரனில் இரு சிறுகதைகளை எழுதினேன். நான் சென்னை கிறீஸ்தவக் கல்லூரியில் படித்தபோது, அங்கு சேலையூர் தமிழ் மன்றம் என்ற ஒரு அமைப்பு இருந்தது.



அது 'இளந் தமிழன்' என்றொரு கையெ முத்துச் சஞ்சி கையையும் வெளியிட்டது. அம்மன்றத்தில் எனது தொடர்புகள் நெருக்கம் அடைந்து, நான் இளந்தமிழனின் ஆசிரியராகத் தெரிவானேன். அத்துடன் அதை அச்சில் கொண்டுவரவும் தீர்மானிக்கப்பட்டது. அதில் விடயத்தேவை ஏற்படவே இரண்டு கட்டுரைகளை எழுதநேர்ந்தது. 'எனக்கு' என்ற தலைப்பில் நானே எனக்கு ஆலோசனை கூறுவதுபோல ஒரு கட்டுரையை எழுதினேன். நானே ஆதிக்கம் செலுத்துவது போல இருந்ததால் சொந்தப் பெயரில் இல்லாமல் 'சிற்பி' என்ற புனை பெயரில் அக்கட்டுரையை எழுதினேன்; அதுவே நிலைத்து விட்டது. கல்லில் கலைவண்ணம் காண்பது போல் சொல்லில் கலை வண்ணம் காணும் விருப்பமே சிற்பி என்ற பெயரைத் தெரிவுசெய்ததன் நோக்கம்.

*▢▢ ஈழத்துச் சிறுகதைகளைத் தொகுப்பாக்கிய உங்களின் பணி விதந்து கூறப்படுகிறது அவ்வாறான தொரு முயற்சியின் தோற்றுவாய் யாது?*

▢ ஈழகேசரியில் வெளிவந்த சிறுகதைகளில் யாழ்ப்பாணத்து மண்வாசனை இருந்தது. அக்காலத்தில் இரசிகமணி கனக செந்திநாதன் 'கரவைக் கவி கந்தப்பனார்' என்ற பெயரில் ஈழத்துப் படைப்பாளிகளை அவர்களது படைப்புக்களைக் குவிமையப்படுத்தி ஈழகேசரியில் அறிமுகப்படுத்திவந்தார். இது என்னை மிகவும் கவர்ந்தது. பெரும்பாலான கதைகளை நானும் வாசித்தேன்.

இந்நிலையில்தான் இந்தியாவிலிருந்து கல்கி ஆசிரியராக இருந்த சோமு தொகுத்த 'சிறுகதை மஞ்சரி' என்ற நூல் வந்தது. அதில் இலங்கைச் சிறுகதைகள் எதுவும் வரவில்லை. ஏற்கனவே 'அல்லயன்ஸ்' வெளியிட்ட 'கதைக்கோவை'யில் இலங்கையர்கோன், சம்பந்தன், வைத்தியலிங்கம் முதலிய சிலரின் கதைகள் வெளிவந்துள்ளன. இலங்கைச் சிறுகதைகளைத் தொகுப்பாக்கினால் என்ன? என எண்ணினேன். நான் இந்தியாவிலிருந்தது, இளந்தமிழன் பத்திரிகை அச்சிட்டது, பாரி நிலையத்துடன் தொடர்பு ஏற்பட்டது என்பன இதற்குத் தூண்டுகோலாக இருந்தன. சென்னை பாரி நிலையத்தோடு தொடர்பு கொண்ட போது, வெளியிட்டுத் தருவதற்கு உடன்பட்டனர். என்னுடன் அ.செ.முருகானந்தன், பொன்னம்பலம் ஆசிரியர் ஆகியோரும் இணைந்து செயற்பட்டனர். எழுத்தாளர்களோடு தொடர்பு கொண்டு கதைகளைப் பெற்று, அவற்றில் பன்னிரண்டு சிறுகதைகளை வெளியிட்டோம். இலங்கையர்கோன், சி.வைத்திலிங்கம், சம்பந்தன், கனக.செந்திநாதன், இராஜ.அரியரத்தினம், தாழையடி சபாரத்தினம், வரதர், வ.அ.இராசரத்தினம், சு.இராசநாயகன், கே.டானியல், சசிதேவி தியாகராசா, செ.கணேசலிங்கன் ஆகியோரின் படைப்புகள் இதில் இடம்பெற்றன.

**நுண் கலைகளிலிருந்து இலக்கியம் வேறுபட்டிருப்பது சமூகத்துக்குத் தேவையான பொருத்தமான உண்மைக் கருத்துக்களைக் கூறுவதால்தான்.**



இலங்கைப் படைப்புகள் தொடர்பில் தமிழகத்தில் ஒரு அறிமுகத்தைச் செய்ததில் இத்தொகுப்பு பங்காற்றியுள்ளது எனக் கருதுகிறேன். இவ்வாறு ஐந்து தொகுதிகளை வெளியிட எண்ணியபோதும், பல்வேறு காரணங்களால் அது சாத்தியப்படாமல் போயிற்று.

***☐☐ தங்களால் வெளியிடப்பட்ட 'கலைச் செல்வி' ஒரு காலகட்டத்தைப் பிரதி பலிப்பதாக விதந்து கூறப்படுகிறது. 'கலைச்செல்வி' எவ்வாறு பிறந்தது?***

☐ இலங்கை இனப்பிரச்சினை - குறிப்பாக 1958 ஆம் ஆண்டு இனக்கலவரம் - 'கலைச்செல்வி' பிறப்பதற்கு மறைமுக காரணம் எனலாம். களுத்துறையில் தமிழ்க்கழகம் என்ற அமைப்பு சார்பாக தமிழ்ச்செல்வன், உதயணன் ஆகியோரால் ஈழதேவி என்றொரு பத்திரிகை வெளியிடப்பட்டது. 1958 கலவரத்துடன் உதயணன் யாழ்ப்பாணம் வரவேண்டியதாயிற்று. ஈழத்துச் சிறுகதைகள் வெளியிட்டுப் பலராலும் பாராட்டப்பட்ட நிலையில் ஒரு பத்திரிகையை வெளியிடும் ஆவல் எனக்கும் ஏற்பட்டது. எனவே, முக்கிய எழுத்தாளர்களை அழைத்து பரமேஸ்வராக் கல்லூரியில் எழுத்தாளர்களை அழைத்து ஒரு கூட்டத்தை வைத்து பத்திரிகையை வெளியிடும் யோசனையை முன்வைத்தேன். பலரும் இது ஒரு விஷப்பரீட்சை எனக் கூறிக் கண்டித்தனர். எனவே, நானும் இம்முயற்சியைக் கைவிட்டுவிட்டேன்.

இந்நிலையில் ஒரு நாள் - அதுவரை கடிதம் மூலமே தொடர்புகொண்டிருந்த - உதயணன் தமிழ்ச் செல்வனுடன் என்னிடம் வந்தார். ஒரு பத்திரிகையை ஆரம்பிக்குமாறும், தாம் அதற்குச் சகல ஒத்துழைப்பும் தருவதாகவும் அவர்கள் என்னைக் கோரினர். கலைச் செல்வி பிறந்தது. எனினும் உதயணன் வாக்குறுதி அளித்தபடி நடக்கவில்லை. நானே நடத்தவேண்டியதாயிற்று.

***☐☐ கலைச்செல்வியின் சாதனைகள் என்று எவற்றைக் கருதுகிறீர்கள்?***

☐ எழுத்தாளர், அறிஞர் மத்தியில் நல்ல பெயரைப் பெறவேண்டும் என்ற நோக்கிலேயே கலைச்செல்வியில் கவனத்தைச் செலுத்தினேன். பழம்பெரும் எழுத்தாளர்கள் எழுதிய 'எழுத்துலகில் நான்' இரண்டாம் காலகட்ட எழுத்தாளர்கள் எழுதிய 'என்னை உருவாக்கியவர்கள்', கவிஞர்கள் எழுதிய 'என்னைக் கவர்ந்த என் கவிதை' முதலிய பகுதிகள் தொடராக வெளிவந்து வரவேற்பைப் பெற்றன. 'ஏன் மறைத்தேன் என் பெயரை' என்றொரு பகுதியையும் ஆரம்பித்தேன். அத்துடன் எழுத்தாளர்கள் தமக்கிடையே பரிமாறிய கடிதங்களையும் பிரசுரித்தேன். வளரும் எழுத்தாளர் மலர்,

பெண்கள் மலர் முதலான சிறப்பு மலர்களையும் வெளியிட்டேன். சிறுகதை, நாவல், நகைச்சுவைக் கட்டுரைப் போட்டிகளையும் நடத்தினேன். இவை கலைச்செல்வியின் சாதனைகள் என்பதல்ல; தன் நோக்கங்களை நிறைவேற்றியமையின் பதிவுகள் எனலாம்.

***□□ கலைச்செல்வி தனது பயணத்தை நிறுத்தக் காரணம் என்ன?***

□ ஒரே காரணம் பொருளாதாரப் பிரச்சினை. முதலாவது இதழ் வெளிவந்த பின்னர் வரதரிடம் போனேன். "மாஸ்ரர் நீங்கள் இதைக் கனகாலம் நடத்த மாட்டீர்கள். வெளியிடும் காலம் வரை தரமானதாக நடத்துங்கள். வாங்குவார்கள் என எதிர்பார்க்காமல் அறிஞர்கள், கணிப்புக்குரியவர்களுக்கு அனுப்புங்கள். அதன் மூலமாகப் பரவலான அறிமுகத்தைப் பெறட்டும்" என அவர் அறிவுரை கூறினார். நான் 60 பிரதிகள் வரை இலவசமாக அனுப்பி வந்தேன். ராஜாஜிக்கும் ஒரு பிரதி அனுப்புவது வழக்கம். ஒரு முறை கல்கி ஆசிரியர் சோமுவிடம் கலைச்செல்வியில் வந்த 'சு.வே' எழுதிய உருவகக் கதையைப் பாராட்டிக் கூறினாராம் ராஜாஜி. அதேபோல மு.வரதராசனும் கலைச்செல்வி பற்றியும், என்னைப் பற்றியும் நல்லபிப்பிராயம் வெளியிட்டுள்ளார். அறிஞர் மத்தியில் பெற்ற வரவேற்பே கலைச்செல்வியின் பயன். மற்றப்படி கலைச்செல்வி இயற்கையான சாவை அடைந்தது.

***□□ மறுமலர்ச்சியும் கலைச்செல்வியும் ஈழத்து இலக்கிய உலகில் முக்கிய சஞ்சிகைகள். இரண்டுமே நின்றுவிட்டன. மறுமலர்ச்சி இடையில் முயன்று தவறிவிட்டது. கலைச்செல்வி இலக்கிய உலகில் மீள் பிரவேசம் செய்யுமா?***


□ மறுமலர்ச்சி இரண்டாண்டுகள் வெளிவந்தன. அவற்றை வாசித்தேன். நன்றாகத்தான் இருந்தன. சமீபத்தில் செங்கையாழியானுடன் கதைத்தபோது இலக்கிய சஞ்சிகையின் தேவைப்பாடுள்ளதாகக் கூறினார். அவ்வேளை வரதர், தான் பெயரளவில் நின்றுகொள்ள, என்னையும் செங்கையாழியானையும் சேர்த்து மறுமலர்ச்சியை மீளக் கொண்டுவரலாம் என்றார். மறுமலர்ச்சி இரண்டு இதழ்கள் வந்தன. செங்கையாழியான் என்னிடமே எல்லாவற்றையும் விட்டுவிட்டார். மூன்றாவது இதழுக்கான சகல விடயங்களையும் பூர்த்தி செய்து, அச்சடிக்க வரதரிடம் கொடுத்தேன். அவர் அவற்றைத் தொலைத்துவிட்டார். அத்துடன் மறுமலர்ச்சி மீண்டும் நின்று போனது. கலைச்செல்வியை மீண்டும் வெளியிடும் எண்ணம் இல்லை; பல காரணங்களால்.

***□□ இலக்கியம் எவ்வாறானதாக அமைய வேண்டும் எனக் கருதுகிறீர்கள்?***

□ இலக்கியம் என்பது 'இலட்சியம்' என்பதிலிருந்தே தோன்றியது என்ற கருத்து எனக்குப் பிடித்தமானது. நுண்கலைகளிலிருந்து இலக்கியம் வேறுபட்டிருப்பதே சமூகத்துக்குத் தேவையான பொருத்தமான உண்மைக் கருத்துக்களைக் கூறுவதுதான். மனிதருடைய வாழ்க்கையை மேம்படுத்துகின்ற ஆற்றலுடையது இலக்கியம். இது எனது முடிந்த முடிபாகும்.

சூழல் மாசடைகிறது என்கிறார்கள். சூழல் என்பதில் எமக்குள் இருக்கும் அகச்சூழல் என்பதும் ஒன்று. இலக்கியம் கூறும் நல்ல கருத்துக்கள் எமது அகத்துக்குள் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். சாதாரண மோகன தாஸை அரிச்சந்திரன் நாடகமே காந்தியாக ஆக் கியது. அரிச்சந்திரன் நாடகம் அதீத கற்பனையாக இருக்கலாம். ஆனால் உண்மை என்பது வலியுறுத் தப்படுகிறதே அதுதான் மோகனதாஸை மகாத்மா காந்தியாக்கியது; எத்தனையோ நல்ல விடயங்களைச் செய்ய வைத்தது.

இலக்கியம் நீதிபோதனையாக இருக்கக் கூடாது.



இலக்கியம் இன்பம் பயப்பதாக் இருப்பதோடு, அறம் சார்ந்த, ஒழுக்கம் சார்ந்த கருத்துக்களை மறைமுகமாக வலியுத்துவதாக இருக்க வேண்டும்.

உள்ளதை உள்ளபடி கூறுவதல்ல இலக்கியம். உள்ளதை உணர்ந்தபடி கூறுவதும் உணரும்படி

கூறுவதும் இலக்கியமாகும்.

***▯▯ நீங்கள் ஒரு மூத்த படைப்பாளி. பல படைப் பாளிகளை உருவாக்கியவர். பல்வேறு படைப்புக்களையும் படித்து, மதிப்பீடு செய்தவர். அந்த வகையில் அண்மையில் நம்பிக்கை தரும் படைப்புகள் / படைப்பாளிகள் என எவற்றை/ யாரைக் கருதுகிறீர்கள்?***

□ இதற்கு விடையளிப்பது கடினமானது. நான் பலவற்றைப் படித்துள்ளேன். சிலவற்றைப் படிக்கமுடியவில்லை. படித்தவற்றை ஒழுங்காகக் கூறக்கூடிய ஞாபகசக்தியும் குறைவு போராட்ட இலக்கியம் என்ற வகையில் புதுவை இரத்தினதுரையின் உலைக்களம் படித்தேன். அதைப்படிக்க எனக்குள்ளும் பல கவிதைகள் பிறந்தன. இப்போது பெயரைச் சொல்லும்போது நல்ல படைப்பாளிகள் பலரது பெயரை விட்டுவிடுவேனோ எனப் பயமாக இருக்கிறது. எனினும் தாட்சாயணி, இயல்வாணன், உடுவில் அரவிந்தன், ச.குமுதினி என ஒரு சிலரது படைப்புக்கள் அண்மையில் நம்பிக்கை தருவனவாக உள்ளன.

***▯▯ போர்க்கால இலக்கியங்கள் புது ஊற்றாக ஈழத்து இலக்கியத்துக்குக் கிடைத்திருக்கிறது. புதியகளம், புதிய பாடுபொருள், புதிய அனுபவம். அதேவேளை வலிகளும், துன்பங்களும், வெற்றிகளும், மகிழ்ச்சியும் என மாறுபட்ட மாபெரும் வாழ்பனுபவம் வாய்த்த காலம் அண்மைய நமது காலமாகும். இந்த மகானுபவங்கள் இலக்கியத்தில் பிரதிபலிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இது தொடர்பாகத் தங்களின் மதிப்பீடு என்ன?***

□ மலரவனின் 'போர் உலா' படிக்கமுடியவில்லை. அதேபோல வேறுபல படைப்புக்களையும் படிக்காதிருக்கலாம். ஆனால் இந்தியாவில் வெளிவந்த படைப்புக்கள் பலவற்றையும் பார்த்தேன். இந்திய சுதந்திரப்போராட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட தியாகபூமி, மண்ணில் தெரியுது வானம், கல்லுக்குள் ஈரம், ஆத்மாவின் ராகங்கள் போன்ற பலவற்றைப் படித்தேன். இவையெல்லாம் எனக்கு நேர்ந்தது போல, நானே நிற்பதுபோல உணர்வை ஏற்படுத்திய படைப்புக்களாகும். அந்தளவுக்கு இங்கே இலக்கியத்தில் பதிவுசெய்யப்படவில்லைப்போலத் தெரிகிறது. இவ்வாறு பதிவுசெய்யப்படுமானால் எமது தேசியப் போராட்டத்தில் தொய்வேதும் ஏற்படாது.

***▯▯ இத்தகைய அனுபவங்கள் உங்களுக்கும் ஏற்பட்டது தானே. இவற்றைப் பதிவுசெய்ய முயற்சித்ததுண்டா?***

□ எங்களது கடந்தகால வாழ்வனுபவங்களைப் பதிவு செய்யும் ஒரு நாவலை எழுதினேன். ஐந்து அத்தியாயங்கள் எழுதிய நிலையில் உள்ளது. கடைசியாக எழுதி ஒரு வருடம் இருக்கும். 'இந்தப் பிறப்பில் செய்வது அடுத்த பிறப்பில் பலிக்கும்' என்றே பௌத்த ஜாதகக் கதைகள் வலியுறுத்துகின்றன. அவ்வகையில், தமிழன் ஒருவன் சிங்களவர்களைப் பார்த்து 'எங்களை அழிக்க முயல்வதனூடாக உங்களை அழித்துக் கொள்ளாதீர்கள்' எனக் கேட்பதாகத்தான் அக்கதையின் முடிவு இருக்கும். அது எப்போது சாத்தியமாகுமோ தெரியவில்லை.



# ஆக்கிரமிப்பு

இலைகளின் நிழல்களில்
வீழ்ந்திடும் எச்சங்கள்
மலைகளைப் பிளக்கும்;
மலைகளைப் பிளக்கும்.

குளவிகள் கூட்டில்
நுழைந்திடும் காற்றும்
குளவிகள் கூட்டில்
நுழைந்திடும் ஒளியும்
மழையின் வெளியில்
வலைகள் பின்னும்.

இடம்படும் தொடர் ஓலைகள்
துயர் விழும் காலைகள்
கடும் குளிர் நிலவில்
கனவுகள் மறக்கும்;
கனவுகள் மறக்கும்.

அச்சங்கள்
தொலைந்த இருப்புகள்
அவலங்கள் கலைந்த பொறுப்புகள்
அணுவைப் பிளக்கும்;
அணுவைப் பிளக்கும்.

வெய்யில் மழைக்குள்
நெய்யும் இதயம்
பொய்கள் அழிக்கும்
புகழ்கள் குவிக்கும்.

**நல்லை அமிழ்தன்**



# தேசியத்தின் வெற்றியாக
# தேர்தலின் வெற்றி

மலைமகள்



சுதந்திரத் தென்னாபிரிக்காவின் முதலாவது தேர்தல் 1994இல் நடந்தபோது, நாட்டின் விடுதலைக்காகப் போராடிய அமைப்பான ANC 62.5% வெற்றியை ஈட்டியது. 1999இல் இரண்டாவது தேர்தலில் 65% வெற்றி. இம்முறை 2004இல் அது 70% ஆக உயர்ந்திருக்கிறது. எனினும் இந்தியர்கள் மிக அதிகமாக வாழ்கின்ற குவாசுலு நட்டால் மாகாணத்தில் ANC ஆல் கடந்த இரண்டு தேர்தல்களிலும் அறுதிப் பெரும்பான்மையினைப் பெறமுடியவில்லை. அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன.

1. தென்னாபிரிக்காவில் வாழ்கின்ற இந்திய வழிமுறை மக்களில் 60% ஆனோர் தமிழர். 15% ஹிந்தி பேசும் மக்கள். குஜாராத்தியர், மராட்டியர், கன்னடர் எல்லோரும் மிகக் குறைந்த வீதத்தினரே. ஆனால் சுதந்திர ஆபிரிக்கர்களின் ஆட்சியில் SABC எனப்படுகின்ற தேசிய தொலைக்காட்சியில் ஹிந்தி மொழிப் படங்களும் நிகழ்ச்சிகளும் ஒளிபரப்பப்படுகின்றனவேயன்றி தமிழ்மொழி ஒளிபரப்புக்கள் அல்ல.

வெள்ளையர்களின் ஆட்சிக்காலத்தில் தமிழ்மொழி பாடசாலைகளில் கல்வி மொழியாக இருந்தது. ஆனால் சுதந்திரம் கிடைத்தபின் கல்வி மொழியாக ஆபிரிக்க மொழிகளும் ஆங்கிலமுமே நடைமுறையில் இருக்கின்றன. எனவே இந்தியத் தமிழர்கள் ANC யைத் தவிர்த்து Minority Front இற்கே தமது வாக்குகளைக் கடந்த இரு தேர்தல்களிலும் அளித்தனர்.

2. குவாசுலு நட்டால் மாகாணம் இன்காட்டா மக்கள் செறிந்து வாழும் பகுதி. ANCற்கும் வெள்ளையர் அரசுக்கும் இடையே அமைதிப் பேச்சுக்கள் நடைபெற்ற காலத்தில் முழுத் தென்னாபிரிக்காவையும் ஓர் அரசுக்குக் கீழே கொண்டுவருவதை எதிர்த்த புத்தலசி ANC இல் இருந்து பிரிந்துபோய் பிறிதொரு அமைப்பைத் தோற்றுவித்தார்.

குவாசுலு நட்டாலில் பெரும்பான்மையாக வாழ்கின்ற சூலு இன மக்களுக்குத் தம்மைத்தாமே ஆளும் உரிமை வேண்டும் என்று கேட்டு அமைதிப் பேச்சைக் குழப்பிய புத்தலசியின் Incatha Freedom Party இற்கே குவாசுலு நட்டாலில் வெற்றி கிடைத்து வந்தது. மாகாண ஆட்சியை IFP உம் MF உம் இணைந்தே இருமுறையும் நடத்தின.



எனவே தென்னாபிரிக்கா முழுமையுமே பெரு வெற்றி ஈட்டுகின்ற ANCஇற்கு இரு தடவையுமே குவாசுலு நட்டால் சவாலாகவே இருந்தது. எனவே இந்தியர்களின் வாக்குகளைத் தம்பக்கம் திருப்புவதற்கான பணியை ANC சென்ற தடவையே ஆரம்பித்துவிட்டது.

கரும்புத் தோட்டங்களில் வேலை செய்வதற்கென இந்தியாவிலிருந்து தமிழர்கள் கடத்தப்பட்டு மூன்று தலைமுறைகள் கடந்துவிட்டன. முதல் தலைமுறை தமிழில் மட்டுமே பேசி, இரண்டாவது தலைமுறை தமிழிலும் ஆங்கிலத்திலும் பேசி, மூன்றாம் தலைமுறை தமிழில் யாரேனும் பேசினாலும் கூட விளங்கி அல்லது விளங்காமல் ஆங்கிலத்திலேயே பேசி, இப்போது நான்காம் தலைமுறை யோசிப்பது வாசிப்பது கதைப்பது எல்லாமே ஆங்கிலத்தில் மட்டுமே. ஆனால் தமக்கிருக்கும் ஒரே ஒரு இன அடையாளம் தமிழ் என்பதால் தேவாரப் பாடல்களை தமிழ் உச்சரிப்புக்கேற்ப ஆங்கிலத்தில் எழுதி புத்தகமாக அச்சடித்து எல்லா வயதினருக்கும் கொடுத்திருக்கின்றார்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் எல்லோருமே கோவில்களில் ஒன்றாகக் கூடுகின்றார்கள். கடவுள் வணக்கத்தை பூசாரிகள் யாரும் சமஸ்கிருதத்தில் செய்வதில்லை. கோவிலுக்குப் பொறுப்பான ஒருவர் தேவாரத்தைத் தமிழில் பாட ஏனையவர்கள் புத்தகத்தில் பார்த்துப் பாடுவார்கள். இதுதான் கோயில்களில் நடைபெறும் பூசை. எல்லோராலும் தமிழில் பாட முடியும் ஆனால் பேச மாட்டார்கள்.

இந்தியாவில் வாழ்ந்த நாட்களில் இவர்களிடையே இருந்த சாதிப்பெயர்களான கவுண்டன், நாயுடு, ரெட்டி, படையாச்சி, நாயக்கர், முதலியார் போன்றவை இன்றும் புழக்கத்தில் உள்ளன. ஆனால் அவை சாதிகளின் அடையாளங்களாக இல்லாமல் குடும்பப் பெயர்களாகி விட்டன.

அரச தொலைக்காட்சியான SABC இல் இந்திப்படங்களையும் இந்திப்பாடல் காட்சிகளையுமே பார்க்க முடிகின்றது. இது தமிழர்கள்மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியிருப்பதைக் கவனிக்க முடிந்தது.

2004ஆம் ஆண்டின் தமிழ் புதுவருடத்தை ஏப்ரல் 10 சனிக்கிழமையன்று திறந்தவெளி அரங்கில் தென்னாபிரிக்கத் தமிழர்கள் கொண்டாடிய நிகழ்வை ஜனாதிபதி தபோ உம்பேகி கலந்து கொண்டு சிறப்பித்தார். அவர் தனது அன்றைய உரையில், வரும் நாட்களில் SABC இல் தமிழ்மொழித் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்குத் தாம் ஆவன செய்வதாகக் குறிப்பிட்டபோது தமிழர்களின் கைதட்டலில் அரங்கமே அதிர்ந்தது.

அவர்களைப் பொறுத்தவரை தமிழர்கள் என்றால் சைவர்கள் மட்டுமே. தென்னாபிரிக்காவில் உள்ள தமிழர்கள் வணங்குவது சிவன், முருகன், பிள்ளையார் என்று குறிப்பிட்ட சில கடவுளர்களை மட்டுமே. விஷ்ணுவை வணங்குவதே இல்லை. அவர் இந்திக்காரரின் கடவுள் என்கிறார்கள். அங்கு போனதற்கு நாம் ஒரே ஒரு விஷ்ணு கோவிலையே கண்டோம். 2004.04.09 அன்று டேர்வன் கடற்கரையோரத்தில் இந்திக்காரர்களால் ஹரே கிருஷ்ணா என்றொரு நிகழ்வு செய்யப்பட்டது. விஷ்ணுவின் பல்வேறு அவதாரங்களின் லீலைகளின் சித்திரிப்புக்களும் அவை பற்றிய உரைகளுமாக இந்திக்காரர்கள் பெருமளவில் கூடிக்கொண்டாடிய நிகழ்வில் ஒரு தமிழரைத்தானும் காணமுடியவில்லை.

தமிழர்கள் என்றால் சைவர்கள் மட்டுமே என்ற கருத்து மிக ஆழமாக அவர்களிடையே உள்ளது. நம்

நாட்டின் தமிழ் பேசுகின்ற கத்தோலிக்கர்கள், இஸ்லாமியர்கள் உள்ளனர் என்பதையும் மதம் வேறு, மொழி வேறு என்பதையும் நாம் கூறியபோது அதைவிளங்கிக் கொள்ளச் சிரமப்பட்டார்கள். சைவர்கள் மட்டுமே தமிழர்கள் என்றும், மற்றவர்கள் கத்தோலிக்கர்கள், இஸ்லாமியர்களே தவிர, தமிழர்கள் அல்ல என்றும் கருதுகின்றார்கள்.

குழந்தைகளின் பெயர்களைத் தமிழில் வைக்க விருப்பம் உண்டு. ஆனால் நல்ல தமிழ் தெரியாத காரணத்தால் ஏதேதோ பெயர்களை வைத்திருக்கிறார்கள். ஷீலா, கோஷி, வேணி எல்லாமே அவர்களைப் பொறுத்தவரை தமிழ்ப் பெயர்களே. இனத்தின் அடையாளம் பெயர்களில் தெரியும் என்பதால், பெயர்களில் கவனம் செலுத்துமாறு நாம் கூறியதை கவனத்தில் எடுத்தார்கள்.

குவாசுலு நட்டாலில் ஒரு முக்கிய இடம் Chirt Hanny. அது IFP இன் கோட்டை. சிங்கத்தின் வாய்க்குள் தலையை நீட்டுவதற்கு ஒப்பான செயலில் ANC இறங்கியது. 2004.04.11 அன்று Chirt Hanny இல் தனது ஆதரவாளர்களுக்கான தேர்தல் பரப்புரை நிகழ்வை அது ஒழுங்கு செய்திருந்தது.

99/100 வீதமும் ஒரு பெரும் கலவரம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதற்கான அறிகுறிகள் கூடத் தென்படவில்லை. கலவர அச்சம் காரணமாக மிகக் குறைந்த எண்ணிக்கையினரின் வரவு எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 50,000 க்கும் மேலானவர்கள் வந்திருந்தனர்.

நாட்டின் தேசியப் பாடலையும் ANC இன் வெற்றிப் பாடல்களையும் உரத்த குரலில் பாடியவாறு புத்துணர்வோடு ஆடிக்கொண்டிருந்தார்கள். நிகழ்வின் உச்சக்கட்டமாக, எவரும் எதிர்பாராத வகையில் திடீரென மேடையில் அது நிகழ்ந்தது. IPF இன் இளைஞர் அணியின் தலைவர் ANC இன் மேடையில் ஏறினார்.

"நாங்கள் ஒரு வரலாற்றுத் தவறை இழைத்துவிட்டோம். நாட்டின் விடுதலைக்காகப் போராடிய அமைப்பிலிருந்து பிரிந்ததற்காக வருந்துகின்றோம். உண்மையில் நாம் இருக்கவேண்டிய இடமாகிய ANC உடன் இன்று நாம் இணைகின்றோம்" என்றார்.

பலத்த கைதட்டல்களின் நடுவே IFP இன் இளைஞர் அணி ANC உடன் கைகோர்த்தது.

சுதந்திரத் தென்னாபிரிக்காவின் மூன்றாவது ஜனநாயகத்தேர்தல் ஏப்ரல் 14இல் நடைபெற்றாலும், உண்மையில் 12, 13ஆம் திகதிகளிலும் வாக்களிப்பு நடைபெற்றது. நோயாளர்கள், இயலாதோர், கர்ப்பிணிகள் ஆகியோரை அவரவர் வீடுகளிலும் வைத்தியசாலைகளிலும் போய்ச் சந்தித்த சிறப்புத் தேர்தல் அதிகாரிகள் வாக்குச் சீட்டுக்களை அவர்களிடம் கொடுத்து வாக்குகளைப் பெற்றுக் கொண்டனர். இந்த சிறப்பு வாக்குச் சேகரிப்பில் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் போன்ற மதிக்கத்தக்க அரச அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒரே நேரத்திலேயே தேசிய, மாகாண மட்டங்களிலான தேர்தல்கள் இரண்டும் நடத்தப்பட்டன. 14ஆம் திகதி வெளிப்படையான தேர்தல் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையங்களில் நடைபெற்ற அதே நேரம் சிறைகளிலும் வாக்கெடுப்பு நடைபெற்றது. குற்றவாளிகளாக உறுதிப்படுத்துவதற்கான போதிய சான்று இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர், சிறு குற்றங்களில் ஈடுபட்டு சிறு அளவிலான ஒறுப்புக்குள்ளானோர் ஆகியோர் வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். நீண்டகால ஒறுப்பு விதிக்கப்பட்டோரும் சாவொறுப்பு விதிக்கப்பட்டோரும் வாக்களிக்க முடியாது. சிறையில் உள்ளோருக்கு வாக்களிக்கும் உரிமையினை வழங்குமாறு தென்னாபிரிக்க அரசோடு பேசித் தாம் பெற்றுக்கொடுத்ததாக IEC எமக்கு வழிகாட்டியாக அனுப்பிவைத்த திரு. Justice Ndabezitha அவர்கள் கூறினார். கடந்த இரு தேர்தல்களிலும் சிறையில் உள்ளோர் பங்குபற்றியிருக்கவில்லை.

குவாசுலு நட்டால் மகாணத்தில் 12 வாக்களிப்பு நிலையங்களை நாம் பார்வையிட்டோம். ஒவ்வொரு நிலையத்தினதும் பொறுப்பதிகாரிகள் - பெரும்பாலானோர் பெண்கள் - எம்மை வரவேற்று அதுவரை நடந்து முடிந்திருந்த விடயங்களை விளக்கினர்.

எல்லா நிலையங்களிலும் நாம் கண்டுகொண்ட ஒரு முக்கியமான, ஆனால் வரவேற்கத்தக்க விடயம் என்னவெனில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினர்கள் தேர்தல் கண்காணிப்பாளராகப் பணியாற்றிக்கொண்டிருந்ததுதான். Party Agent என்ற இலச்சினையுடன் ANC, IFP, MN என எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களுமே கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். 12 நிலையங்களிலுமே இதை நாம் அவதானித்தோம். ANCயின் அதிகாரிகள் தேர்தல் நிலையங்களுக்கு வெளியே தமது கட்சியின் அந்தந்தப் பகுதி ஆதரவாளர்களின் பெயர் விபரங்கள் அடங்கிய பதிவேடுகளை வைத்திருந்து, வாக்களிக்க வருவோரை சரிபார்த்துக்கொண்டிருந்ததையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

வாக்களிக்க வருவோர் வாக்காளராகப் பதிவுசெய்யப் பட்டவரா என்பதை ஒரு பகுதியினர் சரிபார்த்து அனுப்பிக் கொண்டிருக்க, மாகாண, தேசிய வாக்குச் சீட்டுக்களை இன்னொரு பகுதியினர் வழங்கிக் கொண்டிருக்க ஒவ் வொருவருக்கும் தனித்தனியாக அமைக்கப்பட்டுள்ள பெட்டி போன்ற அமைப்பினுள் வாக்காளர்கள் நின்று வாக்களித்துவிட்டு வெளியே வந்து வாக்குப் பெட்டியினுள் சீட்டுக்களைப் போட்டுவிட்டு வெளியேறுகின்றனர். அந்தந் தப் பகுதியின் மக்கள் தொகைக்கேற்ப வாக்களிப்புப் பெட்டிகளின் தொகை கூடிக் குறையும். மூன்று தொடக் கம் பத்து வரையான வாக்களிப்புப் பெட்டிகள் வைக்கப் பட்டிருந்தன.

வாக்குச் சீட்டுக்களைப் போடும் பெட்டிகள் சில இடங்களில் ஒன்றாகவே இருந்தன. சில இடங்களில் மாகாணத்துக்கு வேறாக, தேசியத்துக்கு வேறாக வைக்கப்பட்டிருந்தன.

ஒரு நிலையத்தில் கால் இயலாத ஒருவர் ஊன்று கோலுடன் வந்து வரிசையில் காத்திருக்க இயலாததால் தன்னை உடனேயே வாக்களிக்க விடுமாறு கேட்டார். இயலாதவர்களுக்கான தேர்தல் நேற்றும், நேற்று முன் தினமும் நடந்ததால், இன்று விட முடியாது என்று முதலில் கூறினாலும் கட்சிக் கண்காணிப்பாளர்களுடன் கலந்து ரையாடிய நிலையப் பொறுப்பதிகாரி பின்னர் அவரை வாக்களிக்க விட்டார்.

வேகமாக, சீராக வாக்களிப்பு நடைபெறுவதற்காகவே இயலாதவர்களுக்கான தேர்தலை ஏற்கனவே செய்து முடித்ததாகவும், நெருக்கடி மிகுந்த இன்றைய சூழலில் இது ஒழுங்கைக் குழப்பிவிடும் என்றும் நிலையப் பொறுப்ப திகாரி கூறினார்.

வாக்காளர்கள் எவரேனும் அந்தப் பகுதியில் பதிவு செய்யப்படாதவர்களாக இருந்தால் உடனே அதிலேயே பதிந்து வாக்களிக்க விடுகின்றார்கள். ஆனால் இத்தகை யோர் தேசிய மட்டத் தேர்தலில் மட்டுமே பங்கேற்கலாம். மாகாண மட்டத்தேர்தலில் பங்கேற்க முடியாது. பதிவில் லாதவர்கள் மட்டுமன்றி வேறுபகுதியில் பதிவுசெய்யப் பட்டு, வேறுபகுதியில் வாக்களிக்க வருவோரும் அப் படியே. எடுத்துக்காட்டாக சங்கானையில் பதியப்பட்ட வாக்காளர் ஒருவர் பருத்தித்துறையில் வாக்களிக்கப் போவாராயின் அவர் தேசிய மட்டத்தில் வாக்களிக்கலாம். மாகாண மட்டத்தில் வாக்களிக்க மறுக்கப்படுவர்.

வாக்குச் சீட்டுக்களில் கட்சியின் சின்னம், பெயர், வேட்பாளரின் படம் என்பன பொறிக்கப்பட்டுள்ளன.

அதிகாலை 2 மணியிலிருந்துகூட மக்கள் காத்தி ருந்து வாக்களித்தனர். மதியத்திற்குப் பிறகுகூட சில இடங்களில் பாதியளவு மக்கள் தானும் வாக்களித்து முடியாத நிலை காணப்பட்டது. அத்தகைய இடங்களில் பதிவுள்ள, பதிவில்லாத வாக்காளர்களை வெவ்வேறு வரிசைகளாக விட்டு வாக்களிப்பையும் பதிவையும் விரைவு படுத்திக்கொண்டிருந்தார்கள். ஆட்தொகை குறைவான நிலையங்களுக்குச் சில நிலையங்களில் நீண்ட நேரமாகக் காத்திருந்த பெருந்தொகையான மக்களை ஏற்றி அனுப்பி வாக்களிப்பது பற்றியும் ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள்.

காலை 6.30 தொடக்கம் மாலை 9.30 வரைதான் வாக்களிப்பு நேரம். எனினும் வரிசையில் காத்து நிற்கின்ற மக்கள் 9.30 கடந்தும் வாக்களிக்க ஒப்புதல் அளிக்கப் படுவர் என தேர்தல் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

நகரம் சார்ந்த பகுதிகளியே வாக்களிப்புக்கு நீண்ட நேரம் எடுத்தது. பணி விடயமாக வந்து தங்கியிருக்கும் வெவ்வேறு பகுதி வாக்காளர்கள் எல்லோரும் இங்கேயே வருவதால், அவர்களைப் பதிந்து வாக்களிப்புக்கு விட, நீண்டநேரம் பிடித்ததாக ஒரு அதிகாரி தெரிவித்தார். தான் மூன்றுமணி நேரம் காத்திருந்து வாக்களித்ததாக ஒரு வெள்ளைப் பெண்மணி எங்களிடம் குறிப்பிட்டார்.

ஒரே ஒரு இடத்தில் மட்டும் ஒரு துப்பாகிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றது. சேதம் எதுவுமில்லை. இது தவிர ஒட்டு மொத்தத்தில் தேர்தல் மிக நல்ல முறையில் நடந்து முடிந்தது என்றே கூறலாம்.

ஜொகனஸ் பேர்க்கின் அந்த மண்டபத்தில் வெற்றிவிழா விருந்தில் 2000 இற்கும் மேலான அழைக் கப்பட்ட விருந்தினர்கள் கலந்துகொண்டனர். உம்பேகி, துணைஜனாதிபதி. ஆலோசகர்கள், வெளியுறவுத்துறை யினர். ANC யின் முன்னாள் போராளிகளும், இந்நாள் அரசியல் முதல்வர்களுமாக விருந்து மண்டபம் நிறைந் திருந்தது.

வெற்றிக் களிப்பு எல்லோர் முகங்களிலும் வெளிப்படை யாகவே தெரிந்தது. அது ANCயின் வெற்றி மட்டுமல்ல. ஒரு தேசியத்தின் வெற்றியும்கூட.

## அஞ்சலி

ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இது ஒரு அரசியற்படுகொலை. ஒடுக்கப்படும் இனத்தின் விடுதலைக்காக குரல் கொடுத்த நடேசன் கடந்த பத்தாண்டுகளில் தமிழ்ப்பரப்பின் ஊடகத்துறையில் அடையாளம் துலங்கிய ஒருவர். இன்னும் அழுத்திச் சொன்னால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பற்றாளராகவும் அதற்குரிய ஊடகவியலாளராகவும் முன்னின்று செயற்பட்டவர்.

நெருக்கடி மிக்க சூழலில், அபாயகரமான தளத்தில் சவால்களுக்கு முகம் கொடுத்து இயங்கியதன் மூலம் நடேசன் முதனிலையில் அறியப்பட்ட ஒரு ஊடகவியலாளரானார். இப்படி இயங்கியபோதுதான் நடேசன் கொலை செய்யப்பட்டுமிருக்கிறார். எப்போதும் நடேசனைச் சூழ்ந்திருந்த அல்லது இவ்வாறு செயற்படும் ஊடகவியலாளர் ஒருவருக்கு இருக்கும் அபாய வலைதான் இறுதியில் படுகொலைக் குழிக்குள் அவரை இழுத்தது.



நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன்

நடேசன் தமிழ் ஊடகத்துறையில் போராட்டம் சார்ந்த செய்திகளையும் கண்ணோட்டங்களையும் எழுதி வந்தார். கொழும்பு மைய ஊடகங்களிற்கூட தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மெய்ப்பாடுகளை எழுதி அவற்றில் விடுதலைப் போராட்டத்துக்குரிய வெளியை எடுத்தவர். இதுதான் தமிழ் மக்களிடையே நடேசனைப் பரிச்சயமாக்கியதுடன் அவரைத் தங்களில் ஒருவராகவும் ஆக்கியது.

வீரகேசரி, ஐ.பி.சி. வானொலி ஆகியவற்றில் முதல்நிலைச் செய்தியாளராக நடேசன் இருந்தார். தேச விடுதலை என்ற அடிப்படையிலேயே அவருடைய செய்தித் தேர்வும் செய்தி வழங்கலும் இருந்தது. அரசியல் மயப்பட்ட அல்லது அரசியல் பார்வையுடைய செய்திகளையும் செய்திக்கட்டுரைகளையும் வழங்குவதிலேயே நடேசனுக்கு ஆர்வமிருந்தது. அவருடைய எழுத்துகள் இதற்குச் சாட்சி.

விடுதலை

விரும்பி

குரலின்

முழக்கம்

விடுதலை விரோதப் போக்குடையோர் நடேசனை இனங்காண்பதற்கும் அவரை பழி தீர்ப்பதற்கும் மேற்சொன்ன அடையாளங்களும் செயல்களும் காரணமாகின. தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுக்கும் சிங்களப் பேரினவாதம், அந்த உரிமைகளுக்காக குரல் கொடுப்போரை அழிக்க முனையும் ஒரு அடையாளமாகவே நடேசனைப் படுகொலை செய்வித்தது. சமாதானம் என்ற திசை திருப்பும் அரசியலில் தமிழ் மக்களின் போராட்டத்தையும் விடுதலை உணர்வையும் மந்தமடையச் செய்யும் சிங்களத் தரப்பின் உத்தியைச் சாடி வந்தவர் நடேசன். இந்தப் பொய்முக அரசியலின் கபட வெளியை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தி எழுதியவர். இதெல்லாம் சிங்களத் தரப்பாலும், விடுதலை விரோதிகளாலும் தாங்கிக்கொள்ள முடியாதவை. இதனால்தான் – அவர்கள் நடேசனைக் கொலை செய்தன; கொலை செய்தார்கள். அவர்களுடைய இயலாமைதான் நடேசனைக் கொலைசெய்யத் தூண்டியது.

ஆனால் எப்போதும்போல யதார்த்தம் வேறுவிதமாக அமைந்துவிட்டது. அது நடேசனை நாட்டுப் பற்றாளன் ஆகவும் தமிழ் மக்களிடையே என்றும் மறக்கமுடியாத ஒரு விடுதலை விரும்பியாகவும் ஆக்கிவிட்டது. அத்தோடு நடேசனைக் கொன்றவர்கள் மீதான கோபத்தையும் மக்களிடையே கிளறிவிட்டது.

நடேசன் விடுதலைப்போராட்ட வரலாற்றில் இணைந்துகொண்ட ஒரு அடையாளமாக என்றும் இருப்பார். ஒடுக்குமுறையை எதிர்த்து செயற்பட்டதற்கு, அநீதியால் பலியாடப் பட்டதற்கு மக்கள் செலுத்தும் மகத்தான மரியாதையை நடேசனுக்கு தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப்புலிகளும் செலுத்தியுள்ளனர். வெளிச்சமும் தன்னுடைய மரியாதை வணக்கத்தைச் செலுத்துகிறது.

# ஜூலிய்...! நாயல்ல நீ

புதுவை இரத்தினதுரை



உன்னில் சாவுச் சிலந்தி வலைபின்னி
உயிர் உறுஞ்சக் கிடக்கிறாய்.
வாழ்வின் இறுதிக் கணத்தை
எப்படி எதிர்கொள்வாயோ?
ஒட்டி உலர்ந்து விலாஎலும்பு துருத்த
இன்னுமென்னில் உயிரிருப்பதாகச் சொல்லி
மூச்சுவிடுகிறாய்.
ஏது செய்ய இயலும் என்னால்?
ஊனுருக உள்ளே அழுதபடி
உன்னருகில் உள்ளேன்
என்னை மன்னித் நருள்க.
பஞ்சுப்பொதியாய் என்வீடு புகுந்த அன்று
உன்னைக் கொஞ்சாதார் எவர்?
இன்று நாராய்க் கிழிந்து கிடக்கிறாய்.
உனக்கான மருந்தேதும் இல்லையாம்
நான் என்செய்ய?
துடித்துக் கொண்டிருக்காதே
கடைசிமூச்சை வெளியேவீசிக் கண்களைமூடிவிடு
குழிவெட்டி புதைத்துவிடுகிறேன்.
இம்மண்ணில் மனிதர்கள் மட்டுமல்ல
மிருகங்களும் வாழமுடியாதென்று
சொல்லிப் போகிறாய்
போ என்பிரிய சகியே.
யூலிய்: நாயல்ல நீ
எனக்குத் தோழி.
மனைவிக்குச் சோதரி.
பிள்ளைக்குச் சித்தி.
சேலைகட்டிப் படியிறங்குவாள் மனைவி
வாசல்வரை வந்து வழியனுப்புவாய்.
திரும்பி வீடுவர
ஓடிவந்து இடுப்பைக் கட்டி
முகத்தை வயிற்றிலுரஞ்சி மகிழ்வாய்.
மீனறுக்கும் போது
காகங்களுக்குக் காவலிருப்பாய்.
நள்ளிரவு கடந்து நான் வீடுதிரும்பும்வரை
வாசலிலென் வரவுபார்த்துக் காத்திருப்பாய்.
கண்டபின்பே உன் மனம் ஆறும்.
வாய்பேசா ஜீவனெனினும்
உன் உள்ளுணர்வை உணரமுடிந்தது எம்மால்.
நாம் சயனிக்கும் அறையின் சாளரங்களை
மூடாதிருக்க வேண்டுமென்பது உன்கட்டளை.
உள்ளே விளக்கெரிய வேண்டும்
இது உன் உத்தரவு.
மணிக்கொரு தடவை யன்னலால் எட்டிப்பார்ப்பாய்
எண்ணிக் கணக்கிட்டும் இருப்பாயோ?
நாங்கள் உறக்கத்திலிருந்தால் உனக்குத் திருப்தி.



என் காவலிலிவர்கள் என்பதில்
உனக்கொரு கிறுக்கு.
குளிரெனினும் சாளரம் சாத்தவிடாய்
காலால் விறாண்டித் திறவென்பாய்.
திறக்காதிருந்தால் குரைப்பாய்.
பனியெனினும் யன்னல் மூடாதிருக்கப் பணித்தாய்
உன் அன்புணர்ந்து ஒழுகினோம்.
இன்று நோயால் நொடிந்து கிடக்கிறாய்.
யூலி!
உயிரைத் தூக்கியெறிந்து இறந்துபடு.
அரக்க மனமல்ல எனக்கு
இரக்கமனம்.
நீ துடித்துக் கிடப்பதை
பார்த்திருக்க ஒப்பவில்லை என்நெஞ்சு.
வந்தாய்,
எம்மிற்கலந்து வாழ்ந்தாய்,
போகிறாய்,
போ தாயே.
மீண்டும் சந்திப்போமா?
சந்திக்க வேண்டும் சகியே.
யூலி!
ஆசையாய் ஒருமுறை அழைக்கிறேன்
என்குரலை உள்ளேவைத்தபடி
செத்துவிடு.
□□

குறிப்பு: அன்புடன் வளர்த்த நாய் அகாலமாய் இறந்தபோது எழுதியது.



# உறவு

காதலியின் இடுப்புத்தசை கிள்ளும் விரலாய்
கரைவந்து தொட்ட அலைகள்
நோவின்றி மெல்லியதாய் நுள்ளின.
ஆரவாரமற்ற குஞ்சு அலைகளானாலும்
முத்தத்தால் சிந்திய வாய்நுரை
கரையெங்கும் பூத்திருந்தது.
பெருங்கடல் பெய்த சிறுநீர் வழிந்து
“வட்டுவாகலுக்கு” வெளியே கசிந்து
கடலெனும் பெயருடன் நந்திக்கடல்.
கசிவு நீரெனினும் எத்தனை அழகு.
இரவின் மோனத்தில்
நந்திக்கடல் மெய்புளகமெய்தும் மேனிபெறும்.
நிலவின் சௌந்தர்யஜொலிப்பில்
அழகின் ஆட்சியே கடலில்.
நட்சத்திரங்களை எண்ணிக் கணக்கிட்டபடி,
வந்து தழுவும் குளிர்காற்றை சுகித்தபடி,
குரலெழுப்பிப் போகும் இரவுக்குருவிகளை
ஏக்கத்துடன் பார்த்தபடி
கரையிலிருப்பது எத்தனைசுகம்.
நான்போகும் நாட்களில் எவருமிரார்
தன்னந்தனியாக நான் மட்டுமே.
ஒருவனே இத்தனையழகையும் எப்படித்தின்பது?
இன்றுமட்டும் அதிசயமாய் இன்னொருவன்
கையில் வலையுடன்.
அவனுக்கு நான் அதிசயமானேன்.
எட்டநின்று யாரெனவினவிக் கிட்டவந்தான்.
பயந்துபோனேனெனச் சிரித்தான்.
எத்தனை அழகிந்தக் கடலென்றேன்
விசித்திரமாய் என்னை விழித்தான்.
அழகுபார்க்கும் நிலையிலா உலகுளது என
சலிப்பது போலிருந்தது பார்வை.
நண்டு பிடிப்பேன்,
சிலநாளில் இறால்படும்
காலையில் வந்து குண்டிகழுவுவேன்.
இதிலென்ன அழகு என்பதுபோல
நடந்து கடலில் இறங்கினான்.
வீடு திரும்ப எழுந்து பார்த்தேன்
அழகு மீதான எந்தச் சிலிர்ப்புமின்றி
வலையும் கையுமாக கடலில் அவன்.
நந்திக்கடல் அவனுக்கு மகள்
எனக்குக் காதலி.
ஒரே பெண்ணானாலும் உறவுவேறு
நடந்தேன்.
□□




# நாம் எங்கே செல்கிறோம்?

சொக்கன்



ஏமாற்றுபவன் என்ற பொருளில் போக்கிலி (Fraud) என்ற சொல் தமிழில் வழங்குகின்றது. இது போக்கிரி எனத் திரிக்கப்படுவதும் உண்டு.

ஆனால் போக்கு + இலி என இதனைப் பிரித்தால் போக்கிடம் அற்றவன் என்ற பொருள்தான் மேலேழுவதைக் காணலாம். போவதற்கு இடமற்றவன் அகதி. ஈழத்தமிழர் வீடுகளில் வாழ்ந்தாலும் அகதிமுகாம்களில் அவலப்பட்டாலும் வெளிநாடுகளில் அடைக்கலம் புகுந்தாலும் ஒருவகையில் நாங்கள் எல்லோரும் போக்கிலிகள் - அகதிகள்தான்.

எமக்கென்று ஒரு நாடும் அதில் தலை நிமிர்ந்து எவருக்கும் ஆட்படாது வாழும் தன்னாண்மை வாழ்வும் கிட்டாதவரை நாம் போக்கிலிகளே; அகதிகளே!

ஒட்டுமொத்தமான இன எழுச்சியும் அதற்கு அடிப்படையான தன்மானமும் ஒருமுகப்பட்ட ஈகமும் ஒன்றாய் இணையும்பொழுதுதான் ஈழத்தமிழ் மண்ணிலே விடுதலைக் கதிரவன் தன் பேரொளியினை முழுமையாகப் பரப்புவான் என்பதற்கு ஐயம் இல்லை.

ஆனால்...

விடுதலை பெற்று நெஞ்சு நிமிர்த்தப்போகும் அந்நாளுக்கு, இன்றுள்ள எமது தமிழ்ச் சமூகம் எந்த அளவுக்குத் தகுதி உடையதாய் விளங்கப்போகின்றது என்பதே இன்று எம்முன் எழுந்து நிற்கும் மிகப் பாரிய கேள்வி.

எம் இளைஞர் மத்தியிலே நிலவும் வக்கிர உணர்ச்சிகள் அந்த உணர்ச்சிகளுக்குப் பால் வார்த்து வளர்க்கும் ஊடகங்கள் - சிறப்பாகத் தொலைக்காட்சி - என்பன எந்த அளவுக்குத் தமிழ் இனத்தை விட்டு வைக்கப்போகின்றன?

இளைஞரின் போக்கினைத் தீர்மானிக்கும் ஊடகங்கள் ஒரு சாராக, நடுத்தர வயதினரையும் முதியோரையும் கூட ஆட்டிப்படைக்கும் கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப்போவது எக்காலம்? உண்மையில் நாம் எங்கே சென்றுகொண்டிருக்கிறோம்?

“மக்கள் ஆட்சி நிலவும் நாடுகளில் வாழ்கின்றவர்களை நான்கு வகையினராய்ப் பிரிக்கலாம். காதலர், கூர்த்த நோக்கினர், பேராசைக்காரர், மடையர் என்பவர்களே அந்த நான்கு வகையினரும் இவர்களில் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்பவர்கள் மடையர்கள் (Fools) தாம்” என்பது றெயின் (Tain) என்ற மேற்திசை அறிஞனின் கூற்று.

மடையர்களாய் இருந்து அரை நூற்றாண்டாக ஏமாற்றப்பட்டு வந்த நாம் இனியும் மடையர்களாக இருப்பதா? இல்லை என்றால் இன்று கொடிகட்டிப் பறக்கும் தொலைக்காட்சி நாடகங்கள், ஆட்டங்கள், பாட்டங்கள், திரைப்படங்கள் (நீலத்திரைப்படங்களும் இவற்றுள் அடங்கும்) அவற்றினூடாக வெளிப்படுத்தப்படும் வல்லுணர்வுகள், ஆபாசங்கள், சமூக விரோதச் செயல்கள், நம்பகத் தன்மைக்கு அப்பாலான அடிபிடி சண்டைகள், பழிவாங்கல் உணர்ச்சிகள், பெண்மைக்குச் சமாதிகட்டும் காட்சிகள், உரையாடல்கள், பாலியல் ஊக்கிகள், கொலைகள், கொள்ளைகள் என்பவற்றை இன்னும் சகித்துக்கொண்டிருப்பதற்கு என்ன பொருள்?

நகைச்சுவை என்ற பெயரால் உரையாடல்களிலே கையாளப்படும் அநாகரிகச் சொல்லாட்சிகள் (நாயே,

தீவட்டித்தலையா, முட்டாள், மூதேவி முதலாய் நூற்றுக் கணக்கானவை) வலிமை உள்ளவன் வலியற்றவனை அடித்தல் உதைத்தல் முதலாய கீழ்த்தரச் செயல்கள், சோரம்போதலை முதன்மைப்படுத்தி நம் சமூகத்தை சிரிப்பார் சிரிக்க வைப்பது இவைதாம் நகைச்சுவை என்றால் அந்த நகைச்சுவை நாசமாகட்டும்.

நண்பர் என்றால் 'அடா' போட்டுத்தான் பேசவேண்டும். நண்பிகள் என்றால் 'அடி' போட்டுப் பேசுவதுதான் ஜதார்த்தம் என்ற காட்டுமிராண்டிப்போக்குகளுக்கு என்று முடிவு வைக்கப்படுமோ?

சமூக, இன, மொழி தேசப்பற்றுக்கள் தாம் கேலிக் குள்ளாக்கப் படுகின்றன என்றால் குடும்ப உறவுகளும் கேவலப்படுத்தும் வகையிலே காட்சிப்படுத்தப் படுகினறனவே! எல்லாவித குணக்கேடுகளும் ஊடகங்களூடாக ஊடுருவி வந்து இளைஞர் சமூகம் என்ற பாற்குடத்திலே நஞ்சினைப் பாய்ச்சுவதை ஏன் என்று கேட்க நாதியில்லாத, வெட்கம் கெட்ட ஓர் இனமாக நாம் சென்றுகொண்டிருக்கிறோம்.

மாட மாளிகைகள், புதுப்புது ரக மோட்டார்கள், ஆடம்பர தளபாடங்கள், லட்சக் கணக்கில் பணம் புரளுவது போன்ற 'பாவலா' கொண்ட ஒரு சிறுபான்மைக் குடும்ப அலகுகளே கதைகளூடாக வெளிவருகின்றன.

நடுத்தர மக்கள், ஏழை மக்கள் என்போருடைய பிரச்சினைகள், அவலங்கள் என்பவற்றுக்குத் தொலைக்காட்சி நாடகங்களில் இடமேயில்லை. சமூகப் பார்வையில் வெள்ளெழுத்து விழுந்ததென்று இரக்கப்பட முடியாதவாறு முழுப்பார்வையும் இழந்துவிட்ட ஒரு கலை வங்குரோத்துக்காரர்களைக் காண எமக்குக் கண்கள் உள்ளனவே என்று கவலைப்பட்த்தான் முடிகின்றது.

தமிழ் நாட்டிலே தண்ணீர்ப் பஞ்சம் நிலவுகிறது என்று கூக்குரல் இடுகின்றனர். அதனைப்போக்கிட எடுக்கப்படும் அரசியல் ரீதியான் முயற்சிகள் யாவும் புஸ்வாணமாகிவிட ஏழை உழவர்களில் பலர் தற்கொலை செய்கின்ற துர்ப்பாக்கிய நிலை அங்கு பரவலாகக் காணப்படுகின்றது. இவர்களுக்கு ஓர் உருப்படியான ஆலோசனையைக் கூறுவது இவ்விடத்தில் பொருத்தமானது எனக் கருதுகிறேன்.

தொலைக்காட்சி நாடகங்களிலே கிளிசரின் வாயிலாக ஆண், பெண் நடிகர்களுக்குச் செயற்கையாக உண்டாக்கி வழியச் செய்கின்ற கண்ணீரைத் தேக்கி வைத்தாலே தமிழ் நாட்டின் குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கி விடலாமே. அப்பப்பா! எந்தத் திறமையும் இவர்களுக்கு (நடிகர், நடிகைகளுக்கு) இல்லாவிடினும் இவர்கள் விம்மவும் பொருமவும் கதறவும் அழவும் நன்கு பழக்கப்பட்டிருக்கிறார்கள்.

தொலைக்காட்சி நாடகத்தில் பாத்திரம் ஏற்க வேண்டுமா? கண்ணாடி முன்னின்று கதறி அழப் பழகிக் கொள்ளுங்கள். உங்களைத் தொலைக்காட்சிக் கலைஞர் முதல் வரிசையில் சுக்கிரபூசை நடத்தி வரவேற்று உபசரிக்க எத்தனையோ தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும் சகோரபட்சிகள் போல - மழைத்துளிக்குக் காத்திருக்கும் சகோர பட்சிகள் போலக் காத்திருக்கின்றார்கள்.

திரைக்காட்சியில் ஒரு கதை தொடங்கி முடியும் அதிக பட்ச நேரம் இன்று இரண்டரை மணித்தியாலமே. எனவே அவற்றின் முடிவு ஏதோ ஒரு வகைப் படிப்பினையையோ (அது இன்றைய கலை வெளிப் பாடாக எவரும் ஏற்பதில்லை என வைத்துக் கொண் டாலும்) முடிவையோ அந்த நேர இடை வேளைக்குள் தெரிவித்து விடும்.

ஆனால் இருநூறு முந்நூறு நாட்கள் தொடர் நிகழ்ச்சிகளாக எதிர்பாராத திருப்பங்களுடன் நீண்டு செல்லும் Episodes தொலைக்காட்சி நாடகங்களின் கதாபாத்திரங்கள் அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் வக்கிர உணர்ச்சிகளுக்கு முடிவேயில்லை. இவை இளைஞர்களிடையே உளவியல் ரீதியான பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. முடிவற்ற கதைகளின், முடிவற்ற தீய பாத்திரங்களே அவர்களின் நெஞ்சங்களை நிறைத்து தேவர்களாகவும் தேவதைகளாகவும் உலாப் போகின்றனர்.

உடைகளை உடுத்தலைப் போடுதல், தரித்தல், அணிதல் என்ற பெயர்களாலும் அழைப்பதுண்டு.

போடுதல் என்பது சட்டைகளை உடம்பில் இடுதலைக் குறிப்பது.

தரித்தல் என்பது உடலுக்குப் பொருத்தமான வகையில் தெரிவுசெய்து இடுதல்.

அணிதல் என்பது அழகுணர்வுடன் இட்டுக் கொள்ளுதல்.

இவற்றோடு உடைகளை வேண்டா வெறுப்போடு போட்டுக்கொள்ளலையும் உடுத்தல் என்ற சொல்லின் மற்றொரு பொருளாக கொள்ளத்தக்க அளவிற்கு ஆடைகள் போடப்படுகின்றன. கூந்தல்கள் கண்ணகிக்கு வக்காளத்து வாங்குகின்றன.

பண்பாடு, நாகரிகம் பழம்பெருமையுடையது என்று விரித்தும் தெளித்தும் போற்றியும் புகழ்ந்தும் பேசப்பட்ட தமிழினம் அவ்வாறு பேசப்பட வேண்டிய நிகழ்காலத்தைத் தொலைத்துவிட்டது. அப்படியானால் அதன் எதிர்காலம்?

நாம் எங்கே செல்கிறோம்?

# கடலும் தமிழ்ப் பண்பாடும்

## தமிழ் மக்களின் வரலாறு, பண்பாட்டுப் பிரக்ஞையினுள் 'கடல்' பெறும் இடம் பற்றிய ஓர் உசாவல்

பேராசிரியர் கா.சிவத்தம்பி



செந்தோழன்

### I

கடல் எனும் இயற்கை அலகு தமிழ்ப் பண்பாடு என விளங்கிக்கொள்ளப்படும் தமிழர் வாழ்வியல் தொடர்ச்சி நில்ல உணர்வின் இருப்பிலும் பேணுகையிலும் எத்தகைய இடத்தினைப் பெறுகின்றது என்பது பற்றிய ஒரு புலமை உசாவலாக இக் கட்டுரை அமைகிறது. இந்த உசாவலின் ஆழ அகற்சி வரையறைகளைத் தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமாகும். இம்முயற்சியின் பொழுது பண்பாடு என்பதன் இயல்பு நன்கு புரிந்துகொள்ளப்படல் வேண்டும். பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தினைப் பற்றி தெரிவிக்கும் அதன் உயிர்ப்பு நிலை. (The Unforming Spirit of a Community) என றேமண்ட வில்லியம்ஸ் கூறுவது மிக முக்கியமானதாகும். இதில் தெரியப்படுத்தல் என்பது ஒரு முக்கியமான சொல். அதாவது அந்தப் பண்பாட்டினுள் வாழ்வோருக்கும் அந்தப் பண்பாட்டினை அறிய விரும்புவோருக்கும் தெரியப்படுத்துதல் என்பதாகும். ஒரு பண்பாட்டினுள் வாழ்பவருக்கு தமது பண்பாடு பற்றிய தன்னிலை உணர்கையே முக்கியமானபடியால் இந்தத் தெரிவித்தலை அந்தப் பண்பாட்டினுள் வாழ்பவருக்குத் தெரிவித்தல் என்று கொள்வது முக்கியமானது. சற்றுத் தெளிவாகக் கொள்வதானால் தமிழர் ஒருவர் தமிழ்ப் பண்பாடு என எதனை உணர்ந்து கொள்கிறார் என்பதே இங்குள்ள அச்சாணியான பிரச்சினையாகும்.

இந்த உணர்கை இரண்டு நிலைப்பட்டது.

1. தனது இன்றைய வாழ்வினூடே - இருப்பினூடே - சீவிப்பினூடே தன்னைத் தமிழர் என்று உணர்ந்துகொள்வதற்கான நடைமுறைகள், சித்தநிலை ஆகியனவாகும்.

2. கடந்தகால வரலாற்றின் பேறாக ஆனால் வெறும் வரலாறாக இல்லாமல் இன்றைய இருப்புடன் இணைவதாக உள்ள ஒரு நினைவுப் பேறாகவும் (tressured historical legacy) தொழிற்படல் வேண்டும். உண்மையில் பண்பாடென்பது வரலாறல்ல. வரலாற்றின் பெறுபேறாக வந்து, எம்மைப்பற்றிய ஓர் அடையாள உணர்கையாக அமைவது ஆகும்.

பண்பாடு பற்றிய மேற்கூறிய அடிப்படை உண்மையை மனதில் நிறுத்திக்கொண்டு பண்பாட்டின் உருவாக்கம்

எவ்வாறு நிகழ்கிறது என்பதனை நோக்கும்போது அவ்வச் சமுதாயங்கள் வாழுகின்ற, வாழ்ந்துவருகின்ற, வாழ்ந்துவந்த சூழல் முக்கியமாகிறது. சூழல் என்பது இயற்கைச் சூழல், சமூகச் சூழல் ஆகிய இரண்டும் ஆகும். இயற்கைச் சூழல் என்பது சமூகச் சூழலையும் தீர்மானிக்கும் நிலம், தட்ப வெட்பம், புல் பூண்டு, சூழவுள்ள உயிரினங்கள் ஆதியனவற்றைக் கொண்டது. தொல்காப்பியம் பொருளதிகாரம் கவிதைக்கு உரிய பொருள் முதல் நிலையில் நிலத்தையும் காலத்தையும் கொண்டு அந்த நிலத்து வாழ்க்கையின் கருவாக (The Wamb of Life) அதனுள்ளிருந்தே உணர்வுகள் தோன்றும். உண்மையில் அந்தக் கருதான் நமது பண்பாட்டின் தொகுதி. தெய்வம், உணவு, மிருகம், மரம், பறவை, தோல்வாத்தியம் ஆகிய இவற்றுடன் அந்தப் பிரதேசத்துக்குரிய இயல்பான பொருளாதார நடவடிக்கையும் இணைத்துக்கொள்ளும். இவை யாவும் அந்த முதலாகிய நிலத்தினை தளமாகக் கொண்டு இயங்கும்.

II

இவ்வாறு பார்க்கும்போது தமிழகம் என்று கொள்ளப்படத்தக்க புவியியற்பரப்பின் இயற்கைக் கூறுகள் யாவை என்பதனை நோக்கல் வேண்டும். ஏனெனில் தமிழ் நாட்டில் அந்தப் பௌதீக அமைப்புத்தான் தமிழர் பண்பாட்டின் ரிஷிமூலமும் நதிமூலமுமாகும். ஒட்டு மொத்தமான இந்திய உபகண்ட நில அமைப்பினுள் வைத்துப் பார்க்கும் போது வடவேங்கடம், தென்குமரி ஆயிடை காணப் படும் தமிழ் கூறும் நல்லுலகத்தில் பிரதான புவியியல் அம்சம் அது ஒரு தீபகற்பமாக அமைவதுதான். அதாவது தமிழ்நாட்டின் மேற்குக் கரையோரத்திலும், கிழக்குக் கரையோரத்திலும் தெற்குக் கரையோரத் திலும் அது கடலாற் சூழப்பட்டுள்ளது. இந்தியாவின் தூர தெற்கு (Far South) என்று கொள்ளப்படும் தமிழகம் உஷ்ணவலயப் பிரதேசத் தீபகற்பமாகும். இந்நிலை காரணமாக இது வடகிழக்கு பருவப் பெயர்ச்சிக் காற்றாலும் தெற்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றாலும் பாதிக்கப்படும் ஒன்றாகும். தொல்காப்பியர் காலத்தில் மேற்குத் தமிழகமாகவிருந்த சேரலர் (கேரளர்) பிரதேசம் தனிப் பண்பாட்டு, மொழி அலகாக ஆகியதன் பின்னர் கிழக்குக் கடற்கரையோர வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றே முக்கியமா கிறது. இந்த வடகிழக்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று தமிழ்நாடு இந்திய மாநிலத்து விசாகப் பட்டினம் முதல் தமிழகத்தின் தென்பகுதியாக அமைந்துள்ள ஈழத்தின் கிழக்குக் கரையோரம் வரை முக்கியப்படுகிறது. தமிழகத்திலும் ஈழத்தின் கிழக்குக் கரையோரத்திலும் மலைகள் எவையும் இல்லாததால் இப் பருவப் பெயர்ச்சிக் காற்றின் முழுத் தாக்கமும் அப்பிரதேசத்தி னுள்ளே படுகிறது. சூறாவளிக்காற்று, வெள்ளம் கடல்கரைமீறி உள்ளே போதல் ஆகியன அடிக்கடி நிகழ்கின்றன. கடல்வழி வரும் இக்கொந்தளிப்புக்கள் காரணமாகத் தமிழகத்துக் கிழக்குக்கரைப் பட்டினங்கள் கடலால் கொள்ளப்பட்டன. என்றும் அந்தக் கடல் கோள்கள் காரணமாக தமிழ்ச் சங்கங்கள் அழிந்தன என்பதும் தமிழ்நாட்டின் வரலாற்று மரபோடு இணைந்துவிட்ட ஓர் விடயமாகும். இந்தக் கடல்கோள் என்பது தமிழர் நினைவில் மிகமிக ஆழமாகப் பதிந்துள்ள ஒரு நினைவாகும்.

இறையனார் களவியலுரையில் வரும் தமிழ்ச் சங்கங்கள் பற்றிய ஐதீக எடுத்துரைப்பில் இக்கடல் கோள்கள் குறிப்பிடப்படுகின்றன. தமிழரின் உணர்கை மரபினுள் கி.பி.5ம், 6ம் நூற்றாண்டுகளிலேயே இந்நினைவு இத்துணை ஆழமாகப் பதிந்திருந்தது என்பதற்குச் சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் வரும்

> "வடிவேலெறிந்த வான்பகை பொறாது
> ப∴றுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள....."
> *(18-20)* என்ற வரிகள் சான்றாகும்.

இத்தீபகற்பத் தன்மை காரணமாக இந்தியாவின் உள்ளேயுள்ள நாடுகளைத் தவிர மற்றைய நாடுக ளுடன் தொடர்புகொள்ள வேண்டிய தேவையோ உந்துதலோ தமிழருக்கு ஏற்பட்டபொழுது அத் தொடர்பை கடல் மார்க்கமாகவே செய்யவேண்டிய ஓர் அத்தியாவசியத் தேவை இருந்தது. இன்றும் இருந்து வருகிறது. இதனால் கடல் வழிப்போக்கு வரத்து என்பது தமிழரின் உலகநிலை நின்ற தொடர்புகளுக்கு மிகமிக முக்கியமான ஒன்றாகிறது. இவர்கள் கடல்மார்க்கப் பயணத்திற்கான தொழிற் பாடுகளை மேற்கொள்ளுவது ஏறத்தாழ புவியியல் அத்தியாவசியமாகிவிடுகிறது. அத்தகைய ஓர் உந்துதல் நிலையில் கடல், கடற்பயணங்களுக்கான கலங்களை ஆக்குவதென்பது இப்பண்பாட்டினுடைய இருப்பிற்கும் தொடர்ச்சிக்கும் அத்தியாவசியமாகிறது.

தமிழகத்தின் தென்கிழக்குப் பகுதியில் அமைந் துள்ள இலங்கையும் குறிப்பாக அதன் மேற்குக் கரை யோரமும் கிழக்குக் கரையோரமும் இந்த வாழ்நிலை நிர்ப்பந்திப்புக்கு ஆளாகின்றன. இதனால் இலங்கை யின் மேற்குக் கரையோரத்திலும் கிழக்குக் கரை யோரத்திலும் கடல்மார்க்கப் பயணம் முக்கிய மாகின்றது.

தமிழகம், வடகிழக்கு இலங்கையின் இந்தப் புவியியல் நிலை காரணமாக இப்பிரதேசம் ஆசியா வின் மிகப் பிரதானமான கடற்சந்தியாக உள்ளது. மேற்கே அரபிக்கடல் முதல் இந்து சமுத்திரம் வரையி லிருந்து கிழக்கே தென்கிழக்காசிய, சீன, ஜப்பானிய பிரதேசங்கள், அவுஸ்திரேலியா என வரும் நிலப் பகுதிக்குக் கீழ்ப்பட்ட கடற்பிரதேசத்தில் தமிழகத் தீபகற்பம் முக்கிய புள்ளியாக அமைகிறது. இந்தப் புள்ளி தென்னிந்தியத் தீபகற்பத்தையும் இலங்கையை

யும் தன்னுள் உள்ளடக்குகிறது. இதனால் மேற்குக் கரையோரத்திலும் கிழக்குக் கரையோரத்திலும் கடற்கரைப் பட்டினங்கள் தோன்றுகின்றன. இந்தக் கடற்கரைப் பட்டினங்கள் தமிழர் பண்பாட்டில் மிகுந்த இடத்தைப் பெறுகின்றன. இவ்விடத்தில் இந்து சமுத்திரப் பெருங்கடற் பரப்பில் தமிழகத்துக்குள்ள இந்த இருப்பின் முக்கியத்துவமே எடுத்துக் கூறப்படு கின்ற படியால் இங்கு அவை விவரிக்கப்படவில்லை.

இக்கட்டத்தில் அழுத்திக் கூறப்படவேண்டிய அம்சம் இப்பிரதேச வாழ்க்கை கடல்வழியாக வரும் மேற்கு நிலைத் தொடர்புகளுக்கும் கிழக்குநிலைத் தொடர்புக ளுக்கும் தன்னை ஆட்படுத்திக் கொள்வதுதான். இது ஆழமான முக்கியத்துவம் கொண்டது. இதனால் யவனம் முதல் சீனம் வரையிலான ஓர் இணைவு தமிழக நிலையினுள் காணப்படுகின்றது. இதனை நாம் ஓர் வரலாற்றுத் தரவாக பார்த்து ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு மாத்திரம் உரியதாகக் கொள்ளவேண்டு வதில்லை. இவ்வம்சம் இப்பிரதேசத்தின் வாழ்க்கை மரபினுள் இணைந்துவிட்ட ஒன்றாகும். கிரேக்கச் சொல்லான ‘Hora’ (ஓரை) என்பது முக்கிய வேளைகளைக் குறிக்கப் பயன்படுத்துவது. அரபு வழிவரும் இஸ்லாமிய சித்தர் முதல் சீனச் சித்தர் மரபுவரை தமிழகத்துச் சிந்தனை மரபினுள் ஓர் இணை நிலை காணப்படுகின்றது என்கின்ற உண்மை மிக முக்கியமானதாகும். சித்தர் மரபு தென்னிந்தியாவின், உண்மையில் திராவிடத்தின் ஒரு முக்கிய கூறு என்பர். அது தமிழ்நாட்டில் நிறைந்த பொலிவைப் பெற்றது.

இவ்வாறாக தமிழ்நாட்டின் தீபகற்ப நிலை அதன் பண்பாட்டு உருவாக்கத்தில் முக்கிய இடம் பெறுவ தாகும். இவ் உஷ்ணவலய தீபகற்ப நிலைப்பாடு கடலையும் காற்றையும், மலையையும் வெய்யிலை யும், சந்திரனையும் சூரியனையும் விதந்து போற்று வதற்கான ஒரு சூழலை ஏற்படுத்திற்று என்று கொள்ள வேண்டும் போலத் தெரிகிறது. இதன் பிரதிபலிப்பினை நமது இலக்கியப் பாரம்பரியத்திலேயே காணலாம். திருக்குறள் வான் சிறப்பை (மழையை) பாயிரத்துள் ஒன்றாகக் கொள்ளும். சிலப்பதிகாரமோ நூலின் தொடக்கத்தில் சூரியனையும் சந்திரனையும் மழையை யும் போற்றுவதைக் காணலாம். இதற்கான காரணம் பற்றிய ஆய்வு மிக முக்கியமானதாகும். குறிப்பாகச் சூரியனும் சந்திரனும் மத ஐதீகத் தொடர்புகளின்றி இயற்கைச் சக்திகளாகவே வியந்து போற்றப்படுவது மிகமிக முக்கியமானதொரு உண்மையாகும். சூரியன் பற்றிய வேதக் குறிப்புகளில் ஐதீகக் குறிப்புகள் பல இணைந்துவரும். இங்கு வெயில், நிலவு, மழை ஆதியன இயற்கைத் தொழிற்பாடுகளாகவே போற்றப் படுகின்றன. இந்த இயல்பின் தொடர்ச்சியை நாம் இப்பொழுதும் காணலாம். தை, சித்திரை மாத வருடப்பிறப்புக்களின் போது செய்யப்படும் பொங்கல் இந்த இயற்கை நிகழ்ச்சிகளின் கூறுகளோடு இணைந்தே போற்றப்படுவதை அவதானித்தல் வேண்டும்.

மொழியைப் பண்பாட்டின் வேராகவும் விழுதாகவும் கொள்ளல் வேண்டும். அவ்வப்பண்பாட்டுக்குரிய சொற்கள் அவ்வப்பண்பாடுகளில் மொழிக்குரியன வாகவே இருத்தல் இயல்பு. மொழிக்கும் பண்பாட்டிற் கும் உரிய ஊடாட்டம் அத்தகையது. எஸ்கிமோ மொழி யில் பனிக்கட்டி நிலையை 72 வெவ்வேறு நிலைப்படுத் திக் காட்டுகின்ற சொற்கள் உள்ளன என்பர். கடல் பற்றித் திவாகர நிகண்டு தரும் பட்டியல் சுவாரசியமான தாகும்.

“அத்தி, பௌவம், அளக்கர், ஆர்கலி.
ஆழி, பெருநீர், அம்பரம், முந்நீர்
உப்பு, வீரை, சக்கரம், சாகரம்
வேலை, வெள்ளம், மகாலயம், நேமி
சலந்தி, வாரி, சலதி, அலையே.
பாரா வாரம், உத்த சமுத்திரம்
பரவை, உவாவே, நரலை, புணரி
வேலா வலயம், கார்கோள், ஓதம்
வாருணம், சிந்து, வாரம், அம்புராசி
(கார்மலி) உவரி, கடல் எனக் கருதுவர்
(திவாகரம் 878)

பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த கடலுக்கான இச் சொற்களஞ்சியத்தைப் பார்க்கும்போது இடைக்காலத் தமிழகத்தில் சமஸ்கிருத நிலைப்பட்ட வைதீக இந்துப் பண்பாடு எத்துணை ஆழமாக வேரூன்றிவிட்டது என்பது இப்பட்டியலில் வரும் வடமொழி அடியினை உடைய சொற்களான பௌவம், அம்பரம், சக்கரம், சாகரம், மகாலயம், நேமி, சலநிதி எனவரும் சொற் களாற் தெரிகிறது.

ஆனால் அதேவேளையில் ஆழி, வாரி, புணரி என வரும் முற்றிலும் தமிழ்ப் பெயர்களும் நின்று நிலைப்பதைக் காணலாம். கடல், ஆழி, என்பன திராவிடச் சொற்கள் என்பது DED திராவிடச் சொற் பிறப்பியல் அகராதி மூலம் தெரியவருகிறது.

III

இந்தியக் கவிதை மரபில் தமிழ்க்கவிதையின் தனித் துவம் அது வடமொழிச் (பாளி, சமஸ்கிருதம்) செல்வாக்குகளுக்கு உட்படுவதற்கு முன்னர் பெற்றிருந்த சூழலியல் தன்மையிலேயே காணப்படுகிறது என்லாம். மக்கள் வாழ்ந்த குடியிருப்புப் பாரம்பரியங்களின் அடிப் படையில் அக்குடியிருப்புக்களின் புவியியல், சமூகவி யல் கூறுகளினூடாகவே - ஆண், பெண் உறவு வழிநின்ற கவித்துவ உணர்ச்சி வெளிப்பாடு அமைந்திருந்தது. அந்தக் கவித்துவப் பாரம்பரியத்துக்கான இலக்கண அமைதியினைக் குறிப்பிடுவது திணை மரபு ஆகும். இச்சமூக - கவித்துவ மரபினைத் திணைமரபு என்பது தமிழ் மரபு திணையே நிலம், குலம், ஒழுக்கம் என பிற்காலத்து நிகண்டு ஒன்று விளக்கம் கூறும்.

இந்தத் திணை மரபில் அவ்வந் நிலங்களுக்குரிய "ஒழுக்கம்" அவ்வப் பிரதேசங்களுக்குள்ள பிரத்தியேக இயல்புகளைக் காட்டும் பூவின் பெயரால் குறிப்பிடப் பெற்றது. அந்நிலஞ்சார் குடியிருப்புக்கள் பின்வருமாறு அமைந்தன. மலையும் மலைசார்ந்த இடமும் (குறிஞ்சி), காடும் காடுசார்ந்த இடமும் (முல்லை), வயலும் வயல் சார்ந்த இடமும் (மருதம்) கடலும் கடல் சார்ந்த இடமும் (நெய்தல்). இவ்வாறு கூறுவது உண்மையில் உரையாசிரியப் பாரம்பரியத்தை ஒட்டியதாகவே உள்ளது. இதற்கான தொல்காப்பியச் சூத்திரத்தின் அழுத்தம் இந்த முறையில் அமையவில்லை.

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மை வரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனச்
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே.
(அகத்திணையியல் சூ.5)

இக்குறிப்பில் மலை; மலைவாழ் குடியிருப்பு, தெளிவாகவே குறிப்பிடப் பெறுகிறது. ஆனால் காடுறை உலகம் என்பதில் காடு உள்ள உலகம் (இங்கு உலகம் என்பது அவர்களின் இருப்பு வட்டமாகும்) என்ற குறிப்புத்தான் உள்ளதே தவிர அந்தக்குடியிருப்பு காடு திருத்தப்பட்ட குடியிருப்பு என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. (காடு கொன்று நாடாக்கிய என்று கூறுவது தமிழ் மரபு. ஆனால் இங்கு காடு உள்ளது. ஆனால் வாழ்க்கை காட்டில் இல்லை.) அதேபோன்று வயலும் வயல் சார்ந்த இடமும் பற்றிப் பேசும்போது நீர்பாசனத்துக்குரிய நீரையே பிரதானப்படுத்திக் கூறுகிறார். தீம்புனல் உலகம் என்பதில் தீம்புனல் என்பது நன்னீர் ஆகும். நன்செய் நிலத்துக்கு வேண்டியது நன்னீர்.

இவ்விவரிப்பில் நமக்கு முக்கியமானது கடல்பற்றிய குறிப்புஇல்லாது பெருமணல் உலகு என்று கடற்கரை குறிக்கப் பெறுவது. தமிழ்நாட்டின் கிழக்குக் கரையோரப் பகுதியின் புவியியல் தன்மையை தெரிந்தவர்களுக்கு இதன் முக்கியத்துவம் விளங்கும். ஏனெனில் இப்பிரதேசத்தில் கடற்கரையை அடுத்து கழிநிலம் இருக்கும். அந்தச் சதுப்பு நிலத்தின் எல்லையில் மீனவக் குடியிருப்புக்கள் இருக்கும். மாரிகாலத்தில் கரையை மீறிப் பாய்ந்த கடல் கழிகளைத் தோற்றுவித்திருக்கும். அந்த நீர் கடலுக்குள் திரும்பிப் பாய்ந்து விடுவதில்லை. இந்தநீர்நிலை யோரங்களில் - கழியோரங்களிலே காணப்படும் ஒரு மெல்லிய சதுப்புநிலக் கொடியே நெய்தல் கொடியாகும். அதன் பூ சற்று நீல நிறமானது. உண்மையில் இது அலைவாயிலுள்ளதல்ல சற்று உள்ளே உள்ளது. இதில் வாழ்பவர்கள் மீன்பிடி, உப்பு விளைவித்தல் ஆதிய காரியங்களில் ஈடுபடுபவர். முதல் மூன்று திணைகளிலுமுள்ள மக்கள் போன்று நிச்சயமாக முல்லையிலும் மருதத்திலும் உள்ளவர்கள் போன்று இவர்கள் தாம் வாழும் சூழலின் இயற்கையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்துபவர் அல்லர். இங்கு இவர்களுடையது கடலை நம்பிய சீவியமே அல்லாமல் கடலைத் தம்வசப்படுத்தும் சீவியம் அல்ல. இதனால் இந்தத் திணையில் மனித வலுவின் ஆதிக்கப் பதிகை இல்லை. இயற்கை வலுவின் ஆதிக்கத்திலேயே வாழ்க்கை நடைபெறுகிறது. இதனாற் போலும் இந்நிலத்து மக்களின் ஆண் - பெண் உறவில் மற்றைய நிலங்களிற் காணப்படாத ஒரு இயலாமை


சேந்தூரன்

இரங்கல் காணப்படுகிறது எனலாம். இந்த இரங்கல் இந்த நிலத்தின் பண்பாடாக இன்றுவரை உள்ளது. 'கடல் மேல் பிறக்க வைத்தான் எங்களைக் கண்ணீரில் பிழைக்க வைத்தான்' - என்ற வாலியின் பாடல்வரை, புதுவை இரத்தினதுரையின் மிகவும் பிரசித்தமான 'வெள்ளிநிலா விளக்கேற்றும் நேரம்' என்னும் பாடல்வரை இந்த வாழ்க்கையின் ஏக்கங்கள் தெரிகின்றன.

மீன்பிடியையும் உப்பு விளைவித்தலையும் பிரதான தொழிலாகக் கொண்ட இந்நில மக்கள் தங்கள் மீன்பிடிக்காக கடலில் நெடுந்தூரம் சென்றனர் என்று கொள்ளுவதற்கு இடமில்லை.

அண்மையில் செய்யப்பட்ட ஆராய்ச்சி ஒன்றில் அகநானூற்றில் வரும்,

நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை
கடல்பாடு அழிய இனமீன் முகந்து
துணை புணர் உவகையர் பரத மாக்கள்
இளையரும் முதியரும் இளையுடன் துவன்றி
உப்பு ஒய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன் பகடு ஒப்பக் குழிஇ
அயிர் திணி அடைகரை ஒலிப்பவாங்கி
பெருங்களம் தொகுத்த உழவர்போல
இரந்தோர் வறுங்கலம் மல்கவீசி
பாடுபல அமைத்து கொள்ளை சாற்றி
கோடு உயர் திணி மணல் துஞ்சும் துறைவ!
(அகம் 30:1-11)

**குறிப்பு:** இன்று நடைபெறும் கரைவலை மீன்பிடித் தலையே குறித்ததாதல் வேண்டும் என்று கூறுகிறது.

மேலும் நெய்தல் நில வாழ்க்கையைப் பற்றிய குறிப்புகளைப் பற்றிப் பார்க்கின்றபோது அந்த வாழ்க்கை இன்றைய் ஒரு சொற்றொடரைப் பயன் படுத்திக் கூறுவதானால் வறுமைக்கோட்டு நிலை வாழ்க்கையாகவே காணப்படுகின்றது, இவர்களு டைய தொழில் வழியாக குறிப்பிட்ட அளவுக்குமேல் அதாவது விற்பனைச் சாத்தியப்பாட்டுக்குமேல் பிடிக்கப்பட்டால் அதனையே கருவாடாக்க வேண்டியி ருந்ததே தவிர ஒரு பெரு உபரியைத் தோற்றுவித் திருக்க முடியாது. இதனால் அன்றாடச் சீவியத்துக்கு அப்பால் கையிருப்போ சேமிப்போ இருப்பதற்கான வாய்ப்பும் இருக்கவில்லை. அந்தப் பொருளாதா ரத்தின் ஒட்டுமொத்தமான கீழ்நிலைக்கு இது காரணமாக இருக்கலாம். நெல்லுக்காக மீன் விற்றனர் என்று கூறப்படுகின்றது. உப்பு எல்லோருக்கும் தேவைப்பட்ட ஒரு பொருள் எனினும் அதன் விற் பனையால் இவர்கள் பெருமளவு பணம் சம்பாதித் தனர் என்று சொல்ல முடியாது. உப்பு வணிகம் ஒரு குறை விருத்தியுள்ள நிலையிலேயே காணப் பட்டது. தெய்வமாக சுறா எலும்பு கொள்ளப்பட் டதற்கான தரவுகள் உள்ளன. பெரும்பாலும் பெருங் கடலில் உள்ள சுறா இந்தச் சாதாரண மீன்பிடியாளர் களிடத்து ஏற்படுத்திய பய உணர்வையும் அக்குறிப் புகள் சுட்டுகின்றன எனக்கொள்ளலாம். இன்றும்கூட இப்பகுதி மக்களின் வாழ்க்கை முறையிலே பெரு மாற்றம் ஏற்பட்டுவிட்டதாகக் கூறமுடியாது என ஓல்ச்சின் தம்பதியர் தமது 'The Birth of Indian Civilization' என்ற நூலில் கூறுவர்.

ஏறத்தாழ இன்றைய மீனவக் குடும்பங்களிலே காணப்படும் வாழ்க்கை முறையே அக்காலத்திலும் இருந்தது எனக் கொள்ளலாம். ஆனால் கடல்சார் தமிழர் வாழ்வியலில் உண்மையில் நெய்தல் நிலத்துப் பட்டினங்களோடு தொடர்புற்று நின்ற இன்னொரு வாழ்க்கைமுறை இருந்தது. துரதிஷ்ட வசமாக திணை வகுப்பினுள் அது முக்கியத்துவப்படுத்தப்படவில்லை. கடலோரப் பட்டினங்களாக விளங்கிய புகார் போன்ற இடங்கள் பிறநாட்டு வணிகத் தொடர்புகள் காரணமாக மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருந்தன. சங்க இலக்கியத்தில் பேசப்படும் புகார் பட்டினத்தை நல்ல உதாரணமாகக் கொள்ளலாம். கடற்கரையோரத்தைச் சார்ந்த அப்பட்டினம் வளம் மிக்க ஒரு பகுதியாகவே காணப்படுகின்றது. கப்பல்கள் வருவதும் போவதும் பிரதானமாகக் கட்டி நிறுத்தப்பட்டுள்ளமையும் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளன. இக்கடல்



வணிகத்தால் வரும் இலாபம் மிகப் பெரிய இலாபம் இது முற்றிலும் வணிக நிலைப்பட்ட வாழ்க்கை யாகவே தெரிகிறது. நிர்வாக விடயங்களைத் தவிர்ந்த விடயங்களில் அரச பிரசன்னம் இருந்ததாகவே கொள்ள முடியாது உள்ளது. இந்த வணிக வாழ்க்கை யில் ஏறத்தாழ கி.பி. 2 முதல் 4/5 வரை நிலவிய இந்தோ - ரோம வணிகக் காலத்தில் சிறப்புற்றிருந்தது என்பதற்கு 'வினைய வினிச்ச' போன்ற பௌத்த நூல்கள் சான்று பகிர்கின்றன.

ஐஸ்வரியம் நிறைந்த இந்த வணிக வாழ்க்கை முறை பெருமணல் உலகுக்குரியதெனக் கூறப்படும் வாழ்க்கை முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட தாகும். உண்மையில் வணிகம் சார்ந்த பட்டினங்களை நகரமயவாக்கலுக்கான குறிப்பாகவே கொள்ளல் வேண்டும். பண்டைய தமிழகத்தில் அரசனுடைய இருப்பைப் பற்றி அல்லது முக்கியத்துவம் பொருந்திய குடியிருப்பைப் பற்றி பேசும்போது நகர் (நகரம்) என்ற சொல் பயன்படுத்தப்படுகின்றது. இது முற்றிலும் ஒரு திராவிட மொழிச் சொல்லாகும். (DED)

ஆங்கிலத்தில் Urbanization க்கான நடைமுறையை நகரமயவாக்கம் என நாம் இப்பொழுது மொழி பெயர்க்கிறோம். அடிப்படையில் அதில் தவறு இல்லை எனினும் தமிழ்நாட்டின் வரலாற்றில் நகரமய வாக்கம் என்பது கடற்கரைப் பட்டினங்களிலேயே தொடங்குகிறது. பின்னர் இது கும்பகோணம் போன்ற உள்ளூர் மத்திய இடங்களுக்கு விரிவடைகிறது. பிற்காலகட்டத்தில் கோயில்கள் நகர மயவாக்கத்தின் மையங்களாகின்றன. தமிழ் நாட்டின் முந்து வரலாற்று நிலையில் வணிகப் பட்டினங்களையே பிரதான நகரமயவாக்க தொடக்க மையங்களாகக் கொள்ளல் வேண்டும். (புகார், முசிறி போன்றவை) சங்க இலக்கியத்தின் குறைபாடு என்னவென்றால் தமிழ்நாட்டின் நகர மயவாக்கப்பட்ட சூழலில் நிலவிய ஆண் - பெண் உறவு பற்றிக் குறிப்பிடாதுவிட்டமையே ஆகும். நெய்தல் வாழ்க்கை வணிகப்பட்டின வாழ்க்கை ஆகாது. 'படுதிரை வையப்பாத்திய' பண்பின் அடிப்படையில் இதுவும் கடற்கரையே எனினும் இது நெய்தல் நிலம் சுட்டும் கழிமுக வாழ்க்கையைக் கொண்டதன்று. இது உபரி மிகுந்த மன்னர்கள் செல்வந்தர்களின் வாழ்க்கையையும் உள்ளடக்கியதாகும். இந்த உண்மையை மனங் கொண்டு சிந்திக்கும்போதுதான் நெடுநல்வாடையில் வரும் அரசிருக்கை நகரம் எவ்வாறு திணை மரபையே கேள்விக்குள்ளாக்குகிறது என்பது புலப்படும்.

இந்த வணிக வாழ்க்கையினுடைய பிரதான அம்சமாக அடுத்துப் பேசப்படவேண்டியது அந்நிய அல்லது பிறநாட்டு வணிகத்தொடர்பும் இந்த வணிக வாழ்க்கைக்கான வணிகர்களது பொருளியற் கூட்டமைப்புமாகும். உரோமத் தொடர்புக்கான நாணய, அகழ்வாய்வுச் சான்றுகள் பெரும்பாலும் அதனைக் கிறிஸ்த்துவுக்குப் பின் முதலாம் நூற்றாண்டுக்கு உரியனவாகவே கொள்ளுகின்றன. உரோம நாணயங்களைப் பின்பற்றி உள்ளூர் நாணயங்களை வேந்தர்கள் குறிப்பாகச் சேரர்கள் வெளியிட்டனர் என்று சுப்பராயலு போன்ற வரலாற்று ஆசிரியர்கள் கருத்துக் கூறுகின்றனர். மேற்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற வாசனைத் திரவியங்களாகிய மிளகு, திப்பிலி போன்றவை பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களில் பரக்கக் காணப்படுகின்றன.

சங்க காலத்தின் இறுதி எனக் கொள்ளப்படும் காலப்பிரிவிலேயே இந்த வணிக மேலாண்மை மேல்நிலைப்பட்டிருத்தல் வேண்டும்.

பட்டினப்பாலையில் வரும் புகார்ப்பட்டின விவரிப்பினை சிலப்பதிகாரத்தில் வரும் புகார்ப்பட்டின விவரிப்போடு ஒப்பிடும்போது இந்த வளர்ச்சியினை நாம் காணலாம். வணிகர்களின் சமூக வாழ்க்கை எத்துணை கட்டிறுக்கமாக அமைந்திருந்தது என்பதனையும் எத்துணை உபரிச் செல்வத்தை உடையதாய் இருந்தது என்பதனையும் இந்திரவிழாவெடுத்த காதை, கடலாடுகாதை என்பவற்றால் அறியலாம். புகார் முற்றிலும் ஒரு நகர் (Urban) மையமாகவே விளங்கிற்று. தமிழ் நாட்டின் பிற்கால நகரமயவாக்கப் போக்கினை தென்னிந்தியாவில் வணிகம், கருத்து நிலை, நகரமயவாக்கம் (Trade Ideology and Urbnization In South India 300 BC to AD 1300) என்ற செண்பகலட்சுமியின் நூலில் காணலாம்.

வணிகத்தில் ஈடுபட்டிருந்த கப்பல்கள் வணிகர்களது உடைமையாகவே காணப்பட்டன என்று கொள்வதற்கு இடமுண்டு. தமிழகத்தின் கப்பல் கட்டும் கலைபற்றிய விபரங்கள் விரிவான வரலாற்று ஆய்விற்கு உட்படுத்தப்படவில்லையெனினும் சாத்தன் குளம் இராவகன் அவர்கள் எழுதிய கப்பற்கலை இவ்விடயத்தில் அரிய தகவற்கருவூலமாகவே உள்ளது. கரையோரத்திற் பயன்படுத்தப்படும் கட்டு மரம்முதல் தோணி, கப்பல் போன்ற பல்வேறு மரக்கலங்கள் பற்றிய குறிப்புக்களை நாம் காணக் கூடியதாக உள்ளது. கி.பி.10ம் நூற்றாண்டைச் சேர்ந்த திவாகரத்தில் பின்வரும் மரக்கலப் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

'வங்கம், பாதை, தோணி, யாணம்,
(துங்கு) மதலை, திமில், பாறு, அம்பி,
ப..றி, சதாவே, பாரதி, நவ்வே
போதகம், தொள்ளே, நாவாய் என்று இவை
மேதகு நீர்மேல் ஒரு மரக்கலம்.'
*(1280)*

இதனைத் தொடர்ந்து தோணிக்குரிய பெயர்களை விவரித்துக் கூறுகின்றார். *(1282)* பெருங்கடலிற் செல்லும் கப்பல்கள் காற்று வீச்சைப் பயன்படுத்தியே தமது பயணங்களை அமைத்துக்கொண்டன. கப்பலில் பாயைப் பயன்படுத்தி காற்று வீச்சுக்கேற்ப பயணங்களை அமைத்துக்கொண்டனர். இதன் காரணமாக குறிப்பிட்ட காலங்களிலே மாத்திரம் இந்தக் கப்பற் போக்குவரத்து நடைபெற்றது.

பாய்மரக் கப்பல் கட்டும் கலையில் தமிழரிடையே சிறப்பான தொழில்நுட்ப அறிவு காணப்பட்டதென துணிந்து கூறலாம். 'Schooner' (ஸ்கூனர்) எனப்படும் நீராவிக் கப்பல் வரும்வரை பாய்மரக் கப்பற் போக்குவரத்து முதல்நிலை எய்தியிருந்தது. இந்தக் கப்பற் போக்குவரத்துக்காக அரேபியர் இப்பிராந்தியத்தின் காற்றடிப்பு முறையினை நன்கு ஆராய்ந்திருந்தனர். பருவப் பெயர்ச்சிக் காற்றைக் குறிக்கும். 'Monsoon' எனும் சொல் 'முசும்' என அரபுச் சொல்வழியாக வந்தது.

முத்துக் குளிப்பு அரச ஆதிக்கத்தின்கீழ் வந்தது போன்று கடல் வணிகம் வரவில்லை என்பதனை தமிழ்நாட்டின் பிரபுத்துவ வளர்ச்சி என்ற எனது

கட்டுரையில் குறிப்பிட்டுள்ளேன். (Stduies in Ancient Tamil Society) கி.பி. 600க்குப் பின்னர் வருகின்ற கிழக்குக் கரையோர வணிக வளர்ச்சியிலும் வணிகக் குழுக்களினது வணிகமுதலாண்மையே முக்கியப்படு கின்றது. இலங்கையில் அனுராதபுரத்தில் காணப்படும் தமிழ்க் கல்வெட்டுகளையே உதாரணமாகக் கொள்ளலாம். தமிழ் வணிகக் குழுக்களே புத்த கோயில்களுக்கு வேண்டிய மதக் கொடைகளை வழங்கியுள்ளமை தெரிகிறது. கி.பி.7ஆம் நூற்றாண் டினைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் முகிழ்க்கும் கோயிற் பண்பாட்டுக் கூறுகள் (அரண்மனையும் ஆலயமும்) தென்கிழக்காசியாவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத் தின என்பது வரலாற்று மாணவர்கள் எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும்.

ஏறத்தாழ கி.பி.9ஆம் நூற்றாண்டிலிருந்து, அதாவது சோழர் வருகையுடன் நெடுந்தூர வணிகம் தமிழக வரலாற்றில் மிக முக்கியமான இடத்தைப் பெறத் தொடங்கியது. ஐந்நூற்றுவர், மணிக்கிரா மத்தார், வலஞ்சயர் என்ற பெயர்களைக்கொண்ட வணிகக் குழுக்கள் வணிக முயற்சியில் ஈடுபட்டனர். இவர்கள் மதக்கொடைகளை வழங்கி வந்துள்ளனர் என்பது தெரியவருகிறது. சோழர் காலத்து வணிகம் பெருமளவு கிழக்குக் கடற்கரையோரத்திலேயே காணப்பட்டது. தென்கிழக்காசிய நாடுகள் முழுவதும் தமிழகத்து செல்வாக்குப் பரவியமைக்கான சான்றுகள் உண்டு. இக்காலகட்டத்தில் வங்காள விரிகுடாவை சோழக்குளம் என மிகைப்படக் கூறிய வரலாற்று ஆசிரியர்கள் உளர்.

இவ்வணிகம் இந்தியாவின் கிழக்குக் கடற்கரை யோரத்திலும் இலங்கையின் வடகிழக்குக் கடற்கரை யோரம் வரையிலும் தொடர்புகளைப் பேணி வந்தது. இலங்கையில் நிலவிய சோழர் ஆட்சி (1017 -1070) இந்த இணைவுக்கு உதவியிருக்கலாம். இந்தத் தொடர்புகள் காரணமாகவே மன்னார் பிரதேசத்தில் உள்ள மாதோட்டமும் கிழக்குக் கரையோரத்தில் உள்ள திருகோணமலையும் முக்கியமாகின்றன. திருகோணமலையின் பெயர் திரிகோகர்ணமலை என்றே இருந்திருத்தல் வேண்டும் என்றும், இந்திய கிழக்குக் கரையோரத்தின் மேற்பகுதியில் உள்ள கோகர்ண மலையினைக் கொண்டு இதற்குப் பெயர் வந்திருத்தில் வேண்டும் என்றும் கூறுவர்.

கிழக்குக் கடற்கரையோரத்தில் நடந்த தமிழ்நாட்டு வணிகம் அந்தப் பாரம்பரியம் குன்றிய பின்னரும் கூட தொடர்ந்து நடத்தப்பெற்று வந்ததற்கான சான்றுகள் உண்டு. பிற்காலத்தில் இந்தப்பிறநாட்டு வணிகத் தொடர்பினை செட்டிமார் மேற்கொள்ளு கின்றனர். இவர்கள் தம்மை நகரத்தார் என்று கூறிக்கொள்ளும் மரபு உண்டு. பிரித்தானிய ஆட்சி ஒருமைப்பாடு வழங்கிய வாய்ப்பினைப் பயன்படுத்தி செட்டிமார் தங்கள் வணிக நடவடிக்கைகளை பர்மாமுதல் சிங்கப்பூர்வரை மேற்கொண்டனர். இலங்கைக்கும் வந்தனர். இச்செட்டி சமூகத்தினர் தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் முருகன் கோயில்கள் அமைப்பது வழக்கம். இப்பண்பினை மலேசியா சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இலங்கை கொழும்பிலும் காணலாம்.

இலங்கையின் வடக்குக் கரையோரத்தைச் சார்ந்த தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, பருத்தித் துறை ஆகிய கடலோரப் பட்டினங்களையும் கிழக்கே திருகோணமலை (கந்தளாய், தம்பலகாமம்) உள்ளிட்ட பகுதிகளையும் தளமாகக் கொண்டு 18, 19ஆம் நூற்றாண்டுகளில் கடல்வழி வணிகம் நடந்து வந்துள் ளது. இந்த வரலாறு பற்றிய தகவல்கள் உதிரியாகவே பதியப்பட்டுள்ளன.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய காலம் முதல் (18ஆம் நூற்றாண்டின் இறுதி) 20ஆம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தத்தின் இறுதிவரை ஏறத்தாழ 2 ஆவது உலக மகாயுத்தம் தொடங்கு வதற்கு முன்னர்வரை இவ்வணிகம் சிறப்புற்று விளங்கிற்று என்பதற்கான சான்றுகள் உள்ளன.

இலங்கையின் வடகிழக்கு கரையோரப் பகுதி களில் வாழ்பவரை 'கரையார்' எனும் ஒரு மரபு உண்டு. இவர்கள் மீன்பிடியிலும் கடலோடி வணிகத் திலும் ஈடுபட்டிருந்தனர். இவ்வணிகம் ஒல்லாந்தர் காலத்திலும் காணப்பட்டது என்பதற்கு வல்வெட்டித் துறை, பருத்தித்துறையில் உள்ள 'ரேவடி' எனும் சொல் சான்றாகும். ரேகு எனும் டச்சுச் சொல் சுங்கத் தைக் குறிக்கும். (யாழ்ப்பாணத்திலும் கோட்டைக்குப் பக்கதிலிருந்த இடத்தை ரேகடி என்பர்) ஈழநாட்டுப் புலவர் சரித்திரத்தில் கணேசையர் வல்வெட்டித் துறையைச் சார்ந்த ஏகாம்பரப் புலவரை கடலோடிப் பரம்பரையினர் என்பார்.

வல்வெட்டித்துறை, பருத்தித்துறையைச் சார்ந்த வியாபாரிகள் தமிழகத்தின் கிழக்குக் கரையோரத்தில் இருந்த நாகபட்டினத்துக்குச் சென்று அங்கிருந்து விசாகபட்டினத்துக்குச் சென்று அதன்மேல் வடக்கே கல்கத்தாவுக்கும் மேலே பர்மாவுக்கும் சென்று வணிகம் செய்தனர் என்பதற்குமான சான்றுகள் உள்ளன. பர்மாவில் அக்யாப் (Akhyab) எனும் துறைமுகத்துக்குச் சென்றனர். வல்வெட்டித்துறையில் கப்பல் கட்டும் தொழில் மிகப் பிரபலமாக விளங்கிற்று. பருத்தித்துறையில் கப்பல்களைத் திருத்தும் தொழிலை மேற்கொண்ட குழுமத்தினர் வாழ்ந்த பிரதேசம் இன்றுவரை ஓடக்கரை எனக்குறிப்பிடப் படும். பருத்தித்துறையினைச் சேர்ந்த வர்த்தகர்களிட மிருந்து 1866, 68 காலப்பகுதிவரை மகமைகள் பெற்ற னர் என்பதற்குச் நாவலர் வெளியிட்ட விஞ்ஞாபனம்

சான்றாகும்.

இந்த வணிகப் பாரம்பரியமும் கப்பற் பாரம்பரியமும் இரண்டாவது உலக யுத்த காலத்திற்குப் பின்னர் அழிந்துவிட்டது. ஆயினும் இத்தொழில்நுட்பமே சட்டத்துக்குப் புறம்பான தமிழக வடஇலங்கை வணிக உறவுக்கு காலாகிற்று. இக்கப்பல் கட்டும் பாரம்பரியத்தில் பிற பண்பாட்டுத் தொடர்புகளும் பிற்காலத்தில் வந்து சேர்ந்தன. உதாரணமாக தண்டியல் என்ற படகுத் தலைவனைக் குறிக்கும் சொல் உருதுச் சொல் ஆகும். (Tindall)

இந்தக் கடல் பாரம்பரியத்தோடு சேர்ந்த சில வழிபாட்டு முறைகள் முக்கிய இடம் பெறுகின்றன. இந்துக்களிடையே கப்பலுடையார் கோயில் (வல்வெட்டித்துறை) கடல் நாச்சியம்மன் (மட்டக்களப்பு) என்ற வழிபாட்டு முறைமைகள் உண்டு. கத்தோலிக்க, கிறிஸ்தவர்களிடையே கடலுக்கான விஷேட 'அர்ச்சிஸ்டர்'காளகிய சந்தியோகுமையர் (ST. James) அந்தோனியார் வழிபாடுகள் கடற்கரை கிராமங்களில் உண்டு. இவர்களுடைய பாய்க்கப்பல் வணிகம் காற்று வீச்சினை நம்பியிருந்ததால் ஆடிப்பிறப்பு கடலோரக் கிராமங்களில் இன்றும் கொண்டாடப்படுகிறது. ஆடிப்பிறப்பு விவசாய வாழ்க்கையிலும் முக்கியம் பெறுகிறது. ஆடிப்பிறப்புடனேயே சோளகம் தொடங்குகிறது. சோள(ழ)கம் என்ற சொல்லே சோளமண்டலக் கரையோரக் காற்றினைக் (Cornandel Cost) குறிப்பதாகும். ஆவணி, புரட்டாதிவரை சோளகம் வீசும் சோளகக் காற்றுக் காலம் வடகிழக்குக் கிராமங்களில் பெரிதும் விரும்பப்படுவதொன்றாகும்.

## IV

தமிழ்ப் பண்பாட்டின் செழுமையான உருவாக்கத்துக்கு கடல் தொடர்புபட்ட முறைமையினை இதுவரை நோக்கிய நாம் 19ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் இருந்து இந்தியத் தொழிலாளர்களை கப்பல்களில் ஏற்றி மொரீஷியஸ், மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, கரீபியன் தீவுகள் போன்ற இடங்களுக்கும் இலங்கைக்கும் கொண்டுவந்ததை மறக்கக்கூடாது. வறுமைநிலை காரணமாக பிற நாடுகளுக்குக் கொண்டு செல்லபட்ட இவர்கள் குறிப்பாகத் தென்னாபிரிக்கா மொரீஷியஸ், கரீபியன் நாடுகளில் தங்கள் அடையாளங்களை இழந்திருந்து இப்போது தான் படிப்படியாக மீட்கும் நிலைக்கு வந்துள்ளனர். மலேஷியா, சிங்கப்பூரில் தமிழருக்கு உத்தியோக அந்தஸ்து உண்டு. தென்னாபிரிக்காவிலும் இப்போது தமிழ் மொழி இந்திய மொழிகளுள் முக்கியமான இடத்தைப் பெறுகிறது. தென்னாபிரிக்காவிலுள்ள சகல மொழிகளிலும் தமிழ் ஆறாவது இடத்தைப் பெறுவதாகக் கூறப்படுகிறது. இக்கூற்று சரிபார்க்கப்படல் வேண்டும்.

## V

இன்றைய நிலையில் தமிழ்ப் பண்பாட்டிற் கடல் பெறும் இடம்பற்றி நோக்குகின்றபோது மீன்பிடித்தல் முக்கியமாகின்றது. திணை மரபினுள் மீன்பிடி பெற்ற இடம் பற்றி நெய்தல் பற்றிய குறிப்பின்பொழுது பாத்தோம். தமிழகத்தினதும் ஈழத்தின் வடக்குக் கிழக்குப் பகுதிகளிலும் உள்ள கடலோரக் கிராமங்களின் முக்கிய தொழிலாகவுள்ள மீன்பிடி பற்றிக் குறிப்பிட வேண்டும்.

பாரம்பரியமாக மேற்கொள்ளப்பட்டு வரும் மீன்பிடி முறைகளும் நவீன தொழில் நுட்ப வளர்ச்சியின் வழியாக வந்த மேம்பாடுகளும் என பல்நிலை வளர்ச்சியினை மீன்பிடித்தொழில் பெற்றுள்ளது. இந்த மீன்பிடி முறைமைகள் பற்றிய எழுத்துநிலை விளக்கங்கள் மிகக்குறைவு. திரு.முத்துராசாவினது ஆழியவளை எனும் அண்மைய நூல் இக்குறைபாட்டினைப் பெரிதும் போக்குகின்றது. பாரம்பரிய மீன்பிடி முறைகளும் நவீன வளர்ச்சிகளும் அந்நூலில் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளன. தமிழகத்து மீன்பிடி வாழ்க்கை பற்றிய அத்தகைய நுண்தகவல் தொகுப்பு இல்லையென அந்நூலுக்கு வழங்கிய அணிந்துரையில் பேராசிரியர் தொ.பரமசிவம் குறிப்பிட்டுள்ளார். முற்றுமுழுதான கடலோரக் கிராமங்களில் மீன்பிடி இப்பொழுது செய்யப்படும் முறைமையில் வர்க்க வேறுபாடு மிகத் தெளிவாகத் தெரியும். வலை, வள்ளம், இயந்திரம் போன்ற சாதனங்களில் முதலீடு செய்ய முடியாதவர்கள் அந்த முதலீட்டைச் செய்பவர்களினால் பெரிதும் சுரண்டப்படுவது இப்பொழுது இயல்பு நடைமுறையாகிவிட்டது. இதனைப் புறம் காண்பதற்கு கூட்டுறவுச் சங்கமுறைமை கையாளப்பட்டுள்ளதெனினும் பெருவெற்றி ஈட்டியுள்ளதெனக் கொள்ளமுடியாது.

சமூக நிலையில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளவர்களுடைய ஒட்டுமொத்தமான சமூக அந்தஸ்து பற்றிப் பிரச்சினை உண்டு. பிராமணிய மேலாண்மையுள்ள தமிழகத்தில் மீன்பிடித்தலை தொழிலாகக் கொண்டவர்கள் பொதுவான சமூக கட்டமைப்புக்குள் கொண்டு வரப்படாது ஒதுக்குநிலையிலேயே வைத்திருக்கப்பட்டனர். தமிழகத்தில் பெரும்பாலும் செம்படவர் என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் திராவிட இயக்கத்தின் வளர்ச்சி காரணமாக ஏற்பட்ட மாற்றங்கள் இச்சமூகத்தினருக்கு இப்பொழுது மீனவர் என்ற புதிய பெயரினை வழங்கியுள்ளது. இது முன்னர் வழக்கில் இல்லாத சொல்லாகும். எம்.ஜி. இராமச்சந்திரனின் 'மீனவ நண்பன்' எனும் படம் இந்த மாற்றத்துக்கான ஒரு குறியீடாக வந்தது. ஆனால் இலங்கையில், முன்னர் சுட்டிக்காட்டப்பட்டது போன்று ஒரு பெயர் வேறுபாடு உண்டு. இங்கு கரையார் எனும் சொற்பிரயோகம் உண்டு. யாழ்ப்பாண

தேசவழமைப்படி கரையார் அடிமைக்குடிமைச் சாதிகளுள் இடம்பெறார். கெனத் டேவிட் எனும் மானிடவியலாளர் இவர்களை கட்டுவரையறை அற்ற சாதியினருள் ஒரு குழுவினராகக் குறிப்பிடுவர்.

VI

பண்பாட்டு நிலை நின்ற இக்குறிப்பில் தமிழ்ப் பாரம்பரியத்தில் எடுத்துப் பேசப்படும் கடல்படு திரவியங்கள் பற்றிக் குறிப்பிடல் வேண்டும். தமிழ் மரவில் கடல்படு திரவியங்களாகக் குறிக்கப்படுபவை ஐந்து. அவை அம்பர், சங்கு, முத்து, பவளம், உப்பு என்பனவாகும். இவற்றுள் அம்பர் என்பது பிசின் தன்மையுள்ள பவுண் திரள் ஆகும். இது கடற்கரையில் எற்றப்பட்டுக் கிடக்கும். வெளிப்பார்வைக்கு கறுப்புத் திரளாகவே காட்சியளிக்கும். இதனைச் சரியாக இனங்கண்டு கொள்ளக் கூடியவர்கள் அப்பண்பாட்டினுள் வாழ்பவர்களே. அம்பர் கிடைப்பது அரிது எனினும் அதனைக் கண்டெடுத்தவர்கள் மிகப்பெரிய செல்வந்தர்களாகியுள்ளனர். முத்து தமிழகத்தில் மிகப் புராதனமான வளங்களுள் ஒன்றாகும். முத்துக்குளிப்பது மிகப்பெரிய தொழிலாக வளர்த்தெடுக்கப்பட்டது. இது பாண்டி நாட்டின் முக்கிய வருவாய்த் தொழில் ஒன்றாக இருந்தது. சிறையில் இருந்த கைதிகளை பாண்டிய மன்னர் முத்துக் குளிக்கப் பயன்படுத்தினர் என்ற தகவல் நீலகண்ட சாஸ்த்திரிகள் எழுதிய 'Foreign Notices of South India' எனும் நூலில் காணப்படுகிறது. முத்து எடுக்கும் பாரம்பரியம் தமிழகத்தின் குமரி முனைமுதல் இலங்கையின் மேற்குக் கரையோர மான சிலாபம் வரையும் உண்டு. இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் சிலாவத்துறை, சிலாபம் என இரண்டு இடம் உண்டு. சிலாவத்துறை மன்னாரைச் சார்ந்த பகுதியாகும்.

இடைக்காலத்தில் முத்துக்குளிப்பு முஸ்லிம் வியாபாரிகளினால் செய்விக்கப்பெற்றது. தமிழகத்தின் கீழ்க் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த முத்துக் குளிப்பவர்கள் முஸ்லிம் வணிகர்களின் கெடுபிடிகள் காரணமாகவே கத்தோலிக்க கிறிஸ்தவத்துக்கு மாறினர் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவர். இவர்கள் 'பரதவர்' என்ற பெயரைப் பயன்படுத்துவர். இலங்கையின் மேற்குக் கரையோரத்தில் உள்ள பரதவர்கள் தம்மைப் பரதர் என்று அழைப்பர்.

இலங்கையின் மேற்குக் கரைப் பகுதிகளான சிலாபம், நீர்கொழும்பு, வென்னப்புவ போன்ற பகுதிகளில் உள்ள பரதவர்கள் பின்னர் சிங்கள மயப்படுத்துப்பட்டனர். பவளம் என்பது உண்மையில் கடலில் உள்ள முருகைக் கற்கள் போன்ற ஒரு சின்னஞ்சிறு பாறையாகும். பவளம் ஒளி ஊடுருவும் தன்மையினதாகும். செம்பவளத்தைப் பார்க்கும்போது அந்த ஒளி ஊடுருவல் தன்மை தெரியும்.


சங்கு தமிழ் பண்பாட்டில் முக்கிய இடம்பெறுவ தொன்றாகும். இசைவாத்தியமாகப் பயன்படுத்துவது ஒரு புறமாக, மறுபுறத்தில் சடங்காசார முக்கியத்துவம் உடையதாகவும் கொள்ளப்படும். சங்கின் மேற்புறத்தில் தெரியப்படும் கோட்டின் வளைவமைதி கொண்டு வலம்புரி இடம்புரி எனப் பிரிப்பர். வீட்டு வாசல்களில் நன்நிமித்தத்திற்கும் செல்வச் செழிப்புக்குமாகச் சங்கினை அதன் நடுப்பாகம் வெளியே தெரியப் புதைத்துவிடுவர். நமது உணவு மரபில் உப்பு பெறும் முக்கியத்துவத்தைக் குறிப்பிடவேண்டிய அவசியமில்லை. 'உப்பில்லாப் பண்டம் குப்பையிலே' என்பர்.

இந்த ஐந்து பொருட்களும் நமது பண்பாட்டின் முக்கியமான இடத்தைப் பெறுவன. உணவு முதல் அழகியல் வரை இவற்றை நீக்கிவிட முடியாது.

தமிழர்களின் வரலாற்றுச் சாதனை முதல் சாதாரண சீவியம்வரை கடல் தமிழர் பண்பாட்டில் முக்கியமான இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது.

***பிற்குறிப்பு:*** ஏறத்தாழ *1974* முதல் ஈழத்தில் நடைபெற்று வரும் தமிழர் உரிமைப் போராட்டம் காரணமாக, குறிப்பாக அவ் உரிமைப்போராட்டத்தின் ஓர் அங்கமாக கடற்போர்அணியும் ஏற்பட்டதனால் கடலோரக் கிராமங்களின் வாழ்வியல் முறை பெரிதும் மாற்றங்களுக்கு உள்ளானது. கடற்போக்குவரத்தும் மீன்பிடியும் பெரிதும் பாதிக்கப்பெற்றுள்ளன. தங்கள் தங்கள் கிராமங்களில் இருந்து வெளியேறி பிற ஊர்களுக்குச் சென்ற மீன்பிடித் தொழிலினர் தொழில் தொடர்ச்சியில்லாமல் பெரிதும் சிரமப்பட்டனர். இம்மாற்றங்கள் ஏற்படுத்தியுள்ள பண்பாட்டு நிலை மாற்றங்கள் வருங்காலத்திலேயே தெளிவாகும். யுத்தம் காரணமாக ஏற்பட்ட புலம்பெயர் நிலையில் கடல் மார்க்கமாகக் கொண்டுசெல்லப்படுபவர்கள் பட்ட, படும் இன்னல்கள் இங்கு பேசப்படவில்லை.

"தமிழ் ஆராய்சி என்பது கடந்தகாலம் பற்றிய பகுப்பாய்வு மாத்திரமல்ல. நிகழ்காலம் பற்றிய பதிகைகளும் தான்"



இரவில் திடீர்திடீரென்று கால்கள் தூக்கிப் போடும். வலது காலின் குதிக்காலில் சுரீர் சுரீரென்று ஆயிரம் ஆணிகள் தைப்பது போன்ற வலி. ஆயிரம் துணுக்குகளாக கால்தசை பிய்ந்துச் சிதறுவது போன்ற கனவு தூக்கிவாரிப்போட விழித்தெழுந்து அமர்வான் அவன். வியர்வை ஆறாகப் பெருகி ஓடும். வலது காலின் குதிக்காலை அழுந்தத் தேய்க்க ஓடும் கைகள் திகைத்துப் போய் நிற்கும். குதிக்காலைத் தொடவும் சுண்டி இழுக்கும் குதிக்கால் நரம்பைத் தடவிவிடவும் துடிக்கும் கரங்கள் தவிக்கும்.

இப்படித்தான் கடந்த 15 வருடங்களாக, சுரீரென்று குத்தும் நரம்பைத் தடவிவிட குதிக்காலைத் தேடி ஒரு மௌனயுத்தம் நடத்திக்கொண்டிருந்தான்.

15 வருடங்களின் முன் ஒருநாள் அடர்ந்த அடவியூடு சென்றுகொண்டிருந்தான். மீசையரும்பும் இளம்பருவத்து முறுக்கு. அடர்ந்த காட்டையும் பற்றையையும் அலட்சியமாகத் தவிர்த்து நடக்கவைத்தது. இவன் பின்னே கலியுகன். இவனைவிட இளையவன். துள்ளி நடைபோட்டுக் கொண்டிருந்தவனை அடிக்கடி அடக்கவேண்டியிருந்தது.

"டேய் கவனமடா. பார்த்து..... எனக்குப் பின்னாலேயே வா. மைன்ஸ் இருக்கும்."

காடு அவனுக்கு நிறையக் கற்றுத் தந்திருந்தது. நினைத்தவுடன் மனதில் அமைதியைக் கொண்டுவர முடிந்தது. பறவைகளையும், மிருகங்களையும், செடிகளையும், கொடிகளையும், புற்களையும், படர் கொடிகளையும் அடையாளங் காணமுடிந்தது. உண்ணக்கூடிய கனி, நீரிருக்கும் கொடி எனப் பிரித்தறிய முடிந்தது. காட்டின் வெவ்வேறு ஒலிகளையும் பிரித்தறிந்து காடு பேசுவதைப் புரிந்துகொள்ள முடிந்தது. காட்டில் ஏற்படும் சிறு மாற்றங்களையும் உடனேயே அறிந்துகொள்ள முடிந்தது. ஒரு சிறு கிளையின் விலகல், சிறு புல்லின் நசிவு, புரண்டிருக்கும் மண்ணின் ஈரம், பட்சியொன்றின் அலறல். மிரண்டோடும் மிருகம்.....அனைத்தும் ஒரு கதை சொன்னது.

# மௌனமாய்.... ஒரு யுத்தம்

தீபா குமரேஷ்


அன்றும் அப்படித்தான் கலியுகனை எச்சரித்த வண்ணம் சென்றவன் திடீரென நின்றான்.

ஏதோ ஒரு வித்தியாசம், புல்நுனியில் வாட்டம். புரண்டிருந்த மண். காட்டின் அமானுஷ்ய அமைதி.

"கலியுகன் வந்த பாதையிலே கால் வைச்சுத் திரும்பு மைன்ஸ் இருக்கு."

கலியுகன் பாதுகாப்பான தூரம் போனதும் இவன் திரும்பி நடக்கத் தொடங்கினான்.

படாரென்று ஒரு ஒலி. எதுவுமே புலப்படவில்லை. கிண்ணென்று அதிர்ந்த காது சற்று நேரம் கழித்து சமநிலையடைந்தது. காலில் ஏதோ ஊர்வது போன்ற உணர்வு. குனிந்து பார்த்தான். இரத்தவெள்ளம்.



"அண்ணை! மைன்ஸ் வெடிச்சிட்டுது" அதிர்ந்துபோய் நின்ற கலியுகன் கத்தினான்.

"நீ கிட்ட வராதை. நான் வாறன்." அவனை எச்சரித்த படி கையூன்றி எழும்பினான். இரத்தத்தில் மூழ்கிக்கிடந்த வலதுகாலை மெதுவே வைக்க வலி உச்சந்தலையில் அடித்தது.

"ஆ...." தாங்கமுடியாமல் அலறியவனைத் தாங்க வந்தான் கலியுகன்.

"வராதை....நீ வராதை.... இரண்டு பேருக்கும் மைன்ஸ் வெடிச்சா ஒருத்தரையொருத்தர் காப்பாத்த முடியாது. வராதை."

கலங்கிய கண்ணுடன் செய்வதறியாமல் நின்றான் கலியுகன்.

பல்லைக் கடித்து வலியைத் தாங்கி வலதுகாலை மெதுவே ஊன்றி கெந்திக் கெந்தி கலியுகனை அடைந்தான். "அண்ணை முகாமிலிருந்து கனதூரம் வந்திட்டம். மற்றப் போராளியளுக்கு அறிவிக்கவும் ஏலாது. என்ன செய்யிறது?" சின்னவன் பரிதவித்தான்.

"இன்னுமொரு கொஞ்சத்தூரம் என்னைத் தாங்கிக் கொண்டு நட சொல்லுறன்."

சின்னவனின் தோளைத் தாங்கிப் பிடித்தவாறு கெந்தியவாறு ஐந்தாறு அடிகள் நடந்தான். உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை சுண்டியிழுத்த வேதனையை வெளிக்காட்டாது உள்ளிழுத்தான். 'அம்மா!' என்றலறவேண்டும் போலிருந்தது. பல்லைக்கடித்து முயன்று அழுகையை நிறுத்தினான். நான் அழுதால் இவன் மிரண்டுவிடுவான். எதுவுமே செய்யமுடியாமல் போய்விடும்.

"கலியுகன் கவனி! வந்த பாதை எனக்கு ஞாபகமிருக்கா"

"இருக்கண்ணை"

"அப்படியே திரும்பிப்போ. பத்து நிமிடம் நடந்தால் நான் வரேக்கை உனக்கு காட்டின் தனிய நிக்கிற ஒரு பெரிய மரம் வரும். அதிலை ஏறு. அதிலை ஏறிநின்று கத்து. பெடியளுக்குக் கேட்கும். வருவாங்கள். கெதியிலை முகாம்வரைக்கும் நீ நடந்துபோய் வரும் மட்டும் என்னாலை தாக்குப் பிடிக்க முடியாது. கெதியிலை போ."

கலியுகன் திரும்பி வேகமாக நடக்கத் தொடங்கினான். களைத்துப்போன இவன் அருகிருந்த மரத்தின் வேரோடு சாய்ந்தான். இதுவரையிலும் மைன்ஸ் வெடித்த போராளிகள் எவரினது நிலைமையும் நேரில் காணவில்லையாயினும் தனது நிலைமை அவனுக்குப் புரிந்தது. காட்டிற்குள் சிறந்த மருத்துவம் இல்லை. உயிரிழக்க நேரிடலாம். உயிர் பிழைத்தாலும் காலை இழக்க வேண்டிவரும். பதினெட்டு வயதில் காலை இழப்பின் இனி என் கதி? சாதாரண மனிதனாக வாழத்தகுதியை இழக்கும் என்னால் போராட்டத்தில் என்ன பங்களிப்பைச் செய்ய முடியும்? மனம் அல்லாட கைகள் குப்பியைப் பற்றின. அறிவும் இதயமும் முட்டிமோதுகையில் அவனுக்கு ஒரு கதை ஞாபகம் வந்தது. சிறிய வயதில் படித்தது. அவன் மனதைத் தொட்டு அவன் மனதிலேயே

சிம்மாசனம் போட்டு இருந்துவிட்டவன் 'உண்மை மனிதன்' எனும் அக்கதையின் நாயகன் 'அலெக்சேய்'. முதலாம் உலகப் போரில் இரண்டு கால் களையும் இழந்த நிலையிலும் தன்னம்பிக்கையை இழக்காது முயன்று யுத்த விமானமோட்டிய அக்காவிய நாயகன் கண்முன்னே தோன்றினான்.

இலட்சியங்களால் நிரம்பிய அவ்விதயத்தில் புதிய இலட்சியம் புகுந்துகொண்டது.

"நான் உயிர் வாழ்வேன்! போராடுவேன்"

பற்றியிருந்த கைகளாலேயே சயனைற் குப்பியின் கயிற்றை இழுத்தறுத்தான். காயம்பட்ட இடத்திற்கு சற்றுமேல் உத்தேசமாக ஒரு இடத்தை தெரிவுசெய்து அக்கயிற்றால் இறுகக் கட்டினான். கட்டியிருந்த சாரத்தை அவிட்டுக் காயத்தைச் சுற்றிக் கட்டினான்.

பெருகும் குருதியைப் பார்த்தபடி, சோர்ந்துபோகும் கைகளைத் தடவியபடி, சுற்றுப்புறத்தைக் கண்கள் நுணுகி ஆராய முனகவேண்டும் போல் தோன்றிய வலியை மறக்க வென சூழ்ந்துள்ள ஆபத்தை நினைவு கூர்ந்து கணங்களை எண்ணினான். மிதிவெடியைப் புதைத்த எதிரி பற்றைகளுள் பதுங்கிருந்து அவதானிப்பது போன்ற எண்ணத்தில் மயிர்கூச்செறிந்தது. இன்னமும் விடாமல் இறுகப் பற்றியிருந்த ஆயுதத்தைக்கைகள் தயார் நிலையில் பிடித்தன.

பல யுகங்கள் போல் தோன்றிய முக்கால் மணிநேரத்தின் பின் தொலைவில் செடிகள் விலகும், சருகுகள் மிதிபடும் ஓசைகள் காதில் விழுந்தன. தீட்டிய கத்தியைப் போல் எந்நேரமும் கூர்மையாகவே இருக்கப் பழக்கப்பட்ட புலன்கள் மங்கிப் போயிருந்த நேரத்திலும் தோழர்களை இனங்கண்டுகொள்ள மயங்கிப்போனான். கண்விழித்த போது மருத்துவ முகாமின் கட்டிலில் இவன். சுற்றிவர துயர் படிந்த முகங்களுடன் தோழர்கள்... லவன்.... சொலமன், மைந்தி.... அஜந்தன்..

"மச்சான்! செத்துவிடுவாயோ எனப் பயந்திட்டம்! கவலைப்படாதை இனிப் பிழைச்சிடுவாய்"

உண்மைநிலை எதுவாக இருந்த போதும்... இப்போது தேவைப்பட்டது ஆறுதல் வார்த்தைகளே.

"மச்சான் உனக்கு என்ன வேணும் சொல்லு உடனே கொண்டாறம்" பரபரத்தார்கள் தோழர்கள். அந்த நிலையிலும் இவன் முகத்தில் சிரிப்பு. 'ஓடுற தண்ணியிலை பருப்பைத் தேடுறாங்கள். கறிக்குப் போட உப்பில்லாம சலைனை வெட்டிக் கறிக்கை ஊத்துறாங்கள். எனக்கு

புகழேந்தி



## முதல் மணி

பாவம் மனசு
நொந்து வெந்துபோகிறது.
காய்த்து
தொங்கும்
வலித்திரள்களினூடு
விஷப்புழுக்கள்
தின்று கொழுத்து
உந்தி எழும்.
பாவம் உயிர்
உறிஞ்ச உறிஞ்ச
திமிறித் திமிறி விழும்.
கல்லின்மேல்
முள்ளின்மேல்
மோதியும் ஆக்கிய
அச்சுக்குள் அகப்படுகிறது.
புரியேறாமல்,
கரி பிரட்டி
முகம் திருத்தும் காதல்.
ஆயுள் சுருட்டி எடுத்துக்கொண்ட
காலம் சொல்லிக்கொண்டு செல்கிறது.
"முதல் சாவுமணி
ஓர் கொலுசுமணி...."

**ப.அருள்நேசன்**

என்ன ஸ்பெஷலாத் தரப்போறாங்கள் இப்ப'

ஏளனச் சிரிப்பை புரிந்துகொண்டு "டேய் மச்சான் சிரிக்காதை என்ன வேணும் சொல்லு, கொண்டாறம் நாங்கள்" ஆவேசம் கொண்டார்கள் தோழர்கள்.

"எனக்கு சஸ்ரஜன் குடிக்க வேணும் போல இருக்குது"

"அவ்வளவுதானே மச்சான்.... டன்"

என்ன செய்தார்களோ எப்படி எடுத்தார்களோ அடுத்த நாள் சஸ்ரஜன் கரைச்சுத் தந்தார்கள். வாஞ்சையுடன் தலையைத் தடவி "மச்சான் உடம்பின்ரை 60வீதம் இரத்தம் போட்டுது. 40 வீதம் இரத்தத்தோடை நீ உயிரோட இருக்கிறது பெரிய விடயம். கவலைப்படாதே காப்பாற்றிப் போடுவம்."

காட்டு மருத்துவம் வெற்றியளிக்காது கால் சீழ் பிடித்தது. மயக்கமருந்து எதுவுமின்றியே காலை வெட்டிப்போட வேண்டியிருப்பதை டொக்ரர் தயங்கித் தயங்கிக் கூறியபோது "டொக்ரர் நான் உயிரோடு இருக்கிறதுக்காக நீங்கள் என்ன செய்தாலும் எனக்குச் சரி" சாதாரணமாகச் சொல்லியவன் மயங்கிப்போனான். கால் வெட்டப்பட்டபோது வலி..... வலி.... வலி வேறெதுவும் தெரியாமல் மயங்கி. விழித்தெழுந்த போதும் வலி..... வலி.... வலி வேறெதுவும் தெரியாமல் உணர்ந்து வலியென்னும் போதையிற் சூழ்ந்து முணங்கியபடியே காலநேர உணர்வற்றுக் கிடந்தவனைத் தட்டி,

"கால் சீழ் பிடித்துக்கொண்டே போகிறது. உன்னை இந்தியாவுக்கு அனுப்பப் போறமடா"

மயக்கத்துடனேயே தலையாட்டியபோதும் குசுகுசுப்பாய் பேசியவை காதில் விழுந்தன.

படகில் பயணம்... கடலில் நேவி.... துரத்துவான்.... சுடுவான்.... அங்காலிக் கரை போனாலும் வாகனம் வரும்வரை காத்திருக்க வேணும்... அதுமட்டும் 'செப்ரிக்' ஆக்காம இருக்க வேணும். அரைகுறையாய் காதில் விழுந்து பயமுறுத்தியது... நிலைமை. சாக்லெற் தந்து அவநம்பிக்கையும் வாஞ்சையும் நிரம்பிய கண்களுடன் பொறுப்பாளரும் தோழர்களும் வழியனுப்பப் புறப்பட்டான்.

சொல்லிவைத்தாற்போல... ஆழ் கடலில் வண்டியைக் கண்டுகொண்டு நேவி துரத்தியது. ஓட்டி மிகவேகமாக அலைகளில் ஓடித்தப்ப முயன்றான். படகு அங்குமிங்குமாக தூக்கிப்போட்டதில் கால்க்காயம் அடிபட்டு வலி எழும்பியது. அலை உப்பு நீரை புண்ணில் வாரி ஊற்றியது. அடித்தூற்றிய மழையில் நனையாதிருக்க அணியத்திற்குள் புரண்டு படுத்தான். கனநேரம் ஓடிக்களைத்து நேவியிடமிருந்து தப்பி மழை நிற்பதற்காகக் காத்திருந்து விடிகாலை வெளிச்சத்தில் திசையறிந்தபோதுதான் காங்கேசன்துறைக் கடற்படைமுகாமருகே இருட்டு அவர்களைத் தள்ளியிருப்பது புரிந்தது....

மீண்டும் ஓட்டம். உப்புத் தண்ணீரும் சுடும் வெய்யிலும் மாறிமாறிப் புண்ணைக் கிளறி வேதனையைத் தர களைத்துச் சோர்ந்தவனை இருட்டுப் பொழுதில் கரையிறக்கிச் சென்றது வண்டி.

வருவார்கள் வருவார்கள் என இரண்டு நாட்கள் சுத்தமும் சுகாதாரமும் அற்ற அந்தக் கொட்டிலில் இரண்டு யுகங்களாகக் கனத்தன. வெய்யிலும் மழையும் மாறிமாறித் தாக்கியதில் காய்ச்சல் அனலாய்க் கொதித்தது. காலின் வேதனை கால் சீழ்பிடித்திருப்பதைச் சொல்லியது.

வலிக்கும் புண்ணின் சீழ் அகற்றவென வந்த உள்ளூர் மருத்துவர் புண்ணின் கோரம் கண்டு ஓடியபோது இழுத்துப் பிடித்து வைத்துச் செய்வித்தான்.

இரண்டு நாளில் வந்த தோழர்கள் நல்லதொரு வைத்தியர் கையில் இவனை ஒப்படைத்தனர். ஆட்டின் தோலின் கீழ் படைபடையாய் இருக்கும் கொழுப்புப்போல படிந்திருந்தது சீழ். கொதிக்கும் நீரில் காலை வைத்து இளகும் சீழை உரஞ்சித் தள்ளும்போது... இந்தப் பிறப்புப் போதுமென வலி உயிர்பறிக்கும்.

மோர்பின்.... பெதடின், பெதடின்.. மோர்பின் என ஐம்புலனும் அதனுள் ஆழ்ந்திருக்கையில் மீண்டும் வெட்டப்பட்ட கால் குணமாகிச்... செயற்கைக் காலில் தத்தித் தத்தி நடை பழகி.... தடுமாறி.... விழுந்து... எழுந்து... நடந்து.. இரவின் தனி மையில் 'எனக்குக் கால்போட்டுது.... எனக்குக் கால் போட்டுது....' என சுயபரிதாபம் கொண்டு அழுது.... நடுஇரவில் கண்விழிக்கும் போதில்... அந்நியமாய் தோன்றி மிரட்டும் பொய்க்காலை நேசிக்கப்பழகி...

'காலிழந்தவன் முடவன்' என்று முடக்கப்படலாகாதென.. முயன்று.. கடுமையாய் உழைத்து... பல்கடித்து வலி தாங்கி... பகலெல்லாம் இழுத்துப் பிடித்துச் சிரித்து.... இரவெல்லாம் வலியில் புரண்டு.... அனுங்கி காலில்லாததும் வேடிக்கையாகி... காலிழந்த மற்ற தோழர்களுடன் சொத்தி நம்பர் வண், சொத்தி நம்பர் ரூ எனப் பெயரிட்டுக் கேலி செய்து...

15 வருடங்கள். பகல் முழுவதும் தனியாய் நின்றுழைத்த இடதுகால் வேதனையில் உழலும், சமநிலை குழம்பி நின்ற முள்ளெலும்பு சுத்தியல் கொண்டு அறையச் சொல்லும். கடிக்கும் வலது உள்ளங்காலைப் பரபரவென்று சொறிய மனம் விளையும். சுரீரென்று குத்தியிழுக்கும் வலது குதிக்கால் நரம்பை கைகள் தேடும். நடுநிசியில்... பொட்டில் அறைப்பட்டாற்போல் உண்மை வலிக்கும். எனக்குக் காலில்லை. மௌனமாய்.. ஒரு யுத்தம் தொடரும்.




# எதையெல்லாம் மறந்தோம்?

ஞானரதன்


இலக்கியத்துறையில் ஈடுபாடு, வெறி, பைத்தியம் எனப் பல தளங்களில் அடையாளம் காணக்கூடிய பலரைக் கடந்த நாற்பதாண்டுகளில் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இளைஞர்களாக இருக்கின்ற காலத்தில், வாசிப்புச் சூழலாலோ அல்லது பல்கலைக்கழக கற்கை நெறிச் சூழலாலோ என்னவோ வதவதவென்று பத்திரிகைகளுக்கும், சிறு சஞ்சிகைகளுக்கும் எழுதித்தள்ளிய பின்பு, 'என்ன ஆனார்கள்' என்று அறிய முடியாதவாறு முகவரி இழந்துபோன பலரை ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகு அறியும்.

எல்லா மனிதர்களும் ஏதோ ஒன்றுடன் இணைத்துத் தன்னை அதனுடன் அடையாளம் காண விரும்பும் மனிதமனப் பலவீனத்தின் வெளிபாடாக இவர்களும் இலக்கியத்துறையையும் தட்டிப்பார்த்தார்களோ என எண்ணத் தோன்றுகிறது. இதன் மறுபுறமாக, எல்லாச் சூழலிலும், கால, அனுபவ முதிர்ச்சியோடு தொடர்ந்தும் இலக்கிய உலகில் தடம்பதித்துக்கொண்டிருக்கும் பலரைக் காண்கிறோம். எழுத்து நடமாட முடியாத நிலையிலும், அண்மையில் கொழும்பில் நடைபெற்ற தமிழ்-சிங்கள கலைஞர்களின் ஒன்று கூடலில் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் மண்டபத்தினுள் வந்த காட்சியைக் கவனித்த எவருக்கும், குறிப்பாகக் கலை இலக்கிய வாதிகளுக்கு எத்தகைய அருட்டுணர்வுகளை அவர்களின் அக உலகில் ஏற்படுத்தியிருக்கும்? மெதுவாக இறந்துகொண்டிருக்கும் மனித உடலை மட்டும்தான் தரிசிக்கிறோமா? அதற்கும் அப்பால் உள்ள உலகமொன்று எங்களை வசீகரிக்கிறது அல்லவா? எனக்கோ சிந்தனைகளை நாற்பதாண்டுகளுக்குப் பின்னோக்கித் தள்ளியது. வெள்ளவத்தை ரயில் நிலைய வீதியில் நஷனல் உடை, கையில் மடித்த பத்திரிகைகள் புத்தகங்கள், கிறிச் கிறிச்சென்ற செருப்பொலியுடன், கவனத்திலிருந்து தப்பமுடியாத ஆளுமை நிறைந்த நிமிர்ந்த பொலிவான உடல்வாகுடன், காலையிலும் மாலையிலும் அவர் போய் வருவதைக் கண்டிருக்கிறேன். இலங்கை வானொலியில் 'விதானையார் வீடு' நாடகத்தில் உவர்தான் விதானையாக நடித்தவர். இப்பொழுது பாராளுமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராக இருப்பதாகச் சொன்னார் ஒருவர். நாங்கள் அவரைச் சந்திக்க வந்த விடயமோ வேறு. 'தேனருவி' இலக்கிய சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை கேட்டுப்பார்க்கலாம் எனப் புறப்பட்ட எமக்கு நேரம் காலம் உசிதமாக அமையவில்லை. அவசரமாக அறையிலிருந்து புறப்பட்டு வீதிக்கு வந்துவிட்டபின் இடைமறிப்பது நாகரிமாகப்படவில்லை. திரும்பிவிட்டோம். பின்பு எப்படியோ 'இயக்கமும் இலக்கியமும்' என்ற அவரின் தொடர் கட்டுரை தேனருவிக்கு வரத்தொடங்கியது. பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் மோசமான கையெழுத்தோடு மண்டை உடைக்கும் வேலை பாலு மகேந்திரா (இன்றைய திரைப்பட இயக்குநர்) அல்லது வாரித்தம்பிக்குத்தான். 'தேனருவியின்' ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்தவர்கள் இவர்கள். கவிஞர் நீலாவணன், எஸ். பொன்னுத்துரை, செ.யோகநாதன் போன்றவர்களின் கையெழுத்து அச்சுப்பதித்தது போலிருக்கும். தேனருவிக்கு வந்த ஆக்கங்களில் இன்னொருவரினுடைய கையெழுத்தும் மிரட்டவே செய்தது. அது

அமரர் போராசிரியர் க.கைலாசபதியினுடையது. கே.எஸ்.சிவகுமாரனுடைய கையெழுத்தும் மோசம்தான். ஆனால் அச்சுக்கோர்ப்பவர் அதிக சிரமப்படத் தேவையில்லை. எஸ்.பொன்னுத்துரை அவர்கள் ஒரு சமயம் சொன்னது ஞாபகம் வருகிறது. தான் நான்கைந்து தடவைகள் தனது சிறுகதையை மெருகேறும்வரை திருப்பி எழுதுவேன் என்று. முழுக்கவனத்தையும் குவியப்படுத்தி படைக்கும் ஆற்றல் இவர் போன்ற எழுத்தாளர்களின் படைப்புக்களுக்கு வலுச்சேர்த்திருக்கின்றன என்பது உண்மையே. இருந்த போதிலும் இந்த எழுத்தாற்றல் வல்லமையை கிண்டல், நையாண்டி, மனதை நோக வைக்கும் பண்புகள் மீது செலுத்தும்போது எதிர் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. 'ஒரு வாதத்தில் நீ வெல்வாயானால் ஒரு நண்பனை இழக்கிறாய்' என்ற ஜேர்மனியப் பழமொழியை நினைவூட்டுவது போல 'தேனருவிக்கும் இழப்பு ஏற்பட்டது. தேனருவியில் எஸ்.பொ. எழுதிய 'எனது எழுத்தாள நண்பர்கள்' என்ற தொடர் கிண்டல் நகைச்சுவை வடிவில் பாதகமான சூழலையே ஏற்படுத்தியது. அது ஊடகத்துறையைக் கையாளக் கூடிய முதிர்ச்சின்மையையே வெளிக்காட்டியது என்றுதான் கூற வேண்டும்.

விளம்பரம் சேகரிப்பதில் வெற்றி என்றால் பத்திரிகை நடத்தலாம் என்ற நிலைப்பாடுதான் அன்று. இன்று எப்படியோ? விளம்பரம் கிடைக்கும்வரை பத்திரிகை வரும். இல்லாவிட்டால் சுருண்டு படுத்து அவ்வப்போது உயிர்த்தெழும், நிரந்தரமாகச் சாகும்வரை ஆக்கங்கள் சேகரிப்பு, பிரசுரத்துக்கு ஏற்றவை தெரிவுசெய்தல், 'டம்மி' போடுவது, ஒப்பு நோக்குவது எல்லாம் சுலபமான காரியங்கள். விநியோகமும் சுலபமாகத்தான் இருக்கும் விற்பனையான பிரதிகளுக்கான பணம் வந்துசேர கல்லில் நார் உரிக்க வேண்டும். இவ்வாறாகப் பொருளாதார முடையே ஈற்றில் 'தேனருவிக்குக் குழி பறித்திருக்க வேண்டும். இப்படி எத்தனை சிறு சஞ்சிகைகள், பத்திரிகைகள் பிறந்து, சொற்பகாலம் வாழ்ந்து நிரந்தரமாகவே மரித்துவிட்டன. சில பத்திரிகைகள் தோன்றி மறைந்துவிட்டாலும் இலக்கிய உலகில் இன்னும் பேசப்படுகின்ற அளவுக்கு வரலாறு படைத்ததையும் மறக்க முடியாது. இந்தியாவில் 'மணிக்கொடி', 'எழுத்து'ப்போல ஈழத்தில் ஈழகேரி, அலை போன்றவை மறைந்து போகாமல் இருப்பதற்கு இவை ஆற்றிய ஆழமான இலக்கியப் பங்களிபே காரணமாக இருக்கலாம். இத்தகைய அளவுகோலுக்குள் உள்ளடக்க முடியாவிட்டாலும் 'மல்லிகை' இலக்கியச் சஞ்சிகை தனித்துவமான வரலாலொன்றைக் கொண்டுள்ளது என்பதை மறக்கமுடியாது. இதனை நடாத்தும் டொமினிக் ஜீவா அவர்கள் மனி மனிதனாக, யாழ்ப்பாண, மரபுவழிக் கல்வியூடாக தோற்றம் பெறாமல், துவிச்சக்கர வண்டியின் கரியரில் அச்சுக் கோர்க்கப்பட்ட சட்டங்களை காங்கேசன்துறை வீதியால், யாழ் நகரின் மத்தியில் வியர்வை சிந்தக் கொண்டு திரிந்த காலத்திலிருந்து இன்றைய கௌரம் பெற்றுவிட்ட காலம்வரை விடாமுயற்சியோடு நிமிர்ந்து நின்றமை பாராட்டுக்குரியவிடயமே. யாழ்.குடா விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில், கோண்டாவிலில் இருந்தவாறு வெகு வசதியாக 'வெளிச்சம்' சஞ்சிகையை வெளியிட்டுக் கொண்டிருந்த கலை பண்பாட்டுக் கழகத்தினர்க்கும் சோதனைக் காலம் வந்தது. 'மனிசனே தப்பிக்கிறபாடில்லை. பத்திரிகை என்ன இழவுக்கென்று' கூடியிருந்த வட்டம் கொலுகொலுத்துச் சிதறி, தென்மராட்சியில் கொட்டில்களிலும், வீடுகளிலும் புகுந்துகொண்டது. 'வெளிச்சம்' குழுவினர் தென்மராட்சி அகதிமுகாம்கள், பள்ளிக்கூடங்களில் உடமைகளைத் தொலைத்த பயணிகள் போல, ஏக்கத்தோடு அவ்வப்போது வந்து உறவுகளைத்தேடி எட்டப்பார்த்தனர். இரைகின்ற வானம், வெடிக்கின்ற குண்டுகள், இடம்பெயர்ந்த மக்கள் நடுவே 'வெளிச்சம்' ஆசிரியர் கருணாகரன், உதவிக்கு சு.மகேந்திரன், குமரன், கனகரத்தினம் எனப் பலர் மாறி, மாறி நாயாய் அலைந்து திரிந்ததைப் பார்த்திருக்கிறேன். இதன் பின்னர் எவ்வாறு வெளிச்சத்தை வன்னிக்குக் கொண்டு சென்று நிமிரவைத்து இன்றைய வியப்பூட்டும் நிலைக்கு எப்படி கொண்டு வந்தார்கள் என்பது கலை, பண்பாட்டுக் கழகத்துக்கே வெளிச்சம். ஒவ்வொரு கல்லாகச் சுமந்து கட்டடம் கட்டிய பின்பு பார்க்கிறோம். இன்று வெளிச் சத்தில் கணனி புதுந்து விளையாடுகிறது. உலக வேகத்தை எம்மால் எட்டிப்பிடிக்க முடியாதா என்ன என்ற பிரயத்தனம் வெளிச்சத்தில் காணமுடி

> **யாழ் குடாவை ஆக்கிரமித்ததும் முதல் வேலை 'புல்டோசரு'க்குத்தான். எல்லா நினைவுச் சின்னங்களும், முக்கியமாக மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள் தரைமட்டமாகின. சனம் மறந்து போகும். பிறகு எல்லாம் சரிவரும், அமெரிக்க இராணுவம் வியட்நாம் போரில் பாவித்த உளவியல் யுத்தத்தின் ஒரு பகுதியாக 'மக்களின் இதயத்தையும் மனத்தையும் வென்றெடுத்தல்' என்ற தந்திரோபாயம் வெற்றியளிக்கும் எனக் கருதி, ஊரெல்லாம் காப்பரண்களும், முட்கம்பிகளும், 'டிசைன், டிசைனா'கப் போட்டு விட்டுக் காத்திருந்தது இராணுவம். இப்பொழுது அதற்கும் வில்லங்கம் வந்துவிட்டது.**



கிறதல்லவா?. முன்னைய காலத்தில் மூவர்ண அட்டை என்றால் பெரிய வேலை அது. மூவர்ண 'புளொக்' செய்யக்கூடிய, வர்த்தக ரீதியாக இயங்கிய, ஒரேயொரு நிறுவனமாக 'பிரேமதாசா கம்பனியே' கொழும்பில் கொடிகட்டிப் பறந்தது. நிறங்களைப் பிரித்து மூன்று புளொககுகளாக உருவாக்கக் கூடிய சித்து விளையாட்டு தெரிந்த நிறுவனம் இது. நீர் வர்ணம் அல்லது போஸ்ரர் வர்ணத்தில் தீட்டப்பட்ட படத்தைக் கொடுத்தால் மூன்று புளொக்குகள் தருவார்கள். முதலாவதாக மஞ்சள், பின்பு சிவப்பு அதன் பின்பு நீலம் என ஒன்றின் மேல் ஒன்றாக ஒரே தாளில், பதிவு விலகிச் செல்லாமல் அச்சுப்பதிவாகும். ஆளணி, வேலைப்பாடெல்லாம் அதிகம். இன்றோ கணனி எந்த அளவிலும் வர்ணப்படங்களைப் பிரதிப் பதிவாக்கிவிடுகிறது. யார் நினைத்திருந்தார்கள் இப்படியெல்லாம் நடக்குமென்று'. வருடக்காணக்காக எண்ணெய் வர்ணச் சித்திரங்களோடு வாழ்ந்து உருவாக்கிய உலகப்புகழ் பெற்ற 'யேசுவின் இறுதிப்போசனம்' போன்ற ஓவியங்களை வரைந்த ஓவியர்கள் காலத்துக்கக்கு முன்பாகப் பிறந்ததினால் விரயமாக்கப்பட்டுவிட்ட தமது ஆற்றலை நினைத்து இன்றிருந்தால் கவலப்படுவார்களா? இன்று இந்த 'கம்பியூட்டர் கட்அவுட்' கலாச்சாரம் தெருவெல்லாம் பரவிவிட்டதல்லவா? நல்லூர் வீதியில் 'டயலக்' தொலைபேசிக் கம்பனியின் பாரிய விளம்பரத்தை நீங்கள் பார்க்கவில்லையா? அந்த வீதியால் போக நேர்ந்தால் அதைப் பார்க்காமல் இருக்க முடியாது. அதுதான் விளம்பர வீயூகம்.


தியாகி திலீபன் இந்த இடத்தில்தான் உயிர் நீத்தான் என்பதை இந்த 'கட் அவுட்' குறியீட்டு வடிவத்தில் பூடகமாகக் காட்டுகிறதோ என நீங்கள் மண்டையை உடைக்கத்தேவையில்லை. எல்லாம் மறந்துபோன சங்கதியென்று அயலிலுள்ள ஐஸ்கிறீம் கடைகளுக்கு கூடும் இளவட்டங்களும் குறியிட்டு 'மைமிங்' மொழியில் பேசுகின்றனரா என்பதுதான் யோசிக்க வேண்டிய சங்கதி. மறந்துபோவது மனித இயல்புதான். மறந்து போவதும் பின்பு புதிய சூழலுக்கு இசைவாக்கம் பெறுவதும் மனித நடத்தை என்ற உளவியல் உத்தியை முறையாகப் பயன்படுத்தியது. சிறீலங்கா படைகள்தான். யாழ் குடாவை ஆக்கிரமித்ததும் முதல் வேலை 'புல்டோசரு'க் குத்தான். எல்லா நினைவுச் சின்னங்களும், முக்கியமாக மாவீரர் துயிலும் இல்லங்கள், நினைவுத் தூபிகள் தரைமட்டமாகின. சனம் மறந்து போகும். பிறகு எல்லாம் சரிவரும், அமெரிக்க இராணுவம் வியட்நாம் போரில் பாவித்த உளவியல் யுத்தத்தின் ஒரு பகுதியாக 'மக்களின் இதயத்தையும் மனத்தையும் வென்றெடுத்தல்' என்ற தத்திரோபாயம் வெற்றியளிக்கும் எனக் கருதி, ஊரெல்லாம் காப்பரண்களும், முட்கம்பிகளும், 'டிசைன், டிசைனா'கப் போட்டுவிட்டுக் காத்திருந்தது சிறீலங்கா இராணுவம், இப்பொழுது அதற்கும் வில் அலங்கம் வந்துவிட்டது. போர் நிறுத்தம் வந்து இரண்டு வருடங்களாகியும் மக்கள் மீளக் குடியமரவில்லை. வீதிகளில், அலுவலகங்களின் முன் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டப் பேரணி என்று தொல்லை அதிகமாகிவிட்டது. இந்தச் சனத்தை மாற்றவே முடியாது என்று இன்னும் ஏன் இராணுவமோ தெற்கு அரசியல்வாதிகளோ நினைக்கவில்லை. இவர்களின் இதயமும் மனமும் எப்பொழுதோ முழுமையாக வெல்லப்பட்டுவிட்டதென்ற சூட்சுமத்தை இன்னும் விளங்கிக் கொள்ளாமல் இருக்க முடியுமா? அதுதான் சிங்கள பௌத்த அரசியலின் மனம். அதுபோக, மீண்டும் இலக்கியத்துறைக்கு வருவோம்.

இது நாற்பதாண்டுகளுக்கு முன்பிருந்த கொழும்புக் கதை. வெள்ளவத்தையில் எழுத்தாளர் செ.கணேசலிங்கன் நடாத்திய விஜயலக்சுமி புத்தகசாலையின் முன்பாக மாலை வேளைகளில் கலகலப்பு அதிகம். அலுவலகங்களிலிருந்து அறைகளுக்கு ஓடோடி வந்து, அவசர அவசரமாக குளியல் அறையில் உடல் நனைத்துவிட்டு, 'காந்தி லொட்ச்' அல்லது 'லட்சுமி பவானி'ல் வடை சட்னி, தேனீர் முடித்துக்கொண்டு, தியேட்டருக்குப் படையெடுப்பவர் சிலர். வெள்ளவத்தைக் கடற்கரையின் கருங்கற்பாறைகளில் அமர்ந்து கதை அளக்கிற அலம்பலில் பொழுதைக் காற்றோட்டமாகக் கழிக்கும். யாழ்ப்பாணத்து 'வெள்ளைக் கொலர்' உத்தியோகத்தரில் சிலர் அறைக்குத் திரும்பும் வழியில் விஜயலட்சுமி புத்தகசாலையின் முன்பாகக் கூடுவது வழக்கம். இவர்கள் பெரும்பாலும் கலை, இலக்கியம் என்று அலைபவர்கள் புத்தகங்களைத் தட்டிப்பார்ப்பார்கள். இவர்கள் மேல் காற்றில் மிதந்து வந்து போவது போலிருக்கும். "Pearl.S.Buck இன் 'Good Earth' வாசித்தால்தான்

இலக்கியம் என்றால் என்னவென்று விளங்கும்" என்று கூறி ஆங்கிலம் தெரியாத எழுத்தாளர் ஒருவரை மட்டம் தட்டவார் ஒருவர். அவர்கள் இல்லாவிட்டால் ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஒரு பக்கத்தால் பொறிந்து விழுந்துவிடும் என்பது போலவும், எவ்வளவு சிரமப்பட்டுத் தாம் விழுந்துவிடாமல் தாங்கிப் பிடித்துக்கொள்கிறோம் என்பது போலிருக்கும் சில பிரபலங்கள் உதிர்க்கும் வார்த்தைகள். நாங்கள் வாய்பிளந்து அவர்களைப் பார்த்துக்கொண்டிருப்போம். இலக்கியம் என்றால் இவ்வளவு தொந்தரவான விடயமென்று அந்தநாட்களிலேயே ஒதுங்கியிருக்க வேண்டும். ஏதோ இந்தத் துறையில் காற்றோடு காற்றாக இழுபட்டு வந்துவிட்டோமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. Henry Miller எழுதிய Tropic of cancer, Tropic of Capricorn, D.H.Lawrence எழுதிய Lady Chaterly's lover, Alberoto Moravia எழுதிய Two Woman, Woman of Rome, Herald Robinson எழுதிய Carpet Baggers போன்ற ஆங்கில நாவல்கள் பற்றியெல்லாம் பேசினார்கள். இவை அனைத்திலுமே பாலியல் சார்ந்த, ஆபாசம் நிறைந்த, ஆனால் இலக்கியத்தரமான வையாகக் கணிக்கப்பட்ட, நாவல்கள் எனப் பின்னர் அறிய முடிந்தது. குடும்ப வாழ்க்கையை ஊரிலே இழந்து, தனிமைப்பட்டு பொருள் தேடக் கொழும்பு வந்து, அறை வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கும் இவர்களைப்பற்றி மறைந்த அரசியல்வாதியான பீட்டர் கெனமன் இவ்வாறு குறிப்பிட்டார் "யாழ்ப்பாணத்து மக்களின் பொருளாதாரம் தபாற்கட்டளைப் பொருளாதாரம்தான்" என்று. அரச திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள், வங்கிகள் என வாழ்க்கையை அவற்றோடு இறுக்கிக்கொண்ட இவர்களின் மன இறுக்கத்திற்கு தீனிபோட தமிழ்த் திரைப்படங்களே கடைவிரித்தன. எம்.ஜி.ஆர், சிவாஜி யுகம் அதன்பின் பிறந்து நீண்டது. இலக்கியமும் படைப்புக்களும் எந்த மூலைக்கு?

பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்டு, அருந்ததி இயக்கிய 'முகம்' திரைப்படத்தில் வரும் கதாபாத்திரங்களை இந்தக் கொழும்பு வாழ்க்கையோடு ஒப்பிட முனைகிறது மனம். பிரான்ஸுக்கு தொடக்க காலங்களில் குடும்பங்களைப் பிரிந்து புலம்பெயர்ந்து தனித்து விடப்பட்ட வாழ்க்கையின் அவலங்களை உண்மையாகப் பேசுகிறது இத்திரைப்படம். இத்தியத் தமிழ்ப் படங்களில் பெரும்பாலும் மக்களைக் கனவுலக யாத்திரைக்கு அழைத்துச்செல்லும் பாணி இன்னும் மாற்றமடைந்தபாடில்லை. அடைய முடியாத இன்பங்கள் வெற்றிகளை, ஆழ்மன ஏக்கங்கள் எதிர்பார்ப்புக்களை , சில கணப்பொழுது அடைந்துவிடுகின்ற திருப்தியை வழங்க இந்திய திரை உலகம் மக்களின் மனங்களைக் குத்தகைக்கு எடுத்திருக்கறது போலும்.

இவ்வாறான உன்னத மன நிலைதான் போதைகளும் வாரி வழங்குகின்றனவே. இதில் வியாபாரிக்குத்தான் எப்பொழுதும் இலாபம் கிடைக்கிறது. அதற்குமேல் கவலையாவது மண்ணாங்கட்டியாவது. சொற்ப நேரம் கவலையை மறந்து சந்தோசமாக இருந்தால் போதாதா? ஆங்கில துப்பறியும் நாவல் பிரபல எழுத்தாளராக 'பீட்டர் சென்னியின் நாவலொன்றில் வரும் அட்டை முகப்பு வாக்கியம் இவ்வாறு வருகிறது. "விரைவாக வாழ்ந்துவிடு, இளமையாகவே இறந்துவிடு, பார்வைக்கு அழகான பிணத்தை விட்டுச்செல்" என்பதே அந்த வரிகள். போதை வஸ்துப் பாவனைப் பழக்கமுள்ள இளவட்டங்கள் இந்த வரிகளைத்தான் எங்கோ படித்துவிட்டார்களோ? மனித சமுதாயம் ஆராக்கியமாக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும் என்ற கோட்பாட்டையே சகல மெய்யியல், மத, சித்தாந்த சிந்தனைகளும் வலியுறுத்திய போதிலும், உலகமும் மனித சமுதாயமும் காப்பாற்றப் படுமா என்று கவலைப் படுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.



'அசைகின்ற, அசையாத எல்லா உயிரினங்களும், திண்ம, திரவ, வாயுப்பொருட்களும், பிரபஞ்ச வெளியோடு இணைந்த ஒருமையின் பின்னால் கட்டமைப்பில், பிறப்பதும், இறப்பதும், பழையன கழிதலும், புதியன புகுதலும் நிகழ்கின்ற காலவெளியின் தூசுத்துகளாகக்கூட முக்கியம் பெருத உனக்கு ஏன் உலகத்தைப் பற்றி கவலை' என்று அந்த வெள்ளைத்தாடிச் சாமியார் வெருட்டுகிறார். செல்வச் சந்நிதி கோவிலுக்கு இப்பொழுது பிச்சைக்காரர்கள் வந்து சேர்ந்துவிட்டார்கள். குடும்பங்களால் கைவிடப்பட்ட வயோதிபர்கள், பிச்சைக்காரர்கள் போலத் தோற்றமளிக்கும் சாமியார்கள், சாமியார்கள் போல தோற்றமளிக்கும் பிச்சைக்காரர்கள் எனப் பல ரகங்கள். வெள்ளிக்கிழமைகளில் சனத்துக்குக் குறைவில்லை. பட்டுவேட்டிகள், சேலைகள், பஞ்சாபிகள், சுடிதார், நகைச்சாத்துப்படிக்கு ஒரு குறைவுமில்லை. அட! இந்தக் கோவிலில் காணாத 'செல்லடியா'? எவ்வளவு பெரிய தேர் எரிக்கப்பட்டது. ஆமிக்காரர் பல் விளக்கக் கரி பற்றாக்குறையாக இருந்தால் தேரைக் கரியாக்கி விட்டார்கள் போலும், இவ்வாறெல்லாம் நடைபெற்ற இடமா இது என்பதை இந்தச் சனம் மறந்துபோய்விட்டதா? அல்லது உள்ளத்தினுள் உறங்கு நிலையில் தேங்கிப்போயிருக்கிறதா? எல்லாவற்றையும் மறப்பது மனித இயல்பா?

## அஞ்சலி



யாரும் எப்போதும் மறக்கவும் மன்னிக்கவும் முடியாத நிலையில் கப்டன் வாமகாந் படு கொலை செய்யப்பட்டிருக்கிறார். விடுதலைப் போராட்டத்தில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் களம் ஒன்றில் விழுப்புண் ஏற்றவர் வாமகாந்.

அமைதியான சுபாவமும் மெலிந்த தோற்றமும் தீவிர மனதும் தீட்சண்யமான கண்களும் உறுதியான குரலும் வாமகாந்தின் அடையாளங்கள். எப்போதும் விடுதலையை முன்னகர்த்தும் சிந்தனை. சக போராளிகளை சிநேகமுடன் பக்குவப்படுத்தும் அக்கறை. எல்லோரையும் நியாயத்தின் பக்கம் நிற்க வைக்கும் முயற்சி. எழுத்தும் வாசிப்பும் பகிர்வும் நட்பும் என்ற செயல். இப்படித்தான் வாமகாந் உடல்நிலை பாதிப்புற்ற நிலையிலும் இயங்கினார். வாமகாந் காந்த விசையுடைய ஒரு சுழல்மையம்தான். நல்லன செய்யும் வல்ல இதயம் ஒன்று வாமகாந்துள் துடித்துக்கொண்டிருந்தது.



வெளிச்சம் பவளஇதழ் வெளியீட்டுவிழாவில் வாமகாந்தை தேசியத்தலைவர் கௌரவிக்கிறார்.

களத்தில் ஏற்பட்ட விழுப்புண்ணால் உடலில் இடுப்புக்குக் கீழே இயங்கமுடியாத நிலை வாமகாந்தை என்றைக்கும் முடக்கிவிடவும் இல்லை; அவரை தயக்கங்களுக்குள்ளும் தாமதங்களுக்குள்ளும் கட்டுப்படுத்திவிடவும் இல்லை. வாமகாந் வீச்சுடன் இயங்கினார். அதிசயங்கொள்ளக்கூடிய வகையில், மதிப்புயரக்கூடிய விதமாகத்தான் வாமகாந்தினுடைய எல்லாக் காரியங்களும் இருந்தன.

வாமகாந்தின் கவிதைகள் போராளிகளிடத்திலும் போராட்டப் படைப்புகளின் அடையாளத்திலும் குறிப்பிடக்கூடியவையாக இருந்தன. எழுத்துடன் மட்டும் தன்னை மட்டுப்படுத்திவிடாமல் தொடர்ந்தும் போராட்ட வேலைகளை பகிர்ந்தெடுத்துச் செய்தவர். வாமகாந்துக்கு இலக்கிய உறவுகளும் அதிகம்; போராட்ட உறவுகளும் அதிகம். தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களிடம் வாமகாந் வைத்திருந்த மதிப்பும் பற்றும் அவருக்கு கௌரவத்தைப் பெற்றுக்கொடுத்தது.

போர்நிறுத்த காலத்தில் இன்னும் பணிகளைப் பொறுப்பெடுத்துக்கொண்டு செயற்பட்ட இந்த நிறைவான போராளியை முதுகில் குத்தியதுபோல் போராட்ட விரோதிகள் கொன்றுள்ளனர். விழுப்புண் ஏற்று உடலியக்கம் பாதிப்புற்ற போராளிகள் அறுவரோடு வாமகாந்தும் நித்திரையில் படுகொலை செய்யப்பட்டார். இந்த ஈனச்செயலை என்றும் எவரும் மறக்கவும் மன்னிக்கவும் முடியாது.

வாமகாந்துக்கும் அந்நிகழ்வில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட ஏனைய போராளிகளுக்கும் வெளிச்சத்தின் மதிப்பார்ந்த வணக்கங்கள்.

## வேண்டுதல்

யாரோ சொல்கிறார்கள்
உன்னை நம்பாதேயென்று

எப்படி நானிருப்பேன்....?


கரையும் பொழுதுகளெல்லாம்
உன்னையே நினைவில்நிறுத்த
கால்கள் மிகவேகமாய்...

யார் சொன்னால் என்ன....

எனக்கு நீ
எதையும் தரவேண்டாம்.

உன்னிடம் நான்கேட்பது
என்தாய்மடியை....

வாமகாந்




# உணர்வில் உரசலைக்காட்டிலும் உறுத்தலை ஏற்படுத்தும் கவிதைகள்

## வைரமுத்து சுந்தரேசன்

*கவிஞர்* **சோ.பத்மநாதனின் தென்னிலங்கைக் கவிதைகள்**

ஈழத்து தமிழ் ஆக்க இலக்கிய வரலாற்று தொடரில், நிகழ்காலப் படைப்பாளிகள் வரிசையில் தமக்கெனத் தனியானதொரு ஸ்தானத்தை நிர்ண யித்தும், பரிணாமச் சிதறல்கள் காரணமாக தொன்மை யாகவே அங்கீகரிக்கப்பட்ட இலக்கிய மரபுகளில் ஏற்பட்ட தேய்வுகள் தொடர்பாக மிக விழிப்பாக உள்ளவருமான சோ.ப.அவர்களின் தென்னிலங்கைக் கவிதை என்ற தலைப்பிலான மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுதியில் 53 கவிதைகள் உள்ளகப் படுத்தப்பட்டுள்ளன. தென்னிலங்கையைச் சார்ந்த முன்னணிக் கவிஞர்களின் ஆக்கங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட கவிதைகள் இத் தொகுதியில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 15 கவிதைகள் சிங்கள மூலத்திலிருந்து ஆங்கிலத்தில் பிற தென்னிலங்கைக் கவிஞர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டனவும் ஏனைய 38 கவிதைகள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டனவும் ஆகும். கவிதைகள் காதல், சமூகச்சீர்கேடு, யுத்த அனர்த்தம், ஏழ்மை, உறவு இன்னோரன்ன பன்முக சாரப்பொருள்களைத் தம்மகப்படுத்தி நிற்கின்றன. உணர்வில் வெறும் உரசலை ஏற்படுத்துவதைக் காட்டிலும் உறுத்தலை ஏற்படுத்தும் பாங்கில் அவற்றின் ஏற்புடைமை மேலும் ஒருபடி ஊர்ஜிதப்படுத்தப்படுகிறது.

நூலைப் புறநிலையில் அணுகும்போது, செறிவான அகச்சோதனை ஒன்றினால் மட்டுமே அகழ்ந்து உணரக்கூடிய உள்ளார்ந்த செய்தி ஒன்று முகப்போவி யத்திற் புதைந்து கிடப்பது குறிப்பிடக்கூடிய அம்சம். குறுக்குத் தடைகளும் குழிகளும் தூர்ந்துபட்ட துண்டங் களும் நிறைந்த நெரிசல் ஊடாகச் சுமைகளுடன் அவலப்பட்ட மனிதர்களின் அசைவாட்டங்களையும் நகர்வுகளையும் அவதானிக்கமுடிகிறது. கைக்கடக்க மான பருமன், அச்சுப்பதிவின் நேர்த்தி, தாள்களில் ஒழுங்கமைந்த செம்மையான ஓரவெளிகள் ஆரோக் கிய வாசிப்புக்கு அடித்தளமாகின்றன.

மூலக்கவிதைகள் மரபுசாராப் பண்பினவாய் அமைவதால் மொழியாக்கம் செய்யப்பட்ட நிலையிலும் அவை அதே பண்பினவாய்த் தோற்றம் பெறுகின்றன. கவிதை மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரை உள்ளடக்கத்திற்கு முக்கியத்துவம் தரப்படுகின்றதே யன்றி உருவத்திற்கு அல்ல. குறிப்பாக அரசியற் குழப்பங்கள் உருவாக்கிய கசப்புணர்வு, பகையுணர்வு காரணமாக இரு இனங்கள் பிளவுபட்டுநிற்கும் இச்சூழலில் ஓரினம் தொடர்பாக மற்ற இனத்தைச் சார்ந்த முற்போக்குச் சிந்தனையாளரின் உணர்வுப் பகிர்தலை மையமாகக் கொண்டு இம் மொழிபெயர்ப்பு முயற்சி மேற்கொள்ளப்பட்டமை இங்கு நோக்கப்பட வேண்டும். ஆயின் மொழிபெயர்ப்பின் போது மூலக் கவிதையில் இடம்பெறும் சொற்கள், சொற்றொடர்களின் உட்பொருள் மாறாமல், மழுங்கடிக்கப்படாமல் பார்க்கவேண்டியது மொழிபெயர்ப்பாளரின் கடமை ஆகிறது. குறியீடுகள், படிமங்கள், மற்றும் உருவக அணிகளை இனங்கண்ட நிலையில் பொருத்தப்பாடான பதப்பிரயோகங்களை மேற்கொள்ளப்பட்டாலேயன்றி, கருச்சிதைவு ஏற்படுவது தவிர்க்கமுடியாது போய்விடும்.

இலக்கிய மொழிபெயர்ப்பைப் பொறுத்தவரை, மூலமொழி, இலக்கியமொழி ஆகிய இரண்டிலும் மொழிபெயர்ப்பாளரின் சிறப்புத்தேர்ச்சியின் அவசியம் உணரப்படுகிறது. அடுத்து, கவிதையையும் கவிஞனை யும் வேறுபடுத்தி நோக்கமுடியாது. கவிஞனின் தரிசன ஞானத்தின், அனுபவத்தின் பிரதிபலிப்பே கவிதை. மொழிபெயர்ப்பின் விளைவு வெறுமனே மொழிபெயர்ப் பாக மட்டும் அமையாது கவிதையாகவும் அமைய வேண்டுமாயின் கவிஞன் ஒருவனால் மட்டுமே அது சாத்தியப்படலாம்.

பேச்சுநடை அதிகளவிற் கவிதைகளில் இழை யோடுவதையும் பெரும்பாலான கவிதைகள் சுயநிலை வருணனையில் (First Person Narration) அமைந்திருப் பதையும் அவதானிக்கமுடியும். அதாவது கவிஞன் சம்பந்தப்பட்ட பாத்திர நிலையில் நின்று உணர்வை வெளிப்படுத்தல். பொருள்அடர்த்திமிக்க பதப்பிரயோகங் கள் நூல்பூராவும் இடம்பெற்று கவிதைகளின் தாக்கு வீச்சுக்கு வழிவகுக்கின்றன. எனினும் தமது மரபுக்க வித்திறனை சோ.ப.அவர்கள் ஆங்காங்கே புலப்படுத்தத் தவறவில்லை.

பிரபுத்தன் என்ற தலைப்பிலான முதற் கவிதை சாதாரண குடிமகன் ஒருவன் தனது குடும்பசுமை,

சமூக பொறுப்புகள் பற்றி துறவு பூண்ட சித்தார்த்தரை நோக்கி முறைப்பாடு செய்யும் பாங்கில் அமைந் துள்ளது. வறுமையில் வாடும் தன் மனைவி, பிள்ளை களை விடுத்து, சித்தார்த்தர் போல தன்னால் எவ்வாறு துறவறம் பூண முடியும் என அவன் கேள்வி எழுப்பு கிறான்.

"கந்தை உடையோடு
எலும்பும் தோலுமாய்
இரா முழுதும்
கண்ணுறங்காமல்
நிரஞ்சலா
மா இடிக்கிறாள்
பால் கரைக்கிறாள்
கஞ்சி காய்ச்சுகிறாள்
துணி துவைக்கிறாள்
.....................................
.....................................
இவர்களை விட்டுவிட்டு
துறவு பூண என்னால் முடியாது."

இதே கவிதையில் இடம்பெறும் பின்வரும் அடிகள் தமிழின் பழமையான அகவற்பா வடிவத்தில் அமைந்தன.

"நிர்மல வானில் நிறைமதி பொழிதரும்
பால் என் குழந்தையின் நெஞ்சில் பாயும்
நாளை உலகில் நவநவக் கனவில் என்
பாலன் இதழ்க்கடை பயிலும் குறுநகை
வாவிகள் கட்டி வளம் பல பெருக்கிய
பூதங்கள் மீள என் நாட்டில் பிறந்துள."

'ஞாபகம்' என்ற கவிதையில்

"பறக்கும் பஞ்சு முகில் போல
அவையெல்லாம்
அநித்தியமாய்ப் போயின
இதயங்கள் உறவை மறக்க
அரும்பிய முளையைக்
கருக விட்டோமே."

என்ற அடிகள் காணப்படுகின்றன. திடமான திசை போக்கின்றி அங்குமிங்குமாக அசையும் பஞ்சு முகிலுக்கு ஒப்புமையாகிறது. உறவின் நிலையற்ற தன்மை தோல்வியுற்ற காதலின் நிரந்தரமற்ற பண்பைச் சுட்டுவதற்கு அநித்தியம் என்ற சொல்லாட்சி பொருத் தமாக அமைவதுடன் "அரும்பிய முளையைக் கருக விட்டோமே" எனக் கூறுவதன் மூலம் வாசகனிடமிருந்து அநுதாபத்தைப் பெறும் முயற்சியில் வெற்றியும் காணப் படுகிறது.

சமூகச் சீர்கேட்டை மிகத் துல்லியமாகப் புட்டுக் காட்டும் கவிதையாக "உல்லாசப் பயணிகள் வந்திறங்கியபோது" என்ற கவிதை இடம்பெறுகிறது.

எங்கள் ஆண்கள்
வலைகளைத் தூரவைத்துவிட்டு
நட்சத்திர ஹோட்டல்களில்
பரிசாரகர்கள் ஆயினர்
எங்கள் பெண்கள்
விலைமாதர் ஆயினர்.

சுயகௌரவத்துடன் சுதந்திரமாய்த் தொழில்செய்த சுதேசிகள் அந்நியருக்குத் தொண்டுபுரியும் அடிமைத் தனமும், ஒழுக்கச் சீர்கேடும் சித்தரிக்கப்படுகின்றன.

'கிறிக்கெற் ஆட்டம் 1983' என்ற கவிதை இனக்கலவரத்தில் வெடித்த வன்முறைகளையும் துவேஷ உணர்வின் அகோரப் பசிக்குத் தீனியாய்ப் போன மனித உயிர்களையும் பற்றியது.

"...................................
அரசமரத்தின் கீழ்
பயத்தால் நடுங்கியபடி விழுந்த மனிதனை
தடிகளாலும் கற்களாலும் அயலவர்கள் தாக்க
இரண்டு பொலிஸ்காரர் மறுபக்கம் பார்க்கிறார்கள்."

அரசமரம் பௌத்தர்களின் புனித விருட்சம். அதன் கீழ்தான் மனித சித்திரவதை நடைபெறுகிறது. அக்கொடுமையைக் கண்டும் காணாது மறுபக்கம் பார்க்கின்றனர் பொலிஸ்காரர். மதபோதனைகளுக்கு முரணான நடைமுறை வாழ்வும் நிருவாகப் பாரபட் சங்களும் இங்கு சூக்குமமாகத் தெரிவிக்கப்படுகின்றன.

'சின்ன மகள்' என்ற கவிதையில் பிழைப்பூதியத் திற்காகப் பிறந்த நாட்டை விட்டுப் பிற தேசம் பெயர்ந்து நாள்பூரா உடல்தேய வருந்தி உழைக்கும் ஓர் இளம் பெண்ணின் இன்னல் வெளிப்படுகிறது. வெளிநாட்டில் 'லிஸி', 'பணிப்பெண்', 'செவிலி', 'சமையற்காரி' என்றெல்லாம் அழைக்கப்படும் அவளுக்குக் கிடைத்த அனுபவங்கள் அந்நியமும் இழிவும் அதிகாரத் திணிப்பும்தான்.

இரத்தத்தோடு கலந்த பாசத்தை, அன்பை, பரிவை தன் தாயிடமிருந்து மட்டும்தான் பெறமுடியும் என்பதை அவள் உணர்கிறாள்.

"ஆனால்
அம்மா
அன்றாட வேலைமுடிந்து
என் பாயில்
உடலை நீட்டுகையில்
என் கனவுகளில்
நீ வந்து
காதோடு அழைக்கிறாய்
'சின்ன மகளே' என்று."

ஏழ்மையின் நிமித்தம் வெளிநாடு செல்லும் இளம்பெண்கள் அங்கு படும் துன்பங்களை - மனித நேயம் எதுவுமற்ற சூனியவெளிகளில் அவர்கள் வாழ்வு வெறுமையாகிப் போவதை - இப் பாடல் துலாம்பர மாகக் காட்டுகிறது.


கவிதையின் புனிதமும் அது விமர்சனத்திற்கு உள்ளாகி நலுங்கிவிடும் பாங்கும் மிக அற்புதமாக 'கவிதையும் விமர்சகனும்' என்ற கவிதையில் வெளிக் கொணரப்படுகின்றன. காலையில் முகிழ்த்த குருத்துக்கும் கிராமப்புறத்திலிருந்து வந்த மணமகளுக்கும் கவிதை உவமிக்கப்படுகிறது.

"உன் ஸ்பரிசத்துக்காக
உள்ளூர ஏங்குகிறாள் அவள்.

ஆனாலும்
அஞ்சுகிறாள் அவள்
உன் பிடியில்
நசுங்கி விடுவோமா என்று."

கவிதையின் உயிரோட்டத்திற்கு விமர்சனம் ஊட்டும் உரமும், விமர்சனத்தின் பன்முகப் பரிமாணங்களிற் கவிதை படும் பாடும் எளிமையாக இனிமையாகப் புலப்படுத்தப்படுகின்றன.

கவிஞர் சோ.ப.அவர்களின் கவித்துவமும் தமிழ், ஆங்கிலம் ஆகிய் இரு மொழிகளில் அவர் கொண்டுள்ள வித்துவமும் இக் கவிதைத் தொகுதியில் இணைந்து இதம் ததும்பக் காண்கிறோம். இலக்கிய வெளியில் அவரின் பதிவுகள் நித்தியமாகின்றன. இனியும் இனியும் இந்தக் கவிஞன் எழுதவேண்டும் இனிக்கும் கவிதைகள்.



# புதிய கதைகள்

## – சிறுகதைத் தொகுப்பு
## – சில மனப்பதிவுகள்

மு.அநாதரட்சகன்

அண்மையில் வெளிவந்த முக்கியமான சிறுகதைத்தொகுதிகளில் கப்டன் வானதி வெளியீடாக வந்துள்ள மலைமகளின் 'புதிய கதைகள்' குறிப்பிடத் தக்கது. இத்தொகுப்பிலுள்ள பதினைந்து கதைகளும் ஆசிரியரின் அனுபவ வெளிப்பாடுகளின் பன்முகத் தெறிப்புகள் எனலாம். இவை போராட்டக் களத்தில் நிற்கும் ஒரு போராளியின் நேர் அனுபங்களின் விரிவாக நிலைக்கின்றன.

மலைமகளின் இக்கதைகள்,

1. ஒரு பெண் போராளியின் களமுனை அனுபவங்கள்,
2. போரியல் வரலாற்றில் இடம் பிடித்த சில முக்கியமான களமுனைகள் பற்றிய செய்திகள், பெண் போராளிகளின் பன்முக ஆளுமைக் கூறுகளின் வெளிப் பாடுகள்,

- ஆகியன பற்றி பரவலாகப் பேசுகின்றன.

எமது தமிழர் சமூக அமைப்பில் காலங்காலமாக ஆண்களின் மேலாண்மை முதன்மைப்படுத்தப்பட்டு வந்ததால் நமது மரபுவழி இலக்கியங்களிலிருந்து தற்கால இலக்கியங்கள்வரை பெண்களின் ஆற்றல்கள், போர்க்குணாம்சங்கள் மறைக்கப்பட்டு வந்துள்ளது. பெண்ணுரிமை எனும்போது கல்விவாய்ப்பு, தொழில் வாய்ப்பு, பெண் அந்தஸ்து என்ற வகையில் குறுகிப்பார்த்து திருப்திகாணும் மனோபாவமே இன்னும் எம்மிடையே உள்ளது. ஆயினும், ஈழத்தில் தமிழர் விடுதலைப்போராட்டம் பரிமாணம் பெற்றதிலிருந்து, குறிப்பாக ஆயுதப் போராட்டத்தில் பெண்களும் போராளிகளாக களமுனைகளில் நின்று சாதனைகள் படைக்க முற்பட்டதன் பின்னர்தான் எமக்கு பெண் விடுதலை பற்றிய புதிய பார்வைத் தெளிவு ஏற்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்நூலாசிரியரும் பெண் போராளியாக நின்று தன்னைப் பாதித்த களமுனை அனுபவங்களுக்கு ஒரு இலக்கிய அந்தஸ்த்தினை வழங்கி, வீறார்ந்த போர்க்கள நிலைமைகளை காட்சிப் படுத்தும் இளம் படைப்பாளியாக மட்டுமன்றி, மிக நுட்பமான மனவியலாளராக, தன்நல மறுப்புள்ளவராக, வீரமிக்கம் போராளியாக, விசுவாசமான பெண்ணியலாளராக, அனைத்துக்கும் மேலாக ஒரு மானிட நேசிப்பாளராகத் தன்னை இத்தொகுப்பில் இனங்

காட்டியுள்ளார். தவிர, இன்றைய சூழலில் போரியல் இலக்கியத்துக்கு ஊட்டமளிக்கும் வகையில் போரியல் வரலாற்று ஆவணமாகவும் இதனைக் கொணர்ந்துள்ளார் என்பது பாராட்டப்பட வேண்டியது.

இத்தகைய சிறப்புகளுக்கு ஆதாரமாக சில கதைகளை வகைமாரியாகக் கொள்ளலாம்.

தொகுப்பில் களமும் காட்சியும் வாசகன் மனதில் விரிந்து சிலிர்ப்பை ஏற்படுத்தும் கதைகள் சில உள. அவற்றுள் "யாருன்னை அழைத்தார்" என்பதும் ஒன்று.

எதிரியின் காவலரண்களைக் கைப்பற்றி முன்னேறும் பெண் போராளிகளின் போராற்றலை இது இயல்பாகச் சொல்கிறது. களத்தில் எதிரியாக நிற்பவன் இறந்தபோது, சக மனிதனின் இழப்பாகக் கருதி,

"இளைஞனே யார் நீ...?
எங்கிருந்து வந்து இங்கென் காலடியில்
செத்துக்கிடக்கின்றாய்?
இங்கே உனக்கு என்ன வேலை?"

- என ஒரு கவித்துவ நடையில் கேட்பது போராளியின் நெகிழ்வான இதயத்தை அழகாகக் காட்கிறது. களப்பலியான அகல்யா, ஆதிரை, அலையிசை என்போர் மறக்கப்பட முடியாதவர்கள். அவர்களது இழப்பு மனவலியை ஏற்படுத்துகின்றது. இக்கதை மிகை மனவெழுச்சியின்றி மிக்க நிதானத்துடன் நகர்த்தப்படுகின்றது.

அதேபோல், 'விலை' என்ற கதையில் வரும் சுருதி என்ற பாத்திரம் உணர்வுச் செறிவுடன் படைக்கப்பட்டுள்ளது. காவலரணில் கிடக்கும் அவளது ஒற்றைக்கால் செருப்பும் நினைவில் நின்று கனக்கின்றது. பெண் போராளி ஒருவர் இராணுவ செக்பொயின்ரில் 'பொடிசெக்கிங்' என்ற போர்வையில் பெண்சிப்பாயாலேயே அவமானப்படுத்தப்படுவதையும், சுய கௌரவத்தையே கீறிப்பார்க்க முற்படும் அவர்களது பாலியல் வக்கிரப் புத்தியை "முருங்கையை விட்டு இறங்காதவர்கள்" என்ற கதை இயல்பாகச் சொல்கிறது, இதன்போது, பெண்கள் சந்திக்க நேர்கின்ற மன அவசங்களை நியாய உணர்வோடு வாசகனோடு பகிர்ந்து கொள்கிறது இக்கதை.

தாயக மண்ணில் பொருளாதாரத்தடை சுமத்திய விளைவுகளில் ஒன்றான உணர்வுக்கான அருந்தலை போர் முனைகளில் நின்ற போராளிகளும் தாங்கி நின்றமையை 'ஒரு கோப்பைத் தேனீர்' அழகாகப் பதிவு செய்கிறது. கதையில் வரும், ஒரு கோப்பைத் தேநீர் தரும் மன உற்சாகத்துடன், கஞ்சியும் கத்திரிக்காயும் தந்த பலத்துடன் கடமையில் "கண்ணாயிருந்தோம்" என்ற பகுதி, எந்நிலையிலும் தம்மிடம் விடுதலை வேட்கையின் வீறு தணிந்து போவதில்லை. சோறா? சுதந்திரமா? என்பதில் சுதந்திரமே மகத்தானது என்ற செய்திகளை இது எமக்கு சொல்லாமல் சொல்கிறது.

மானிப்பாய் சம்பவத்தினால் கொதித்துப்போன ஒரு நங்கையின் உணர்வுகளை "ஆங்கோர் காட்டிடைப் பொந்திலே" என்ற கதை கூறுகிறது.

இக்கதையில் வரும் உரையாடல்கள் சில இடங்களில் மிகை உணர்ச்சி வெளிப்பாடுகளாக அமைந்து நம்பகத்தன்மைக்கு ஊறு செய்கின்றன.

எடுத்துக்காட்டுக்கு, சம்பவம் பற்றி ''ஏதும் அறிஞ்சீங்களோ களோ அப்பா" - எனக் கேட்கும் மகளிடம்,

"இந்தக் கத்தியால அவங்கள் எல்லாரையும் ஒரு நாளைக்குக் குத்துவன். என்ன நினைச்சுக்கொண்டு இருக்கிறாங்கள் எல்லாரும், நான் பெத்த பிள்ளையள் ஆஸ்பத்திரிக் கட்டிலிலை இருக்குதுகளாம்" - என அப்பா கூறுவது வாசகனிடத்தில் நெருடலை ஏற்படுத்துவதை தவிர்க்க முடியவில்லை.

பல்வேறு களமுனைகள் பற்றியும், அவற்றில் பெண் போராளிகளின் தீரம் பற்றியும், "யாரோ யாரிவர் யாரோ" என்ற கதை ஒரு வரலாற்றுப் பதிவாக மட்டுமே நின்றுவிடுகின்றது. இதில் விவரணப்பாங்கு சற்றுத் தூக்கலாக இருப்பது புதுமையல்ல.

பெண்ணிய விடுதலை பற்றியவையாக, "கதவுகள் திறந்துதான் உள்ளன", "எனது மனிதர்கள்-2" என்ற கதைகள் தொகுப்பில் உள்ளன.

'தமிழர் பண்பாடு' என்பதனுள் ஆணாதிக்கக் கருத்தாக்கங்கள் மேலாண்மை பெற்றிருப்பதை சொல்ல முற்படுவதுடன், பெண் என்பவள் தனக்கான சுயத்தை உருவாக்கிக் கொள்ளும் தகைமை பெற்ற 'தனி உயிரி' என்பதை வலியுறுத்துவதாகவும் இக்கதைகள் உள்ளன.

"முற்றுகை" - கதையில் வரும் அங்கதச்சுவையான ஒரு பகுதி இப்படி விரிகின்றது.

"இவடத்தில் ஆரோ பெரிய ஆக்கள் நிற்கிறாங்கள் எண்டு நினைச்சுப் போட்டாங்கள் போலக் கிடக்குது. விளாசித்தள்ளுகிறான். ஐயோ... அது நாங்களடா... முருங்கைக்காய் சமைக்கிறதைத் தவிர வேறையொண்டும் நாங்கள் செய்யிறதில்லை"

எதிரியின் முற்றுகைக்குள் சிக்கிய பெண் போராளிகள் ஆபத்தான நிலைமையிலும் பகிடி, பம்பல், குறும்புத்தனங்களை தமக்கிடையே பரிமாறிக்கொள்வது விரசமில்லாமல் இக்கதையில் வெளிப்படுகின்றது. தொகுப்பிலுள்ள வேறு கதைகளிலும் இது இடம்பெற்றுள்ளது. எந்த நெருப்பாற்றையும் கடந்து வருவோம் - என்ற தீர்க்கமான நம்பிக்கை பெண் போராளிகளின் உரையாடல்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

இத்தொகுப்பினை வாசித்து முடிந்த பின் கதைகளில் வரும் பெண் போராளிகள் அப்பழுக்கற்ற படிமங்களாக நெஞ்சை நிறைத்து நிற்கின்றார்கள். அவர்களது மனவுலகம் மென்மையானது, புனிதமானது, சாய்வில்லாதது, ஆளுமைச்சிதைவில்லாதது என்பதை உணர முடிகின்றது.

மலைமகள் இவர்களுடன் களமாடிய சகாவாக, தோழியாக நின்று அவர்களைத் தனது படைப்பில் பதிவு செய்திருப்பதுடன், அவர்கள் பற்றிய நினைவுகளை எம்மிடையே பகிர்ந்து, அவர்கள் பற்றிய நம்பிக்கைகளை விதைத்து, அவர்களை மற்றவர்களுக்குப் புரிய வைத்துத் தனது படைப்பின் இலக்கினை இத்தொகுப்பின் மூலம் எட்டியுள்ளார்.


மலை மகளின் இன்னொரு பலமாக வெற்றுப் பகட்டும், மாந்திரீகச் சொல்லாடல்களுக்குமின்றி ஆற்றொழுக்கான நடை அவருக்கு வாய்க்கப் பெற்றதனைக் குறிப்பிடலாம்.

நூலின் பொலிவுக்கு அணி சேர்ப்பதற்காக அட்டைப்படம், ஓவியங்கள் அமைந்துள்ளன. கதைகளுக்கான தலைப்புக்களிலும், நூலின் அமைப்பாக்கத்திலும் இன்னும் சிரத்தை எடுத்திருக்கலாமெனப்படுகிறது.

இறுதியாக, நூலாசிரியரின் நோக்கம் தெளிவானது.

"தமிழீழப் போரரங்கில் ஓய்வெடுக்கவும், நேரமின்றி இப்போதும் விழித்திருக்கும் என் தோழிகள் பேசப் படாதவர்களாகப் போய்விடுவார்களோ என்ற பயத்தினாலேயே நான் எழுத முனைந்தேன்" - என அவர் சொல்லாத செய்தியில் குறிப்பிடுவதிலிருந்து, அவரின் படைப்பின் சத்தியத்தினை எம்மால் உணரமுடிகின்றது. ஒரு இளம் படைப்பாளிக்கு இருக்க வேண்டிய இச்சத்திய வேட்கையே மலைமகளின் "புதிய கதைகளுக்கு"க் கிடைத்த வெற்றிக்கான காரணமெனலாம்.

⊖




# மௌனப்புரட்சி

வையமே மெய்சிலிர்க்கும்
வாழ்வினை தெரிவு செய்து
பொய்மையைப், பகைப்புலத்தை
பொடிப் பொடி ஆக்கி உங்கள்
உய்வினை, உயர்வை, இளமை
உணர்வினை, உறவை, ஈழ
உய்வினுக்காக என்றே
ஒரு புறம் வைத்து இன்று
வையமே திரண்டு எங்கள்
வாழ்வினைப் பேசவைத்த
கைதொழு மரபின் ஏழு
காவிய ரிஷிகள் ஒத்த
தெய்வங்காள்! நீங்கள் கேட்ட
தீர்வுதான் கிடைக்குமென்ற
எண்ணத்தில் ஆங்காங்கே
இழுபறிகள் தோன்றுவதாய்
என்னுள்ளே ஏராளம்
எச்சரிக்கை உணர்வலைகள்,
வானம் வசப்படணும்
என்பதற்காய் நீர் கொடுத்த
தானம் மிகப் பெரிது.
கடைசி விருந்துண்ணுகையில்
ஊன் உருகிக் கருகி விழும்
ஊடறுப்புப் பார்வைகளும்,
ஞான நிலை கடந்தடர்ந்த
ஆழ் மௌனப் போதுகளும்,
வாக்குறுதி வழங்கி
வழி அனுப்பி வைத்ததுவும்.
காக்கின்ற இப்போதைப்
பொறுமை தனில் நிறைவுறுமா?

நெஞ்சம் கனத்தபடி
நேரிருந்து வழிநடத்தும்
தந்தைக்கா தெரியாது
தராதரங்கள், நான் விசரன்
சிந்தைக்குச் சொல்வேன் என்
எண்ணமெலாம் பிழை என்று.
ஆனாலும்,
வெளிநாட்டுப் பயணங்கள்
விருந்துகள், அழைப்புகள்
சமஷ்டி, சுய உரிமை
மண்சட்டி, பானை என்ற
இறங்கி வரல் போன்ற
சில உரிமைக் குறைப்புக்கள்
எல்லாம் "தனி நாட்டின்
இன்னொரு சொல்" என்பதிலே
என்னைப் போற் சந்தேகம்
எவருக்கும் இல்லை என்றால்
"நட்ட கற்கள் பேசிடும்
நாதன் உள் இருப்பதால்"

தி.திருக்குமரன்



நன்றி, ஈழவிஷன்

# சிதையும் சூழல் = அழியும் வாழ்க்கை

தி.தவபாலன்

**உலகளவில் சூழல் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருப்பவை கைத்தொழிற்றுறையும், அபிவிருத்தியும்தான். இயற்கை அழகு மிளிர இருந்த வன்னி போர் அமைதியால் அழகிழந்து சூழல் மாசுபட்டு வருகின்ற பரிதாபத்தையும் சொல்லியாக வேண்டும். கட்டுமானங்களுக்கான மணல், மண் அகழ்வு மரங்களை ஆணி வேரில் நிற்கச்செய்துவிட்டது. சாலை அமைப்பிற்கான கிரவல் மண் அகழ்வு எமது மூதாதைகளின் தொல்சுவடுகளை அழிப்பதுடன் நுளம்புக் குட்டைகளையும் உருவாக்கியுள்ளது. அதிகரித்த பொலித்தீன் பயன்பாடு மாசடைவதற்கு மற்றொரு காரணி.**

உணவகங்களில் பொலித்தீன் பயன்பாட்டுக்குப் பதிலாக இலைகள் பயன்படுத்தப்படவேண்டும் என கரைச்சி, பூநகரி பிரதேச செயலாளர்கள் அறிக்கைய ளவில் விட்டதோடுசரி. செயற்பாடு பூச்சியம்தான். இது இவ்வாறிக்க இன்றைய உலக சூழல் கருப்பொருளும் கடல் சமுத்திரங்களின் மாசடைதலைத் தடுத்தலாகும்.

இன்று உலகளவில் அதிகரித்த கப்பல் போக்குவரத்துகள், இழுவைமீன்பிடி, கடலடியில் அணுகுண்டு வெடிப்பு சோதனை, பெற்றோலியக் கிணறு களின் அழிப்பு என்பன கடல் சமுத்திர மாசுகளுக்கு காரணமாகும். இத்தகைய மாசுகளால் சூழல் வெப்ப நிலை அதிகமாக, துருவப்பகுதிகள் அதிகம் உருகத் தொடங்கும். துருவப்பகுதிகளின் உருகுதலால் கடல்மட் டம் உயரும். இதனால், பெரும் நிலப்பரப்புகள் காணாமற் போகும். அல்லது கடல் விழுங்கும். இத்தகைய ஆபத்து நிலையில் நமது தாயகமும் உள்ளது. தமிழர் தாயகம் கடல் சூழ்ந்தது. கடலே எமது பாதிப்பொருண்மிய ஆதாரம். நமது கடற்பவளப்பாறைகள் என்ற கடலுயிர், வளம் மிகுந்ததாக உள்ளது. கடற்பூங்கா என அழைக்கப் படும் இதன் மூலம் கடலின் வெப்பநிலை கட்டுப்படுத்தப் படுகின்றது. கடலின் அடியில் மறைப்புகளை இந்தப் பவள உயிர்கள் அதிகம் கொண்டிருப்பதன் காரணத்தால் பெருமளவிலான கடலுயிர்களின் சரணாலயமாக இக்கடற் பரப்பு உள்ளது. குறிப்பாக தமிழர் தாயக மேற்குக் கடல், வடக்குக் கடல் திருக்கோணமலையின் கொட்டி யாரக்குடா, மட்டக்களப்பின் கற்குடா, அம்பாறையின் அறுகம் குடா எங்கும் மிக அதிகமான பவளப் பாறைவளம் உள்ளது. இவையே கடல் நீரோட்டங்களால் ஏற்படும் நிலஅரிப்பை தடுத்து நிற்கும் காப்பாரண்க ளாகவும் உள்ளன. இப்பவளப்பாறைகள் இல்லாமற் போனால் நமது கடல் ஒரு பாலைவனமாகவே இருக்கும்.

பவளப்பாறைகளாகவே யாழ்ப்பாணத்தீவுகள் உள்ளன. யாழ்பாணத்தின் முழுமையான மிகப்பெரிய பவளத்தீவு நெடுந்தீவு, இந்தத்தீவுகளை கடலுயிர்கள் பாதுகாத்து வருகின்றன. அத்துடன் அதிகளவில் கடலுயிர்கள் வாழ்வதற்கு இவையே ஆதாரமாக இருந்து வருகின்றன. இத்தகைய கடலுயிர் சரணாயலம் இழு வைப்படகு மீன்பிடியினால் அழிக்கப்படுகின்றது. இழுவை மீன்பிடியில் அதன் அடியில் இருக்கும் பலகை - வலை என்பன இந்தப் பவள உயிர்களை அடியோடு இழுத்து அழிக்கின்றன.

இந்திய இழுவை மீன்பிடியாலும் தாயக மன்னார், யாழ்ப்பாண இழுவை மீன்பிடியாலும் இவை அழிகின்றன. எமது கடல் மாசுக்கு நமது மீன்பிடியே காரணமாக இருக்கின்றது. யாழ்ப்பாண இழுவை மீன்பிடித்தொழிலாளர்கள் இவ்வாண்டுடன் அதனை நிறுத்தவுள்ளனர். மன்னார் இழுவை மீன்பிடித் தொழிலா ளர்கள் அதற்கு இன்னமும் தயாராகவில்லை எனவே தெரிகின்றது. இன்று இதனை நிறுத்தாது போனால் நாளை கடலுயிர் அற்ற பாலைவெளியான கடலே எம்மிடம் இருக்கும். தமிழக மீனவர்கள், இழுவை மீன்பிடியை நிறுத்துவதுபற்றி ஆலோசிக்க இணங்கியுள் ளனர். தமிழக மீனவர்களிடம் இதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த தமிழக மக்களிடம் செல்வாக்குப்பெற்ற வை.கோபாலசாமி போன்ற அரசியல் தலைவர்களாலேயே முடியும். அவர்களே இதனைச் செய்யவேண்டும் என கடல்வளம் சார் தமிழக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பாரிய தமிழக இழுவைப் படகுகளாலேயே அதிகளவில் கடல்வளம் அழிக்கப்படுகின்றது.

இந்திய அரசு பாக்நீரிணை மன்னார் வளை குடாவில் சேதுசமுத்திரம் என்ற கப்பல் போக்குவரவு கடல் கால்வாய் திட்டத்தை வைத்துள்ளது.

சேது அணை பாலம் என்ற திட்டத்தில் ஸ்ரீலங்காஅரசும் கலந்திருக்கிறது. சேதுசமுத்திர கடல் கால்வாய் அமைக்கப்படின் கணிசமான அளவு பவளப்பாறையும் கடலுயிர்களும் அழிக்கப்படும். கப்பல்கள் பயணித்தால் அதன் கழிவுகள் கடலில் கலக்கவிடும் எண்ணெய் என்பன கணிசமான அளவு உயிர்களை அழிக்கும்; பவளப்பாறை களைச் சிதைக்கும். கப்பல்களின் இயந்திர அதிர்வு பவளப்பாறைகளை அழிக்கும். இதன்மூலம் யாழ்ப்பாணத் தீவுகள் காணாமற் போகும் என கடல் வள ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இதேபோல் சேதுஅணைப் பாலம் பவளப்பாறைகளை அழிப்பதுடன் கடல் நீரோட்டத்தையும் திசைமாற்றும். இதனால் மேற்குப் பாக்குநீரிணைத் தமிழர் தாயக நிலங்கள் கடலரிப்புக்குள் ளாகும். அத்துடன் கடலுயிர்கள் வளம் குறையும்.

இப்படியாக, தமிழர் தாயகமே இவ் வாண்டு சுற்றுச் சூழல் நாளின் கருப் பொருளாக - சமுத்திரம், கடல் என்பவற்றை மாசுகளிலிருந்து பாதுகாப் பது என்பதனை நடைமுறைப்படுத்த வேண்டிய விழிப்பு நிலையில் உள்ளது.

எங்களின் உயிர்ப்பை நாமே காக்க வேண்டும். நமது கடலைப் பாலையாவதி லிருந்து நாமே மீட்கவேண்டும்.



S.ஸ்ரீகுமரன்

ஈழத்து இலக்கியத்தின் புதுவரவாகிய
போராட்டப் படைப்புக்களைத் தாங்கி வந்த
**வெளிச்சம்** இதழ்கள்
பதின்மூன்று ஆண்டுகளின் தொடர்ச்சியான வருகையில்
**வெளிச்சம்** பதிவு செய்த
போராட்ட கால எழுத்துக்கள்

இன்னும்

**விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் வெளியீடுகள்**

இவற்றுடன்

**திருமதி அடேல் ஆன் அவர்கள் எழுதிய**

**சுதந்திர வேட்கை**

(போராட்ட அனுபவ தொகுப்பு)

**அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் எழுதிய**

**விடுதலை**

(கட்டுரை தொகுப்பு)

எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள

**விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகம்**

**நடுவப்பணியகம்**

# உங்கள் தேவைகள் என்ன?




வாழ்த்து மடல்கள் வடிவமைப்பு,
அழைப்பிதழ்கள் வடிவமைப்பு,
புத்தகங்கள் வடிவமைப்பு,
எந்தத் தேவையாயினும் நாடுங்கள்.

# நிலா பதிப்பகம்





அதி நவீன கணினி
அச்சமைப்பில்
விரைவாகவும்,
நேர்த்தியாகவும்,
அழகாகவும்
செய்துகொள்ள

## நிலா பதிப்பகம்

புகையிரத நிலைய வீதி ... கிளிநொச்சி